

கல்கி
KALKI 21-12-1958
30



ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

L 278-50 TM

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18 இதழ் 21

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பி ஆண்டு மார்கழி 6

இலங்கைக்கு எச்சரிக்கை

பல தலைமுறைகளுக்கு முன் இந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறித் தங்கிவிட்ட பல லட்சக் கணக்கான இலங்கை இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை கொடுக்காமல் இலங்கை சர்க்கார் கொடுமைப் படுத்தி வருகிறது. அந்தக் கொடுமைக்கு மற்றொரு சாப்புக் கொடுத்தாற் போன்றதோர் காரியம் சமீபத்தில் செய்திருக்கிறது.

1954-ம் வருடம் இலங்கை இந்தியர் பிரச்னை மிகக் கடுமையான கட்டத்தை அடைந்தபோது, அப்போது இலங்கைப் பிரதமராக இருந்த ஜான் கொத்தலாவலை அவர்கள் இந்தியாவுடன் எட்டு அம்ச ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டார். அதன்படி இலங்கை முழுதும் சிதறிக் கிடக்கும் பிரஜாவுரிமை பெற்ற இலங்கை இந்தியர்களுக்காக இலங்கை பார்லிமெண்டில் நான்கு ஸ்தானங்கள் ஒதுக்குவது என்பது ஒரு ஷரத்து. அந்த நிபந்தனையை இதுவரையில் அமுல் நடத்தவில்லை. பிரஜாவுரிமைப் பதிவே சரியாகச் செய்யாத போது பார்லிமெண்டில் ஸ்தானம் ஒதுக்கும் விஷயத்துக்கு இடமேது?

ஆனாலும் என்றைக்காவது ஒரு நாள் ஒழுங்காகப் பிரஜாவுரிமை கிடைக்கும், பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற நம்பிக்கையாவது இலங்கை இந்திய மக்கள் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது. இப்போது அந்த இலேசான நம்பிக்கையையும் வேரோடு இலங்கை சர்க்கார் பிடுங்கி எறிந்து விட்டார்கள். இந்திய வம்சாவளியினருக்குத் தனித் தொகுதி ஏற்படுத்தும் எண்ணத்தை ரத்து செய்து விட்டதாக அறிவித்திருக்கிறார்கள்!

இலங்கை சர்க்கார் இந்திய வம்சாவளியினருக்கு இழைக்கும் கொடுமையின் எல்லைக்கே போய்விட்ட இந்தச் சந்தர்ப்பத்தில் சென்ற வாரம் "ஸ்வராஜ்யா" பத்திரிகையில் ராஜாஜி விடுத்துள்ள அறிக்கை இந்திய அரசாங்கத்தையும் இலங்கை அரசாங்கத்தையும் விழித்து எழுந்து உட்காரச் செய்யும்.

"இலங்கையில், உலகில் எந்த நாட்டிலும் நடவாத அநீதி நடைபெற்று வருகிறது. பல ஆண்டுகளாக வாழ்ந்து, தொழில் நடத்தி, குடும்பம் நடத்தி எல்லா வகையாலும் இலங்கை மண்ணுடன் ஒன்றி, வாழ்விலும் தாழ்விலும் அங்கே இருக்க விரும்புவதாகச் சொல்லும் மக்களை, 'இந்தியாவில் உனக்குச் சொத்திருக்கிறது. இந்தியாவுக்கு மூன்று தடவைகள் போய் வந்தாய்' என்றெல்லாம் அற்பக் காரணங்கள் கூறிப் பிரஜாவுரிமை மறுத்து வருகிறது.

"அமெரிக்கப் பிரஜை ஒருவன் கானடாவில் வியாபாரம் வைத்துக் கொண்டால், அமெரிக்க சர்க்கார் அவன் அமெரிக்கப் பிரஜை இல்லை என்று சொல்லிவிடுமா? மெக்ஸிகோவுக்குப் போய் வந்தால் மறுத்து விடுமா?

"ஒரு நாளும் செய்யாது. எனினும் உலகில் இல்லாத விந்தை இலங்கையில் நடைபெற்று வருகிறது. இந்தியாவுக்குப் போவதினாலும் இந்தியாவில் சொத்து இருப்பதினாலும் இலங்கைக்கு என்ன ஆட்சேபணை? இலங்கையும் இந்தியாவும் நேசநாடுகள். மாரிமுத்து அவர்களுடைய வழக்கில் இலங்கை சர்க்காருக்கு விரோதமாகத் தீர்ப்பளித்து இலங்கை உயர் நீதிமன்றம் சர்க்காரின் போக்கை மிகக் கடுமையாகக் கண்டித்து விட்டது. இருப்பினும் தன் மௌடீகப் போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறது.

"இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னை என்று தள்ளிச் சும்மா இருக்கும் காலம் கடந்து விட்டது. மனிதனின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் அநீதியை நடத்துகிறது. இந்த அநீதி உலகப் பிரச்னையே என்று சொல்லலாம். உள்நாட்டுப் பிரச்னையல்ல. உள்நாட்டுப் பிரச்னைகள் வரம்புக்கு மேற்பட்ட அநீதி நிலை எட்டினால் அவை உலகப் பிரச்னைகள் ஆகிவிடுகின்றன!" என்று உறுதியான அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

நோய்க்கு மருந்து

உலகில் வைத்தியர்கள் பலவிதம். அதில் முக்கியமாக மூன்று விதம். சிலருக்கு நோயாளியைப் பார்த்தவுடனேயே என்ன நோய் என்று தெரிந்துவிடும். ஆனால் அதற்கு என்ன வைத்தியம் என்று தெரியாமல் தவிப்பார்கள். இது ஒருவிதம். இன்னும் சில வைத்தியர்கள், நோய் என்ன வென்று புரிந்து கொள்ளாமலே இந்த நோயாக இருக்குமோ அந்த நோயாக இருக்குமோ என்று ஒவ்வொரு நோய்க்குமுள்ள மருந்தாகக் கொடுத்துப் பரீட்சித்து வருவார்கள். இவர்கள் இரண்டாவது வகை.

மூன்றாவது இன்னொரு வகை. அவர்கள் தான் உண்மையான வைத்தியர்கள். இவர்களைப் பற்றிக் குறளாசிரியர் வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நோயை அறிய வேண்டும்; நோயின் மூலகாரணத்தையும் அறிய வேண்டும். அதைத் தணிக்கும் வழியையும் அறிந்து வைத்தியம் செய்பவனே உண்மையான வைத்தியன் என்றார்.

"நோய்நாடி, நோய்முதல் நாடி
அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நமது பாரதப் பிரதமர் நேரு மேற்கூறிய வைத்தியர்களில் முதல் வகையைச் சேர்ந்தவர். அவருக்கு நோயாளியைப் பார்த்தவுடன். நோய் புரிந்து விடும். அதை மிகத் தெளிவாகவும் எடுத்துச் சொல்வார்.

புதுடில்லியில் ஜனநாயகம் பற்றி ஒரு ஆராய்ச்சி அரங்கம் நடைபெற்றது. அதைத் துவக்கி வைத்துப் பேசும் போது இன்று ஜனநாயக உலகத்தில் ஏற்பட்டுள்ள வியாதியைப் பற்றி நேருஜி மிகத் தெளிவாகக் கூறினார்.

"இன்றைய உலகில் ஒரு விந்தையைக் காண்கிறேன். பல நாடுகளில் நன்கு வளர்ந்த ஜனநாயக நாடுகளில்கூட மக்கள் தங்கள் வாழ்க்கையின் பற்றுக்கோல் இழந்து விட்டதாகத் தோன்றுகிறது. அவர்கள் சிந்தனையில் ஒரு சூன்யம் ஏற்பட்டிருக்கிறது. எங்கே போகிறோம், என்ன செய்கிறோம் என்ற நினைவில்லாமல் வானத்தில் மிதப்பது போல் நடந்து செல்கிறார்கள் ஒரு லட்சியமற்ற வாழ்க்கை வாழ்கிறார்கள்."

"இந்த நிலை சுபிட்சமான வாழ்க்கை நடத்தும் நாடுகளில்தான். இவ்வளவு சுபிட்சம் இருந்தும் அவர்கள் ஏதோ ஒரு சந்தேகத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். நிச்சயமற்ற நிலையில் இருக்கிறார்கள். திடீரென்று ஏதோ பேராபத்து தங்களுக்கு விளைந்துவிடப் போகிறது என்ற பயம் அவர்கள் உள்ளத்தைப் பற்றியிருக்கிறது. இந்தப் பீதியுணர்ச்சி நாளுக்கு நாள் வளர்கிறது. அதனால் 'நாம் இன்று பற்றியோ நாளை பற்றியோ கவலைப்படுவானேன்? இருக்கிற வரைக்கும் சந்தோஷமாக வாழ்ந்துவிடுவோம்' என்று கேளிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்."

"இது ரொம்பவும் விசித்திர நிலை. இந்நிலை இன்னும் இந்தியாவுக்கு அவ்வளவாக ஏற்படவில்லை. ரொம்பவும் முன்னேற்றம் அடைந்த நாடுகளில் இந்நிலை. அத்தேசங்களில் உள்ள இளைஞர்கள் அரசியலுக்கு வருவது நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா மற்ற முன்னேற்றமடைந்த நாடுகளிலும் சரி, இன்று இளைஞர்கள் அரசியலில் சிரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் வேதாந்திகளாகி விட்டார்களோ என்று எண்ண வேண்டியதில்லை. அவர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. அதனால் தான் இந்நிலை!" என்று பேசியிருக்கிறார்.

மேற்கூறிய பகுதியைப் படிக்கும் போது நேருஜி வியாதியை நன்கு கண்டு சொல்லி விட்டார் என்று திருப்தி அடைகிறோம்.

மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோயை வெகு கச்சிதமாகச் சொல்லி விட்டார் என்று பாராட்டுகிறோம்.

அந்த நோய்க்கு அவர் கூறும் காரணமும் (நோய் முதலும்) அது தணிக்கும் செயலும் தான் சரியாக இல்லை.

இதற்குச் சமீபத்தில் ஏற்பட்ட உலக யுத்தமும், அழிவும், விரோத மனப்பான்மையுமே காரணமாக இருக்கலாம் என்கிறார். யுத்தங்களால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக இருக்கலாம் என்கிறார்.

ஆனால் உண்மையில், இதற்குக் காரணம் "முன்னேற்றம்" என்ற பெயரில் அந்நாடுகளில் நிகழ்ந்தவை தான். 'பௌதிகமே உண்மை; அதற்கு அப்பாற்பட்டது ஒன்றுமில்லை' என்ற இயக்கம் தோன்றி மக்களின் தார்மிக உணர்ச்சியை அழித்ததனால் அவர்கள் வாழ்க்கையில் பற்றற்றவர்களாகிச் சீரழிந்து வருகிறார்கள். விஞ்ஞான அறிவு வளர்ந்து அநீதியான முறையில் ஜப்பான் மக்கள் மீது அணுகுண்டு போட்ட பாவமே, பின்னால் எப்படி விளையுமோ என்ற பீதியை உண்டாக்கியிருக்கிறது. ஆத்மாவை அழித்திருக்கிறது.

நல்லவேளையாக, பாரத நாட்டில் தார்மீக உணர்ச்சியும், கடவுள் பக்தியும், சென்ற நூற்றைம்பது வருஷ அடிமை வாழ்வினால் கூடக் குன்றிவிடவில்லை. வாழ்க்கை நலன்கள் அழிந்தாலும் ஆத்மா காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், ராமலிங்க சுவாமிகள் இப்படிப் பலப்பல பெரியோர்கள் நமது ஆத்மீகச் செல்வத்தைப் பாதுகாத்து அளித்து வந்தார்கள்.

நம் நாட்களில் மகாத்மா காந்தி அரசியலில் எவ்வளவு உழன்றாலும் காலையிலும் மாலையிலும் ஈசனை மறக்கவில்லை. எச்செயல் செய்தாலும் ஈசன் கட்டளை எனச் செய்தார். 'சுதந்திரத்தைவிட ஆண்டவனின் ஆணையே பெரிது' என்று கருதித் தமது ஆத்மாவின் குரலுக்குச் செவி கொடுத்தார்.

இதையெல்லாம் இன்று மறந்து மேற்கத்திய நாடுகள் சென்ற போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறோம். அவர்கள் போகும் பாதையில் முட்டிக் கொண்டு வழி தெரியாமல் திண்டாடுகிறார்கள் என்று தெரிந்து கொண்டே, அதைச் சொல்லிக் கொண்டே நாமும் அதே பாதையில் போகிறோம்!

மின்சார உற்பத்தி செய்யும் யந்திரமும், எஃகு உற்பத்திச்சாலையுமே நமது இன்றையத் தேவாலயங்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். பாரத நாட்டில் மனிதன் எவ்வளவு வறுமையிலிருந்தாலும், எவ்வளவு உன்னத நிலையிலிருந்தாலும் அவன் உள்ளத்துள் அமைதியைக் காணும் பேறு பெற்றிருந்தான். அது நமது முன்னோர் அளித்த செல்வம். 'நவீன தேவாலயங்கள்' நமக்கு உணவும் உடையும், மற்ற வசதிகளும் கொடுத்து விட்டு, உள்ளத்தின் நிறைவைப் பறித்து விடும். அப்படிப் பறிக்காமல் இருக்க மகாத்மா காந்தியைப் போல் இன்றைய யுகத்துக்கு மற்றொரு மகாத்மா தேவை,

கபீரும் கண்ணனும்

இந்திய மந்திரி திரு. ஹுமாயூன் கபீர் பாவம், சமீபத்தில் பெரும் கண்டனத்துக்கு ஆளானார். அவர் அலிகார் சர்வகலாசாலையில் பட்டமளிப்புப் பிரசங்கம் செய்யச் சென்றார். அவர் அங்கு என்ன பேசினார் என்று தெரிவிப்பதற்கு முன்னால் அலிகார் சர்வகலாசாலையைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அது ஒரு முஸ்லிம் சர்வகலாசாலை. தீவிர முஸ்லிம்கள் இருக்கும் இடம். இந்தியா பிளவுபடுவதற்கு முன் முஸ்லிம் லீக் கட்சியின் மிகுந்த செல்வாக்கு பெற்ற இடமாக இருந்தது. அங்கு இந்து முஸ்லிம் ஐக்கியத்தை வற்புறுத்திப் பேசச் சென்றார் ஹுமாயூன் கபீர

அப்படிப் பேசும் எண்ணத்துடன் துவங்கியவர் "ஹிந்து தெய்வமான கிருஷ்ணன் பாரத நாட்டின் பூர்வவாசிகளின் தெய்வம். அதை ஹிந்துக்கள் தங்கள் தெய்வமாக ஆக்கிக் கொண்டார்கள். ஹிந்துக்களிடம் பிற சமயங்களில் உள்ள நல்ல விஷயங்களை யெல்லாம் ஏற்றுக் கொள்ளும் பண்பிருக்கிறது. முஸ்லிம்களில் இப்பண்பைக் காணோம். ஹிந்துக்களைப் பார்த்தாகிலும் இப்பண்பை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்று கருத்துப்படச் சொன்னார். நம்மில் சிலர் "ஹுமாயூன் கபீர் கிருஷ்ண பரமாத்மாவைக் காட்டுமிராண்டிகளின் தெய்வம்" என்று சொல்லி விட்டார் என்று கோபப்பட்டுப் பத்திரிகைகளில் பலத்த சண்டையைக் கிளப்பினார்கள்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு இந்தியாவிலிருந்த பூர்வகுடிகள் கிருஷ்ணன் என்ற கரிய நிறமுடைய தெய்வத்தை வணங்கி வந்தார்கள் என்று ஒரு ஆராய்ச்சிக் கொள்கையுண்டு. அது எவ்வளவு உண்மையோ இல்லையோ! ஆயினும், அதை ஒரு உதாரணமாக வைத்துக்கொண்டு தாம் சொல்லவந்த விஷயத்தை விளக்கினார். பரந்த மனப்பான்மை முஸ்லிம் மக்களும் கொள்ள வேண்டும் என்பதை முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தும் ஒரு பணியை மேற்கொண்டார். இது முஸ்லிம் மக்களுக்கு இன்றுள்ள சூழ்நிலையில் அறிவுறுத்த வேண்டிய விஷயம்.

வெண்மையையே ஆணுக்கும் பெண்ணுக்கும் அழகு என்று முன்னாட்களிலும் இந்நாட்களிலும் மதித்து வரும் ஒரு மக்கட் சமுதாயம் ஏன் மகாவிஷ்ணுவையும் அவன் அவதாரமான ராமனையும் கிருஷ்ணனையும் கறுப்பாக வைத்துப் பூஜிக்கிறார்கள்? இந்தப் பிரச்னையை ஹுமாயூன் கபீர் அவர்கள் எடுத்துக்கொண்டு ஒரு நல்ல சமாதானம் தந்தார். ஈசனுக்கு நிறம் என்பது கிடையாது. நிறமற்ற ஒரு பொருளை வெண்மையாகவும் வைத்து நீலமாகவும் வைத்து, பச்சையாகவும் வைத்துப் பலவாறான பூஜை முறைகளை அமைத்துத் தந்த நம்முடைய முன்னோர்களின் மனப்பான்மையை நாம் போற்ற வேண்டும். ஹுமாயூன் கபீர் அவர்களும், இதைத்தான் வேறு விதமாகச் சொன்னார். சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுடைய போக்கில் சென்று நம்முடைய கண்ணனுடைய கார் நிறத்தைச் சமாளித்துப் பார்க்க முயன்றார். அவ்வளவுதான்!

டிசம்பர் விழா!

மாதங்களில் சிறந்தது மார்கழி என்று பகவத்கீதை படித்தவர்கள் சொல்லுவார்கள். ஆனால் "மாதங்களில் சிறந்தது டிசம்பர் மாத மாகும். ஏனெனில் பகவானே வைகுண்டத்தை விட்டு விட்டு இந்த மாதத்தில் சென்னைக்கல்லவா வந்து விடுகிறார்!" என்று குதூகலத்துடன் அடித்துச் சொல்லுவார்கள் சங்கீத ரஸிகர்கள்.



திரு ஜி. என். பி.

ஆமாம்! அவர்கள் சொல்லுவது வாஸ்தவம். சங்கீதம் கேட்டு அனுபவிக்க வேண்டுமானால் சென்னையில்தான் கேட்க வேண்டும். அதுவும் டிசம்பர் 'ஸீஸனி'ல் கேட்க வேண்டும் என்று பிரசித்தி பெற்றது இந்த மாதம். தமிழ் நாட்டிலிருந்து சங்கீதம் கேட்பதற்காகவே சென்னைக்கு இந்த ஸீஸனுக்கு வருபவர்களின் எண்ணிக்கை கணக்கற்றது. தொழில் நிமித்தம் வட இந்தியாவிலுள்ள பல ரசிகர்கள்கூட இந்தச் சமயத்தில் சென்னைக்கு விஜயம் செய்வது சாதாரணச் சம்பவங்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு டிசம்பர் கடைசியில் சென்னையில் அவசரமான வேலைகள் எதேச்சையாக வந்து குவியும்! தாங்களே சென்னைக்கு நேரில் சென்று தீர்க்க வேண்டிய அவசரப் பிரச்னைகள் ஒன்றையொன்று நெட்டித் தள்ளிக்கொண்டு முன்னே வந்து நிற்கும்!

வெளியூர்களில் இருப்பவர்களின் உற்சாகம் இப்படி என்றால் உள்ளூரில் இருப்பவர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? எல்லாம் கர்நாடக சங்கீதத்தின் கவர்ச்சி அப்படி. இசை விழாக்களின் மகாத்மியம்!

சென்ற வருஷத்துக்கு இந்த வருஷம் சங்கீத சபைகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. தமாஷா வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்து சங்கீதம் வளர்ச்சியடைந்து அமோகமாக மக்களிடையே பரவிவிட்டது பேட்டைக்குப்பேட்டை சங்கீத சபை, நாடகக் குழு, பரத நாட்டியப் பள்ளிக்கூடம், ரசிகர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

அவர்களுக்கெல்லாம்காணும் குதம் மற்ற வருஷங்களைப் போலவே இவ் வருஷமும் வருஷிக்கப் போகிறது. சங்கீதக் கலையைப் போஷித்து வரும் ஸ்தாபனங்களெல்லாம் விழாவை விரிவாகக் கொண்டாடுகின்றன. சென்னை வித்வத் சபைக்கு இந்த வருஷம் பிரபல சங்கீத வித்வான் திரு ஜி. என். பாலசுப்பிரமணியம் தலைமை வகிக்கிறார். இவர் சங்கீத உலகில் மின்னும் நக்ஷத்திரம்போல்பிரகாசிப்பவர். 'ஜி.என்.பி. பாணி' என்று பலர் இவர் பாணியைக் காப்பியடிக்கும் அளவுக்குப் பல வருஷங்களுக்கு முன்பே பிரபல மடைந்தவர். கச்சேரி செய்வது மட்டுமின்றி சாஹித்ய முமியற்றி சினிமா, ரேடியோத் துறையிலும் அனுபவம் பெற்று இசை நயங்களைப் பற்றி ஆங்கிலத்திலும் பேசும் திறமை வாய்ந்தவர். சங்கீத வித்வான்களில் ஆங்கிலப் பட்டம் பெற்றவர்கள் மிகச் சிலரே. அந்தச் சிறு கோஷ்டியில் முதலிடம் பெற்றவர் இவர். எனவே இவ் வருஷத்திய வித்வத் சபை பிரசங்கமும் சர்ச்சைகளும் விசேஷமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தேசிகர்

தமிழ் இசைச் சங்க விழாவுக்கு மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய சுவாமிகள் தலைமை வகித்துச் சிறப்பிக்கிறார். தமிழிசை வளர்ச்சிக்குத் தென்னாட்டு ஆதீனங்கள் அளித்துள்ள ஆதரவு தனியிடம் பெற்றது. தமிழ்ப் பண் ஆராய்ச்சிகள் கலையிருந்து விளங்குவதற்கும், அவை பயனுள்ளதாக அமைவதற்கும் ஆதீனத் தலைவரின் ஒத்துழைப்பு மிகவும் உதவும்.

இவற்றைத்தவிர, இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் விழா—வைச் சங்கீத கலாநிதி டி. சௌடய்யாவே தலைமை தாங்கி நடத்துகிறார். பல ஆண்டுகளுக்கு முன் அவருடைய முயற்சியினாலே ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வரும் இந்தச் சங்கத்துக்கு அதன் ஸ்தாபகரே இந்த வருஷம் தலைமை தாங்குவது விசேஷம்.

ஒவ்வொரு விழாவிலும் ஏற்பாடாகி யிருக்கும் கச்சேரிகளும் விரிவாகவே இருக்கின்றன. பழம் வித்வான்கள் பலரும் அவரவர்களுக்கு உரித்தான மாலை வேளைக் கச்சேரிகளுடன் பல இளம் வித்வான்களும், இளம் வித்வான்கள் என்று கருதப்படும் முதிர்ந்த வித்வான்களும் எல்லா விழாக்களிலும் இசை விருந்தளிக்கிறார்கள்.

பாட்டு மட்டுந்தானே என்று கேட்க வேண்டாம்! பரத நாட்டியம், கதக் நடனம், நாதசுரம், கிளாரினெட் என்று பலவகை இசை விருந்துகள் கண்ணுக்கும் காதுக்கும் மனத்துக்கும் ஒன்றோடொன்று போட்டி யிட்டு வழங்கப்படுகின்றன.

எல்லாம் ரசிகப் பெருமக்கள் குதூகலத்துடன் அனுபவிக்க ஏற்ற நிகழ்ச்சிகள்.

ஓவியர் மணியம் இந்த விழாவை முன்னிட்டு வரைந்திருக்கும் கலைச் சித்திரத்தை வெளியிட்டுக் கல்கியும் சங்கீத விழாவில் பெருமையுடன் பங்கு கொள்கிறது.

பத்திரிகைத் தொழில் கண்காட்சி



"பொது மக்களின் பிரதிநிதி" "ஜனநாயகத்தின் ஆணி வேர்" என்று உயர்ந்த ஸ்தானம் வகிக்கும் இந்தியப் பத்திரிகைகளின் வளர்ச்சி ஆச்சரியகரமானது. நமது பாரதம் சுதந்திரம் பெற்ற கதை உலக சரித்திரத்திலேயே எப்படித் தனியிடம் பெற்றுள்ளதோ, அதே போன்று நமது பத்திரிகைத் தொழில் அபிவிருத்தியும் தனியிடம் பெறத் தகுதி வாய்ந்தது. நாட்டுச் சுதந்திரத்தைப் போராடிப் பெற்றதுபோல், பத்திரிகைச் சுதந்திரமும் நீடித்த போராட்டத்துக்குப் பின்னர்தான் படிப்படியாகச் சிறுகச்சிறுகக் கிடைத்து இப்போதுள்ள நிலைமையை அடைந்திருக்கிறது.

இந்த இருநூறு ஆண்டு காலத்தில் பத்திரிகைகள் வளர்ச்சியைப் பற்றியும் தற்போது அவைகள் என்ன ஸ்தானம் வகிக்கின்றன என்பதையும் பொது ஜனங்களுக்கும் விளம்பர ஸ்தாபனங்களுக்கும், உற்பத்தி ஸ்தாபனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் எடுத்துக் காட்டப் பம்பாயில் ஒரு கண்காட்சி சென்ற 12-ம் தேதி ஏ. பி. ஸி. ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டது.

இதென்ன ஏ. பி. ஸி. என்கிறீர்களா? பத்திரிகைகள் தினசரியாகட்டும், வார, மாதப் பத்திரிகைகளாகட்டும், எவ்வளவு பிரதிகள் விநியோகமாகின்றன என்பதைக் கணக்கிட்டு அதிகாரபூர்வமாக சர்டிபிகேட் கொடுக்கும் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் இது. 'ஆடிட் பீரோ ஆப் ஸர்குலேஷன்' (Audit Bureau of Circulation) என்று பெயர். பெயருக்கேற்பத்தான் நடவடிக்கையும். பத்திரிகை வளர்ச்சியில், வாசகர்கள், பொதுமக்கள் தவிர, அக்கறையுடையவர்கள் விளம்பரதாரர்களும், விளம்பர ஸ்தாபனங்களும். இந்த இரண்டு பிரிவினரும் பத்திரிகைகளும் சேர்ந்து ஆரம்பித்தது இந்த ஏ. பி. ஸி. ஸ்தாபனம். ஆடிட் பீரோ ஆப் சர்க்குலேஷன் ஸ்தாபனம் பத்திரிகைகள் விநியோகத்தைப் பற்றி அளிக்கும் அத்தாட்சி அதிகாரபூர்வமானது. எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடியது. பத்திரிகையின் செல்வாக்கையும் ஸ்தானத்தையும் ஓரளவுக்கு இந்த சர்டிபிகேட்டுகள் மூலம் எடுத்துச் சொல்வது இந்த ஸ்தாபனம். 1948-ம் ஆண்டில் 11 அங்கத்தினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இதில் இப்போது 300 அங்கத்தினர்கள் இருக்கின்றனர்

மத்திய சர்க்கார் நிதிமந்திரி திரு மொரார்ஜி தேஸாய் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், "மக்களின் கல்வி மேன்மேலும் அபிவிருத்தியடைந்து வாழ்க்கைத்தரமும் பொருளாதாரமும் முன்னேறிக் கொண்டு வருவதால் பத்திரிகைகளின் விநியோகமும் இன்னும் உயர வேண்டும். அதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன" என்பதைச் சுட்டிக் காட்டினார். சந்தேகம் விளைவிக்கக் கூடியதும், போலிச் சாமான்களை அறிமுகப் படுத்துவதும் போன்ற விளம்பரங்கள் மூலம் மக்கள் ஏமாற்றமடையக் கூடுமாதலால் அவ்வித விளம்பரங்கள் விஷயத்தில் கவனம் செலுத்தினால் நல்லது என்பதையும் எடுத்துரைத்தார்.

கண்காட்சிக்கு ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள். பல பத்திரிகைகள் கண்காட்சியில் கலந்து கொண்டன. தமிழ் நாட்டின் பேராதரவு பெற்ற உங்களுடைய சொந்தப் பத்திரிகை 'கல்கி' இக் காட்சியில் பங்கெடுத்துக் கொள்ளவில்லையென்றால் தமிழகத்துக்குக் குறைவல்லவா? நீங்களும் அதை விரும்ப மாட்டீர்களல்லவா? ஆகவே கல்கியும் கலந்து கொண்டது.

கனம் மொரார்ஜி தேஸாய் 'கல்கி' ஸ்டாலைப் பார்வையிட்டு அதன் சேவையைப் பாராட்டிப் பேசிய போது எடுத்த படம் மேலே பிரசுரிக்கப்பட்டுள்ளது. கல்கி விளம்பர இலாகா மானேஜர் திரு வி. வைத்தியநாதனும் 'கல்கி' பம்பாய்ப் பிரதிநிதி திரு ஆர். கண்ணனும் நிதி மந்திரி அவர்களை வரவேற்று உபசரித்தனர்.

எமது தமிழ் வெளியீடுகள்

		விலை	தபால் கூலி
மஹாத்மா காந்தி (போட்டோ ஆல்பம்)	...	10·00	1·75
மக்களின் திட்டம்	...	2·00	0·40
எஸ்டேட் வரி - வெகுஜன வெளியீடு	...	1·25	0·35
பாரத நாட்டுக் கிராமியக் கதைகள்	...	1·00	0·25
வனம் தரும் திட்டங்கள்	...	0·75	0·20
தீ. ஜாக்கிரதை	...	0·75	0·20
சாதனைகளும் இலட்சியங்களும்	...	0·60	0·25
ஆதிவாசிகள்	...	0·50	0·25
கிராமத்தில் புது வாழ்வு (ரேடியோ உரைகள்)		0·35	0·15
பஞ்ச சீலம்	...	0·25	0·15
தசாம்ச நாணய முறை	...	0·25	0·15
தீண்டாமை ஒழிப்பு	...	0·25	0·15
சமதர்மப் பாதை (ரேடியோ உரைகள்)	...	0·25	0·15
பாரதப் பண்பாடு	...	0·20	0·15
ஆதாரக் கல்வி: வினா - விடைகள்	...	0·20	0·15
மதுவிலக்கு: வினா - விடைகள்	...	0·10	0·08
திட்டத்தின் அடிப்படை (பிரதம மந்திரி உரைகள்)		0·10	0·08
ஜனநாயக அரசாங்க ஊழியர்	...	0·06	0·08
நாட்டின் நரம்புகள்	...	0·10	0·08
பூதேவியின் புது வளம்	...	0·10	0·08
பாசனமும் மின்சாரமும்	...	0·10	0·08
ஒப்பு இலாத சமுதாயம்	...	0·10	0·08
தொழில் வளம்	...	0·10	0·08
சுபிட்சத் திட்டங்கள்	...	0·10	0·08
நோயற்ற வாழ்வு	...	0·25	0·08
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்: வினா - விடைகள்	...	0·40	0·14

ரெஜிஸ்டர் செலவு தனி

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

இந்திய சர்க்கார்

தபால் பெட்டி நெ. 2011 :: டில்லி-8

DA58/168

அருள் வாக்கு

ஸ்ரீ சங்கராச்சாரியார் - காஞ்சிகாமகோடிபீடம்

இராமாயணம், பாகவதம் போன்ற தர்ம நூல்களும், வான சாஸ்திரம், கணித சாஸ்திரம், ஜோதிஷ சாஸ்திரம், மிருக சாஸ்திரம் போன்ற இதர நூல்களும் பதினெட்டுப் புராணங்கள், பாரதப் போன்ற விரிவான நூல்களும் நம்மிடையே இருக்கின்றன. காணாததையெல்லாம் காணலாம் கந்த புராணத்திலே என்று பேச்சுவழக்கில்கூடச் சொல்வதுண்டு. ஆனால் இவற்றைப் பற்றிக் குறைவாகவே கருதப்படுகிறது. முக்கிய காரணம் அங்கே வரும் கதைகள் தற்கால அறிவுக்கும் சிந்தனைக்கும் முரணானவை போல் தோன்றுவதுதான். அவைகளின் உட்கருத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தால் அவற்றினிடம் கௌரவப் புத்தி உண்டாகும்.

புராணக் கதைகளில் பனைமர உயரத்துக்கு ஒரு மனிதன் இருந்தான். பத்துத் தலை மனிதன், எட்டுத் தலை மனிதன் என்றெல்லாம் கதாபாத்திரங்கள் வரும். இதனுடைய கருத்து நல்ல காரியம் செய்ததால் என்ன நன்மை உண்டாயிற்று என்பதையும், கெட்ட காரியம் செய்ததால் என்னென்ன கஷ்டங்கள் உண்டாயிற்று என்பதையும் விளக்குவதாகும். நல்லது, கெட்டது இரண்டையும் மனத்தில் நிற்கும்படி எடுத்துச் சொல்வதற்காகப் புராணக் கதைகளில் இம்மாதிரிச் சொல்லப்பட்டனவே தவிர ஏதோ பத்துத் தலை மனிதனைப் பற்றியோ, பனைமர உயரமுள்ள மனிதனைப் பற்றியோ சொல்ல வேண்டும் என்பதல்ல. மனிதர்கள் நல்ல குணமுள்ளவர்களாக ஆகவேண்டும் என்பதற்காக ஏற்பட்டவை புராணங்கள்.

பனைமர உயரமுள்ள ஒருவன் இருந்தான், எட்டுக் கைகளுள்ள மனிதன் இருந்தான் என்பது நிஜமா, பொய்யா என்று யோசிக்கலாம். பத்திரிகைகளிலே வருகிற செய்திகளைப் பார்த்துக்கொண்டே வரும்போது அதில் காணப்படும் வர்ணனைகள் சில புராணக் கதைகளையும் மிஞ்சி விடுகின்றன.

அனேக அடி உயரமுள்ள ஒரு மனிதனுடைய எலும்புக் கூடு பூமிக்கடியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டதென்றும், அது பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பு பூமிக்கடியில் புதையுண்டிருக்க வேண்டும் என்றும் செய்தி வருகிறது. இலங்கையில் மூன்று தலைகளோடு ஒரு தாய்க்குக் குழந்தை பிறந்ததாகவும், இன்னொரு தாய்க்குப் பாம்புக் குழந்தை பிறந்ததாகவும் படிக்கிறோம். ஆர்க்டிக் பிரதேசத்தில் பனிக்கட்டியைப் பிளந்தெடுத்தால் அதில் பல பிராணிகளின் உடல்கள் காணப்படும் என்றும், இப்போது இருக்கும் யானையின் உருவத்தைக் காட்டிலும் பன்மடங்கு பெரிதான மிருகங்களின் உடற்கூடுகள் அதில் கிடைத்துள்ளன என்றும் நவீன விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இது புராணக் கதைகளையும் மிஞ்சித்தான் போயிருக்கிறது.

அதனால் நமக்குத் தெரியாததையெல்லாம் புளுகு என்று வைத்துக்கொண்டு கதைக்காக எழுதப்பட்டவை புராணங்கள் என்று சொல்வது சரியன்று. புளுகைச் சொல்ல வேண்டும் என்பதற்காக அவை எழுதப்படவில்லை. எதற்காகப் புளுகைப் புகுத்த வேண்டும்? அவர்களுக்கு அதனால் என்ன பயன்? ஜனங்களை நல்வழிப்படுத்துவதற்காக ஏற்பட்டவை அவை. புராணங்கள் சொல்வதையெல்லாம் நிஜமாக்குகின்றன விஞ்ஞான ஆராய்ச்சி கொண்டுவரும் செய்திகள். ஆகவே, நமக்குத் தெரியாது என்பதற்காகப் புராணங்களைப் புளுகு என்று சொல்லக் கூடாது. நமக்குத் தெரியவில்லையென்றால் நமக்குப் புத்தி அவ்வளவுதான் என்று அர்த்தம்

இரண்டு மூன்று வருஷங்களுக்கொருதரம் யாராவது ஐந்து அல்லது ஆறு வயதுடைய பையனொருவன் தன்னுடைய பூர்வ ஜென்ம விருத்தாந்தத்தைப்பற்றிச் சொல்லியதாகச் செய்திகள் பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் இதுபோன்று எத்தனையோ புராணத்தில் இருந்ததைப் பிரத்தியட்சமாகப் பத்திரிகையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது புராணக் கதைகள் வெறும் புளுகுக் கதைகளாக இருக்க முடியாது என்றே எண்ணவேண்டியிருக்கிறது. இம்மாதிரி கிரந்தங்களையெல்லாம் படிப்பதற்கும், அர்த்தம் சொல்வதற்கும் இனி மனிதர்கள் இருப்பார்களோ என்ற சந்தேகம் வருகிறது. ஏனென்றால் சம்ஸ்கிருத பாஷை அறிவு அவ்வளவு குன்றி வருகிறது. அதைப் படிப்பதற்குப் பையன்களுக்கு ஊக்கம் இல்லை.

கிறிஸ்துமஸ் கோலாகலம்

உலகெங்கும் பிரதி வருடமும் டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகையை மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடுகிறார்கள். டிஸம்பர் 24-ம் தேதியான கிறிஸ்துமஸ் தினத்தன்று, தங்களுக்குள் இருக்கும் பகைமையைக் கூட மறந்து எல்லா நாட்டவரும் ஒன்றுபடுகின்றனர். பொறாமையும் குரோதமும் கிறிஸ்துமஸ் தினத்தன்று எல்லோர் மனத்திலிருந்தும் மறைந்து விடுகின்றன. உலகெங்கும் மிக்க குதூகலத்துடன் கொண்டாடும் இந்தப் பண்டிகைக்காக ஒருவருக்கொருவர் அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொள்வது யாவரும் அறிந்ததே. இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டது என்று சற்று ஆராய்வோம்.

நிகோலஸ் என்ற பாதிரி ஒருவர் கி. பி. நான்காவது நூற்றாண்டில் ஹங்கேரி தேசத்தில் வசித்து வந்தார். மிகவும் தயாள குணமுடைய அவர் தினந்தோறும் ஒருவருக்கும் தெரியாமல் ஏழை எளியோர்களின் வீடுகளுக்கு நள்ளிரவில் சென்று அவரவர்கள் நிலைமைக்குத் தகுந்தவாறு பொற்காசுகளை அவர்கள் வீட்டு வாசலில் வைத்து விட்டு வந்து விடுவார். காலையில் அந்த வீட்டுக்காரர்கள் கதவைத் திறந்தவுடன் வாசலில் இருக்கும் பொற்காசுகளைக் கண்டு ஆச்சர்யப்பட்டு மனமகிழ்வார்கள். அப்பொற்காசுகளைத் தங்கள் வீட்டில் வைத்து விட்டுப் போனது யார் என்பது அவர்களுக்கே தெரியாது. நிகோலஸ் இறந்தபின்புதான் தெரிய வந்தது. அது முதல் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காகத் தங்கள் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு அன்பளிப்பையும் நிகோலஸ் பாதிரியாரே நண்பர்கள் உருவத்தில் வந்து கொடுத்து விட்டுப் போவதாகத் திடமாக நம்புகிறார்கள்.

குழந்தைகளுக்குப் பெரியவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையன்று அன்பளிப்புகள் வழங்குவது தொன்றுதொட்டு கடைப்பிடித்து வரும் ஒரு வழக்கம். மேல்நாட்டு அரசர்கள் கி. பி. பதினோரும் நூற்றூண்டுக்கு முன்புகூட ஒருவருக்கொருவர் கிறிஸ்துமஸ் அன்பளிப்புகள் பரிமாறிக் கொண்டு இருந்திருக்கின்றனர்.

முதல் எட்வர்ட் என்ற இங்கிலாந்து தேசத்து அரசருக்குப் பிரான்ஸ் தேசத்து அரசன் ஒருவன் ஒரு யானையைக் கிறிஸ்துமஸ் பரிசாக அளித்தானாம். அதுவரை யானையையே பார்த்திராத இங்கிலாந்து



தேசத்து மக்கள் அந்தப் பெரிய மிருகத்தைத் தினந்தோறும் கூட்டம் கூட்டமாகச் சென்று வேடிக்கை பார்த்தனராம்! அந்த யானை வசிப்பதற்காக ஐம்பது அடி நீளமும், இருபத்தைந்து அடி அகலமும் கொண்ட ஒரு கட்டடம் கட்டப்பட்டதாம். ஜேம்ஸ் என்ற மற்றொரு அரசர் காலத்தில் ஸ்பெயின் தேசத்து அரசன் ஐந்து ஒட்டகங்களையும் ஒரு யானையையும் தனது கிறிஸ்துமஸ் பரிசாக இங்கிலாந்துக்கு அனுப்பினானும். 'இந்தப் பரிசுகளின் விலை மதிப்பைவிட இவற்றைப் பரிபாலித்துப் போஷிப்பதற்கு அரசாங்கம் அதிகம் செலவழிக்க வேண்டி இருப்பதாக அரசாங்க மந்திரிகள் அரசனிடம் முறையிட்டார்கள். உடனே ஜேம்ஸ், அப் பரிசுகளைத் தமது சொந்தச் செலவில் பரிபாலனம் செய்யும்படி உத்தரவிட்டார். அந்த யானையும் ஒட்டகங்களும் அரசருடைய மேற்பார்வையில் ராஜபோகமாக வாழ்ந்து வந்தன. அரசர் உண்ணும் உணவே அந்தப் பிராணிகளுக்கும் கொடுக்கப்பட்டது. தண்ணீருக்குப் பதில் ஒயினையே அப்பிராணிகள் உட்கொண்டன!

பிரிட்டிஷாரின் புராதனக் குடிகளான 'நார்மன்' காலத்தில்கூடக் கிறிஸ்துமஸ் பண்டிகை விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் கிறிஸ்துமஸ் பரிசுகளில் மயில் முக்கிய அங்கம் வகித்திருக்கிறது. பிற்காலத்தில் இரண்டாவது எட்வர்ட் என்ற அரசருக்கு இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட மயில்கள் பரிசாக அளிக்கப்பட்டனவாம்!

மற்ற நாடுகளைவிட இங்கிலாந்து தேசத்தில்தான் கிறிஸ்துமஸ் பண்டிகையை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்துமஸ் தினத்துக்கு முந்திய தினம் அதாவது டிசம்பர் 23-ம் தேதியன்று இரவில் இங்கிலாந்து தேசத்தி லுள்ள சிறுவர்கள் தங்கள் படுக்கையருகில், புதிய சட்டை, துணிமணிகள் மற்றும் விளையாட்டுச் சாமான்களை ஒரு பையில் வைத்து விட்டுப் படுக்கைக்குச் செல்வர். கிறிஸ்துமஸ் தினத்தன்று அதிகாலையில் எழுந்தவுடன் அந்தப் பையை வணங்கி விட்டு அதிலுள்ள பொருள்களை எடுத்துக் கொள்கிறார்கள். இதன் நோக்கம் என்னவென்றால், நிகோலஸ் என்ற பாதிரி நள்ளிரவில் வந்து அப் பொருள்களைக் கிறிஸ்துமஸ் பரிசாக வழங்குகிறார் என்பதுதான்.



எஸ்.வேதாந்தம்

கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டத்தில் கிறிஸ்துமஸ் மரம் முக்கிய அங்கம் வகிக்கிறது. ஒரு சிறிய மரத்தை வேருடன் பிடுங்கி அதை வீட்டு வாசலில் நட்டு அந்த மரத்தில் வர்ண மின்சார விளக்குகளைப் பொருத்தி வெள்ளி ஜிகினா காகிதங்களை அதன் கிளைகளில் சுற்றி ஒவ்வொரு கிளையிலும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு உபயோகப்படுத்த இருக்கும் ஆடைகளையும் மற்றும் விளையாட்டுச் சாமான்களையும் கட்டிச் சிறிது நேரம் தொங்க விடுவார்கள். இந்த வழக்கம் கி. பி. 17-வது நூற்றாண்டில் ஜெர்மனியில் ஆரம்பித்ததாகத் தெரிகிறது. 1829 வருஷத்தில்தான் இந்த வழக்கம் 'லீவன்' என்ற ஜெர்மன் அரசியால் இங்கிலாந்துக்கும் பரவியது.

தற்காலத்தில் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக் கார்டுகள் கூடப் பதினெட்டாவது நூற்றாண்டில்ஏற்பட்டவைதான். அந்தக் காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் தாம்ஸன் என்ற ஓவியர் தம் கிறிஸ்துமஸ் வாழ்த்தை முதன் முதலாக ஒரு ஓவியம் மூலம் இங்கிலாந்து தேசத்து அரசருக்கு அனுப்பினராம். அதைக் கண்டு வியந்த

அரசர் அதைப் போல் பல ஓவியங்களைப் பல அரசர்களுக்குத் தம்முடைய வாழ்த்தாக அந்த ஓவியரைக் கொண்டு எழுதச் சொன்னார். நாளடைவில் எல்லா ஓவியர்களும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைத் தயாரிக்க ஆரம்பித்தனர். முதலில் பெரிய பிரபுக்களால் தான் அவ் வாழ்த்துக்களை விலை கொடுத்து வாங்க முடிந்தது. பிற்காலத்தில் அச்சுத் தொழில் ஏற்பட்டபிறகு மிகவும் குறைந்த விலைக்குக் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் பாமர மக்களுக்கும் கிடைக்க ஆரம்பித்தன.




கி. பி. 1927-ம் ஆண்டில் இங்கிலாந்து தேசத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக நாற்பது மிலியன் பவுன்கள் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டனவாம். அமெரிக்காவில் இதை விடப் பன்மடங்கு அதிகமாகச் செலவிடுகிறார்கள்!!

கி. பி. 1895-ம் ஆண்டு விக்டோரியா மகாராணிகாலத்தில்இங்கிலாந்து தேசத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை மிகவும் குதூகலத்துடன் கொண்டாடப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது!

ரஷ்யாவில் கூடக் கிறிஸ்துமஸ் பண்டிகையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்துமஸ் தினத்தன்று கிறிஸ்துமதப் பாதிரிகளுக்காக ஏற்பட்ட 'கோல்யாடா' என்ற கிராமியப் பாடல்களையும், பழங்கால நடனங்களையும் நடத்தி மனமகிழ்கிறார்கள். ஒவ்வொரு வீட்டு வாசலிலும், 'கிறிஸ்துமஸ் மரத்தை' நட்டு அதற்கு மின்சார விளக்குகளைக் கொண்டு அழகுபடுத்தி இரவில் சிறுவர் சிறுமியர்களுக்கு அந்த மரத்தின் கீழ் விருந்து அளிக்கின்றனர்.

கிரீஸ் தேசத்தில் சிறுவர் சிறுமியர் கிறிஸ்துமஸ் தினத்தன்று அதிகாலையில் சிறு படகுகளில் அமர்ந்து அவற்றை அவர்களிலேயே சிலர் வீதியில் இழுத்துச் செல்வார்கள். படகில் அமர்ந்திருக்கும் சிறுவர்கள் ஏசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய 'காலந்தா' என்ற பாட்டைப் பாடுவார்கள். அச்சத்தத்தைக் கேட்ட பின்புதான் யாவரும் எழுந்திருந்து நீராடிக் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட வேண்டும். 'காலந்தா' என்ற பாட்டின் முடிவில் 'இப்பாட்டைப் பாடும் எங்களைக் கிறிஸ்துமஸ் தினத்தன்று மறந்து விடாதீர்கள்' என்று அச்சிறுவர்கள் வேடிக்கையாக ஒரு அடியையும் சேர்த்துக் கொள்வார்கள்.

'செக்கோஸ்லோவேகியா'வில்கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுவது, நமது தமிழ் நாட்டில் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது போல்தான். கிறிஸ்துமஸ் தினத்தன்று தங்கள் வீட்டி



லுள்ள கால்நடைகளையும் பறவைகளை யும் குளிப்பாட்டி நல்ல உணவு படைத்து அன்று மாலை பூஜையும் செய்கிறார்கள். பூஜை நேரத்தில் அப் பிராணிகளுக்கு 'ஒயின்' கொடுக்கப்படுகிறது.

'ஸ்காட்லண்ட்' தேசத்தில் சிறுவர்கள் அதிகாலையில் எழுந்துநீராடிப் புத்தாடை அணிந்து ஒவ்வொரு வீடாகச் சென்று "கிறிஸ்து பிறந்து விட்டார்—நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது — வரப் போகும் புது வருடம் அதிர்ஷ்டமானது" என்று இரைந்து சொல்வார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்ட பின்புதான் பெரிய வர்கள் வீட்டைவிட்டு வெளியே கிளம்பு வது வழக்கம்.

கிறிஸ்துமஸ் பண்டிகை அமெரிக்கா வில் மிகவும் குதூகலத்துடன் கொண்டா டப்படுகிறது. கிறிஸ்துமஸ் தினத்தன்று அதிகாலையில் எழுந்திருந்து நீரா[illegible] வாஷிங்டனில் உள்ள 'வெள்ளை மாளி கை'க்குச் சென்று அங்கு ஜனாதிபதியின் சார்பில் உள்ள 50 அடி உயரமுள்ள கிறிஸ்துமஸ் மரத்தை வணங்குகிறார்கள். அமெரிக்க மக்கள் ஆங்காங்கு தேவா லயங்களில் காலையில் வழிபாடு செய்து விட்டுப் பிறகு வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளிகள் குணமடைய அங்கும் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்தப் பிரார்த்தனைக்குக் 'கரோல்' என்று பெயர். அமெரிக்க அரசாங்கம் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக வருடந் தோறும் லக்ஷக்கணக்கான ஸ்டர்லிங்கு களைச் செலவிடுகிறது.

யூகோஸ்லேவியாவில் கிராமங் களில் ஒரு பெரிய மரத்தை அருகில் உள்ள காடுகளிலிருந்து வேருடன் பிடுங்கி அதை இழுத்து வந்து கிறிஸ்து மஸ் பண்டிகைக்கு முன் இரவு அந்த மரத்தின் இலைப் பக்கம் கிழக்கு திசையை நோக்கிய வண்ணம் போட்டு விடு வார்கள். கிறிஸ்துமஸ் தினத்தன்று அதி காலையில் அந்த மரத்தைக் காண்போ ருக்கு 'பெத்லஹாம்' என்ற நட்சத்திர தேவதையின் முழு ஆதரவும் கிடைக்கு மென்று நம்புகிறார்கள். அன்று இரவு நக்ஷத்திரத்தைக் கண்டவுடன் தான் அந்த மரத்தை அப்புறப்படுத்துவார்கள்.

ஹாலந்து தேசத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடும் விதம் விநோதமானது. கிறிஸ்துமஸ் பண்டி கைக்கு முன் தினம் இரவு எல்லோ ருடைய வீட்டு வாசல்களிலும் ஒரு நாற் காலியை வைத்து விட்டுப் படுக்கைக்குச் செல்கிறார்கள்.

இதன் நோக்கம் என்னவெனில் 'ஸான் டாக்ருஸ்' என்ற ஒரு பெரியார் கிறிஸ்து மஸ் தினத்தன்று அவர்கள் வீட்டுக்கு வந்து நாற்காலியில் அமர்ந்து ஆசிகூறு கிறாராம். டச்சு தேசத்துக் கதைகளில் இந்தச் சன்னியாசியிடம் 'பிளாக்பேட்' என்ற ஒரு பூதம் அடிமையாக இருப்ப தாகவும் அந்தப் பூதத்தின் மூலம் இந்த சன்னியாசி நல்லவர்களுக்கு அவர்களு டைய தேவைகளையும், கெட்டவர்க ளுக்கு ஒருகட்டுப் பிரம்பை (அவர்களைத் தண்டிப்பதற்காக)யும் தமது கிறிஸ்து மஸ் பரிசாக அளிப்பதாக நம்புகிறார்கள்.

நார்வேயில் கிறிஸ்துமஸ் பண்டி கையைக் கொண்டாடும் விதம் புதுமை யானது. கிறிஸ்துமஸ் தினத்தன்று அதி காலையில் சிறுவர் சிறுமியர்கள் தங்களு டைய சக்கரமில்லாத 'ஸ்லெட்ஜ்' என்ற வண்டிகளில் ஏறி உல்லாசப் பிரயாணம செல்கிறார்கள். மாலையில் வீடு திரும்பும் பொழுது அவர்களை வீடுதோறும் பெண் கள் மெழுகுவர்த்தி கொளுத்தி மூன்று முறை அவர்கள் தலையில் சுற்றிப் பி[illegible]பு வீடு முழுதும் நம் நாட்டில் கார்த்திகைப் பண்டிகையைப் போல மெழுகுவர்த்தி களை ஏற்றி வைக்கிறார்கள்.





"இந்த மகாநாட்டை என்னைத் திறந்து வைத்துப் பேசச் சொல்லிவிட்டார்கள். என்ன பேசுவது என்று தெரியவில்லை!"

"இது என்ன பிரமாதம்! சம்பிரதாயமாக எல்லோரும் செய்கிறமாதிரி அதே பல்லவியை நீங்களும் பாடிவிட்டு வந்து விடுங்கள்!"

அன்று இரவு அச் சிறுவர் சிறுமியர்களுக்குப் பன்றி உருவத்தில் இருக்கும் ஒரு பெரிய ரொட்டி உணவாக அளிக்கப்படுகிறது.

ஹங்கேரியில் கிறிஸ்துவர்கள் பண்டிகையின் முக்கிய அம்சம் விளையாட்டுக் கேளிக்கைகள். கிறிஸ்துமஸ் ஷூட் என்று அழைக்கப்படும் ஒரு கேளிக்கை இவற்றில் மிக விசேஷமானது. ஒவ்வொரு வீதியிலும் உள்ள எல்லாக் குடும்பத்தினரும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பே ஒரு இடத்தில் ஒன்றுகூடித் தங்கள் உல்லாசப் பிரயாணத்துக்காக ஒரு குறிப்பிட்ட இடத்தை நிச்சயம் செய்து கொள்வார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு குறிப்பிட்ட பொறுப்பை எடுத்துக் கொள்கின்றனர். உதாரணமாக, ஒருவர் பிரயாணத்துக்கு வேண்டிய சாதனங்களைத் தயார் செய்வார், மற்றொருவர் வேட்டையாடுவதற்கு வேண்டிய உபகரணங்களைத் தயாரிப்பார், மற்றொருவர் உணவுப் பொருள்களைத் தயார் செய்வார். இம்மாதிரியாக அவர்கள் குதூகலத்துடன் சூரிய உதயத்துக்கு முன்பு குறிப்பிட்ட இடத்தை அடைவர். அங்கு பிற்பகல் பன்னிரண்டு மணிவரையில் அவர்கள் வேட்டையாடுவார்கள். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு அவர்கள் வேட்டையை நிறுத்தி விடுவார்கள். அவ்வேட்டையில் யார் அதிகமான பறவைகளை வேட்டையாடி வீழ்த்தியிருக்கிறார்களோ, அவரே அந்த வருடத்துக்கு அந்த வீதியின் தலைவர். பிறகு அவர்கள் சாப்பிட உட்காருவார்கள். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வீதித் தலைவர் அவர்களுக்கு உணவு பரிமாறுவார். காலையில் சுட்டு வீழ்த்தப்பட்ட மிருகங்களின் உணவே அன்று பரிமாறப்படும். பிற்பகல் மூன்று மணிக்கு ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் பரிகசித்துக்கொண்டும் ஒருவரையொருவர் தொட்டு விளையாடிக்கொண்டும், கேளிக்கைகளில் ஈடுபடுவார்கள். மாலை சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் கிறிஸ்துமஸ் மரத்தின் அடியில் ஒருவரையொருவர் முத்தமிடுவதுகூட ஒரு வழக்கம். அன்று இரவு அவர்கள் வீடு திரும்பியவுடன், அன்றைய தினத்தைப் போல் என்றும் சந்தோஷமாக வாழ ஆண்டவனை வழிபடுகின்றனர்.

இந்துமதப் பண்டிகைகளைப் போலவே கிறிஸ்துவ மதத்திலும் பலவிதமான பழக்க வழக்கங்கள் தொன்றுதொட்டு இருந்து வருகின்றன. விஞ்ஞானத்தில் முற்றியிருக்கும் அவர்கள் கூட அவற்றை மூடப் பழக்கங்கள் என்று கருதாமல், தங்கள் மதக் கோட்பாடுகளையோ, கலாசாரத்தையோ சற்றும் புறக்கணிக்காமல் பின்பற்றி வருகின்றனர். 'மதத்துக்கு மீறிய கொள்கை இல்லை' என்பதற்கு அவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடும் விதமே சான்று.

பாகவதமாகிய

பக்தி வயல்

16. ஜடபரதர் சரிதம்

பக்தரில் சிறந்த பரதன் பஞ்சஜனி என்ற மங்கையை மணம் செய்து கொண்டான். அவனுக்கு ஐந்து புதல்வர்கள் பிறந்தனர்.

பரதன் ஆளத் தொடங்கிய நாள் முதல் "அஜனாபம்" என்ற இந்நாடு "பாரதம்" என்ற பெயருடன் விளங்கலாயிற்று.

அவரவருக்குரிய தர்மத்தைப் பின்பற்றி வந்த தன் குடிகளை நெறி தவறாமல் பரதன் ஆண்டு வந்தான். வேள்விகளையும் மற்ற கடவுள் வழிபாடுகளையும் விடாமல் நடத்தினான்; ஆனால் அவைகளால் வரும் பயனைத் தனக்கென்று கோராமல் ஆண்டவனுக்காக அர்ப்பணம் செய்து விட்டான். இவ்வாறு தூய்மை அடைந்த மனத்தினுள் நாராயணனுடைய உருவம் தோன்றி, அவர் மீது அன்பு மிகுந்த பக்தியும் வளரலாயிற்று. இவ்விதம் பல்லாண்டுகள் போயின. பின்னர், தன்னை வேந்தனாய்ச் செய்த செயற் பயன்கள் கழிந்தனவென்று கருதி, நாட்டைத் தன் மைந்தருக்குப் பிரித்துக் கொடுத்து விட்டு, கண்டகீ நதிக்கரையில் புலஹர் என்ற முனிவரின் ஆசிரமத்தை அடைந்தான்.

மலராலும், துளிராலும், காயாலும், கிழங்காலும் கடவுளைத் தனிமையில் பூஜை செய்து கொண்டு, புலன்களால் வரும் இன்பங்களை வெறுத்து, அமைதியை எய்தினான். அனந்தன் மீது ஆசை வளர்ந்து வரவர அவன் மனம் கசிந்தது; மெய் சிலிர்த்தது; கண்ணீரால் கண் மறைத்தது! மனமென்ற கடலிலே மூழ்கி பக்தி பரவசனான பரதன், தினந்தோறும் செய்து வரும் பூஜையையும் மறந்து நின்றான். கதிரவனாய்த் தோன்றும் நாராயணனைத் துதித்தான்.

"இச்சையால் உலகெலாம் செய்து,
சக்தியால் உள்நின்று காத்துப்
புத்தியின் செயலெலாம் தூண்டி,
மாசற்ற ஸத்வமாய்த் தோன்றும்,
ஜோதியாம் சூரியனை நாங்கள்,
சரணமென்றே அடைந்தோம்."

(இச்செய்யுள் காயத்ரீ மந்திரத்தின் பொருளைத் தழுவியிருக்கிறதென்று அறிய வேண்டும்.)

ஒரு நாள், பரதர் தம் தினசரிக் கடன்களை முடித்துக்கொண்டு, ஆற்றின் கரையில் அமர்ந்து "ஓம்" என்ற மந்திரத்தை மனத்திலே ஓதிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பெண்மான் நீர் அருந்துவதற்குத் தனிமையில் அங்கு வந்தது. அவலுடன் நீர் பருகும் தருணத்தில் எங்கிருந்தோ மனத்தைக் கலக்கும் சிங்கநாதம் கேட்டது. சத்தத்தால் கலங்கி அச்சமேறி மருண்ட மான் திடீரென்று ஆற்றில் பாய்ந்தது. அப்பொழுது அது தரித்திருந்த கருவானது நழுவி நீரில் விழுந்தது. பாய்ச்சலின் வேகத்தாலும் பயத்தினால் ஈன்றதாலும் தாய் மான் தளர்ச்சி அடைந்தது. ஆற்றோடு சென்று பாறையோரம் விழுந்து இறந்து விட்டது.

தாயில்லா மான் கன்றைக் கண்டு பரதர் மனமுருகினார். அதைத் தம் ஆசிரமத்துக்கு எடுத்துச் சென்றார். அதனிடம் அளவிலா அன்பு பாராட்டினார். அதற்கு உணவளித்தும், காத்தும், கட்டியும் கொஞ்சியும் தம் நாட்களைப் போக்கினார். தம்முடைய ஆசாரத்தையும் பூஜையையும் மறந்தார். "அந்தோ! அனைவராலும் கைவிடப்பட்ட இக்கன்றுக்கு என்னையல்லால் கதியேது? என்னை அண்டின உயிரை நான் கைவிடலாகுமா? தன்னலத்தைக் கருதாமல் வருந்துவோரைக் காப்பதன்றோ பெரியோருக்கு அழகு" என்று தம்முள்ளே சொல்லிக் கொண்டார். மான் கன்றினிடம் அன்பு வைத்த அவர் மனம், உண்ணும் பொழுதும், உறங்கும் பொழுதும், நிற்கும் பொழுதும், நகரும் பொழுதும் அதனிடமே நிலைத்து நின்றது. மலரையும் கள்ளியையும் சேமிப்பதற்கென வெளியேறுங்கால் மானைத் தம்முடன் அழைத்துச் செல்வார். வழியிலே சோர்ந்து நின்ற மானைத் தோளிலே தூக்கிச் செல்வார். அதை அணைத்து ஆனந்தம் அடைவார். பூஜையின் நடுவில் திடீரென்று எழுந்து போய் மானுக்குக் கேடு ஏதும் வந்ததோவென்று பார்ப்பார். கன்றைக் காணாத போதெல் லாம் பிரிவினால் மனம் நொந்து பணம் இழந்த லோபியைப் போல் பரிதவிப்பார். ஓநாயோ பன்றியோ மானைக் கொன்று விட்டதோ என்று பதறுவார்.

மறுபடியும் மானை நான் காண்பேனோ என்று கரைவார். "கண்மூடிச் சிந்தையிலிருப்பது போல் பாசாங்கு செய்வேன்; அப்பொழுது சினத்துடன் வந்து என்னை நீர்த்துளிபோல் மிருதுவான கொம்புகளால் முட்டுமே! ஓமத்துக்கென்று வைத்திருக்கும் தர்ப்பையைத் தின்றாயென்று ஏசினால், அச்சமுடன் அகன்றுபோய் முனி மகன்போல் அடங்கியிருக்கும் அழகுதான் என்னே!" என்றெல்லாம் எண்ணுவார். கன்று எங்கேயாவது சென்றிருந்தால், "இம்மான் கன்றின் கால் பட்டுப் புனிதமாகும் பூமிதான் என்ன தவம் செய்ததோ? காலடியைக் கண்ட எனக்கும் என் செல்வம் சென்ற பாதை தெரிகிறது. வானத்தில் நிற்கும் மதியும் தாயின்றித் தனித்துச் சென்ற கருமாவின் கன்றைக் காக்கவே ஆசை கொண்டு தன்னுடன் சேர்த்துக் கொண்டனனோ? இல்லை, மானைக் காணாமல் வெந்து வரும் என் மனத்தைத் தணிப்பதற்குத் தன் அமுதான கிரணங்களை அனுப்புகின்றனனோ?" என்று புலம்புவார்.

இவ்விதம் முற்றாத முயற்சியில் பரதர் தம் மனத்தைத் தளர விட்டார். மானென்ற உருவில் வினையே இவரை ஆட்கொண்டது. இல்லையேல், முக்திக்கு இடையூறென்று மைந்தரையும் விட்டு வந்த மன்னனுக்கு வேறு இனத்தைச் சேர்ந்த மானிடம் அன்பு ஏன் தோன்ற வேண்டும்? யோகம் தடைப்பட்டுத் தம்மை மறந்து மானை வளர்த்த பரதருக்கு, எலி வளையைப் பற்றும் பாம்பென, மரிக்கும் தருணம் விரைந்தோடி வந்தது. தம் அருகில் மகனைப் போல் வருந்தி நிற்கும் மான் மீது கண் செலுத்தி, மானையே மனத்தில் எண்ணி உயிர் துறந்த பரதர், மறுபிறப்பில் மான் உருவை அடைந்தார்.



அப்பொழுது, தவப் பயனால் முன் பிறவியின் நினைவொன்றும் நீங்காத இம்மான், வருத்தத்தை அடைந்தது. தான் பிறந்த காலஞ்ஜரமென்ற மலையை விட்டுப் புலஹருடைய ஆச்ரமத்துக்குத் தனிமையில் வந்தது. பற்றென்ற பொழுதே பயம் கொண்டு மான் பிறவியென்ற வினை எப்பொழுது நீங்கும் என்ற ஒரே எண்ணத்துடன், சரகையும் பூண்டையும் உட்கொண்டு, காலத்தைத் தனித்திருந்து போக்கி, முடிவில் கண்டகி நதியில் உயிர் துறந்தது.

ஆங்கிரஸ கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு அந்தணர் இருந்தார். அவர் தவத்திலும், நல்லொழுக்கத்திலும், மறையிலும், கடவுள் வழிபாட்டிலும் மேன்மை வாய்ந்து விளங்கினார். அவருக்கு இரண்டு மனைவிமார். முதல் மனைவிக்கு ஒன்பது குமாரர்கள் பிறந்தார்கள். இளைய மனைவிக்கு ஆணும் பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அவ்வாண் குழந்தைதான் முன் பிறவியில் மானாக இருந்த பரதர்.

இப்பிறப்பிலும் பற்றை வைத்து நழுவக் கூடாதென்று தீர்மானம் செய்த பரதர், வெளியோருக்கு மதியீனன் போலவும், பித்தன் போலவும் கண்ணும் காதும் இழந்தவன் போலவும் தோற்றம் அளித்தார். தமக்குள்ளே மட்டும் பரமனின் தாள்களைப் பற்றிக் கொண்டார். மகன் மீது அன்பு கொண்ட அந்தணர் அவனுக்கு நல்வழிகளைப் புகட்டி, உபநயனம் செய்வித்து, வேதத்தையும் கற்பித்தார். ஆனால் பாலகன் கேட்டதைத் தப்பாகச் சொல்வான், மறையை அரைகுறையாகக் கற்றான். மைந்தனுக்கு ஆவலில்லாவிடினும் ஆசை மிகுந்த தந்தை, வேதம் ஓதும் வழியையும், தவத்தையும், குருவுக்குச் செய்ய வேண்டிய பணிவிடையையும், தூய்மையான உடற்பாங்கையும், ஓமம் செய்யும் முறைகளையும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். ஆனால் தம் மகனைச் சான்றோனெனக் காணாமலே உயிர் துறந்தார். இளைய மனைவியும் கணவனுடன் கட்டையேறினாள்.

தந்தை இறந்ததும், இப்பாலகனை அறிவிலி என்று கருதி, இவனோடு உடன் பிறந்தவர் இவனுக்குப் பாடம் சொல்வதை நிறுத்தி விட்டார்கள். மறை வகுத்த சடங்குகளே மேலென்று மெய்யறியாத மாந்தருக்கு ஆன்மாவை அறிந்தெய்தும் பெருமை எவ்வாறு விளங்கும்? பரதனோ, பித்தனென்றோ, மதியீனனென்றோ, செவிடனென்றோ எண்ணிய பாமரரிடம் அவ்வாறே நடந்து கொண்டான். ஏவின வேலையைச் செய்வான்.




கூலியாகவோ, பிச்சையாகவோ, கிடைக்கும் உணவை, போதுமோ போதாதோ வென்று பாராமல், சுவை உற்றதா, சுவை அற்றதா என்று கருதாமல், உண்டு வந்தான். தன்னுள்ளே தானாய் நிற்கும் ஜோதியேதா னென்று தெரிந்த பரதனுக்கு, உடலோடு உறவே இல்லாமல் போய் விட்டது. மாட்டைப் போல் ஊர் சுற்றுவார். வெய்யிலையும், மழையையும், குளிரையும், புயலையும் சற்றேனும் பாராட்டாமல் புவி மீது படுத்துறங்குவார். அழுக்கேறிய கந்தை கட்டி, மாசடைந்த நூல் தரித்த பரதரை அனைவரும் ஏளனம் செய்தனர். இவருடைய அண்ணன்மார் இவருக்கு வயலை நிரத்தும் வேலையை இட்டார்கள். வெட்டினது போதுமா, பள்ளமா, சமதளமா என்று பாராமல் வெட்டிக் கொண்டே இருப்பார். வேலைக்குக் கூலியாய்ப் பொடி அரிசியும் புண்ணாக்கும், தவிடும், பானையின் அடியிலிருக்கும் பருக்கையும் தான் இவருக்குக் கிடைக்கும். அவைகளை யெல்லாம் அமுதென உட்கொள்ளுவார்.

ஒரு சமயம், திருடருக்குத் தலைவன் ஒருவன், தனக்கு மகன் வேண்டுமென்று, காளிக்குக்காணிக்கையாக ஆள் தலையைக் கொடுப்பதாகத் தீர்மானித்தான். பலி கொடுப்பதற்கென்று கட்டி வைத்திருந்த மனிதன் இரவில் தப்பித்துக் கொண்டு ஓடி விடவே, அவனைத் தேடிக் கொண்டு தலைவனின் சேவகர்கள் திரிந்தார்கள். அப்பொழுது விலங்குகள் வராமல் வயலைக் காத்து வரும் பரதனைக் கண்டார்கள். அவருடைய அழகான மேனியே காளிக்குத் தகுமென்று, முகமலர்ச்சியுடன் அவரைக் கட்டிச் சண்டிகையின் கோவிலுக்கு இழுத்துச் சென்றனர்.

அவ்விடத்தில் அவருக்கு வழக்கம் போல் நீராட்டி, நல்லாடை உடுத்தி, நகை போட்டு, மாலையிட்டு, நெற்றியிலே பொட்டு வைத்து வேண்டியளவு அன்னமிட்டுக் காளியின் முன்னிலையில் கொண்டிருத்திக் கொல்வதற்குச் சித்தமாயினர். காளிக்குப் பூவாலும், சுடராலும், சாம்பிராணிப் புகையாலும், துளிராலும், குருத்தாலும், பொரியாலும், நெல்லாலும் பூசை போட்டனர். தப்பட்டை ஓசையுடன் உயர் குரலில் காளிக்குத் துதிகளைப் பாடினார்கள். பிறகு பூசாரியாக முன் வந்த தலைவன் கூரிய வாளொன்றைக் கையிலேந்திக் காளிக்குப் பிரியமான மந்திரத்தை உச்சரித்து, பலி புருஷன் ரத்தத்தால் அம்மையை ஆனந்தப்படுத்த முன் வந்தான்.

முனி குலத்து மைந்தனைப் பலியென்று கொண்டுவந்து வைத்ததும், அவருடைய தவத்தின் பலத்தினால் காளியின் மேலெல்லாம் எரிந்தது. வளைந்திருக்கும் புருவங்கள் தாங்காத கோபத்தால் மேலேறி நெரிந்து நிற்க, கோரைப் பல் வாயுடனும், சிவந்திருக்கும் கண்ணுடனும், திகில் தரும் வண்ணம் அலறிக் கொண்டு, மூவுலகையும் அழிக்கவோ என்ற அச்சமளிக்கும் தோற்றத்துடன், கற்சிலையினின்று காளி வெளியே குதித்தாள். பூசாரியின் கையிலிருந்த வாளைப் பிடுங்கி, இருந்தவர் எல்லோருடைய தலையையும் அறுவடை செய்து, கழுத்திலிருந்து பொங்கி வந்த ரத்தத்தைப் பருகினாள், கத்தினாள், கூத்தாடினாள், தலைகளைப் பந்தாடினாள்.

பரமனைச் சரண் புகுந்த பெரியோரைக் காத்தருளும் கடமையும் பரமனுக்கே.



வித்வான்: உனக்குச் சங்கீதம் வருமாடா; என்ன அநியாயம்டா. தம்பூராவைக் கோட் ஸ்டாண்டா உபயோகப்படுத்தலாமாடா?

மெட்ரிக் முறை

சுலபமானது
ஒரே
சீரானது

நீங்கள் சாமான்கள் வாங்கும் போதும் சரி, விற்கும் போதும் சரி, மெட்ரிக் முறை எடைகள் அளவுகளில் கணக்கிடுவது சுலபமாக இருக்கும்.

நாடு முழுவதுக்கும் ஒரே எடை—அளவு முறை இருப்பது வியாபாரத்தில் வசதியாக இருப்பதுடன் தேசீய ஒற்றுமையையும் வளர்க்கும்.

கீழ்க்கண்ட எடைக் கல்கள் வியாபாரத்தில் புழக்கத்திலிருக்கும்								
இரும்பில் செய்த எடைக் கல்கள்			பித்தளை/வெண்கலத்தில் செய்த எடைக் கல்கள்					
கிலோ கிராம்		கிராம்	பொன், வெள்ளி மட்டும்		பொன், வெள்ளியும் இதர சாமான்களும்			
			கிலோ கிராம்		கிலோ கிராம்	கிராம்		
50	5	500	20	5	1	500	50	5
20	2	200	10	2		200	20	2
10	1	100				100	10	1
1 கிலோகிராம் = 1,000 கிராம் = 86 தோலா								

1958 அக்டோபர் 1-ம் தேதி முதல் இராஜ்யங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் சட்டப்படி அமுலுக்கு வந்திருக்கின்றன. இந்தச் சீர்திருத்தம் மற்றப் பகுதிகளிலும் சிறிது சிறிதாக அமுலாக்கப்படும்.

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA 58/330 a TM

இலங்கைக் கடிதம்

நாவலர்பெருமானுக்கு அஞ்சலி


ரஜனி

கொழும்பு,
டிசம்பர் 11௳

யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள தேநீர்க் கடைகளில் ஹரிஜனங்களின் பிரவேச உரிமைக்காகச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை இம்மாதம் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை நல்லவேளையாக ஒத்திப் போடுவதென்று தீர்மானித்திருக்கிறார்கள். 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது' என்பார்கள். அதே போல் தமிழ் மக்களிடையில் பல மாதிரியான பிணக்குகளை உண்டுபண்ணி அவர்களை மோதிக் கொள்ளச் செய்து சூறையாடுவதில் அக்கறை கொண்ட மகானுபாவர்கள் அநேகர் இருக்கையில் இம்மாதிரியான மித்திரத் துரோகங்களுக்குச் சிறுபான்மைத் தமிழர்கள் பலியாகாமல் பிரிவினைச் சக்திகளை எதிர்த்து நின்றதும் உத்தேச சத்தியாக்கிரகத்தை ஒத்தி வைத்ததும் வரவேற்கத் தக்கதாகும். இல்லாத பட்சத்தில் ஏற்கனவே பிளவுபட்டிருக்கும் தமிழ் பேசும் மக்களிடையில் தகராறுகள் மேலும் அதிகரித்து, ரத்தக் களரிக்கு இடம் ஏற்பட்டு, எதிரிகள் கைகொட்டிச் சிரிக்கும் துர்ப்பாக்கியமான நிலைமை உருவாகியிருக்கும். இ[illegible]ரம் பல அரசியல் கட்சித் தலைவர்களுடனும் சிறுபான்மைத் தமிழர் சங்கப் பிரதிநிதிகள் ஒரு மகாநாடு கூட்டிப் பேசி உத்தேச சத்தியாக்கிரகத்தைக் கைவிடுவதென்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காகச் சகல அரசியல் கட்சிகளும் தங்களால் இயன்றதையெல்லாம் செய்வதென்றும் முடிவு செய்தார்கள். சமாதான முறையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேநீர்க் கடைப் பிரவேச உரிமையைப் பெற்றுத் தர முடியுமென்று உயர் ஜாதியினர் உறுதி கூறியதின் பேரிலேயே சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் காலவரையறையின்றி ஒத்திப்போடச் சிறுபான்மை தமிழர் மகாசபை ஒப்புக்கொண்டது. ஏற்கனவே அநேகம் தேநீர்க் கடைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் நுழைந்து சரிசமமாகத் தேநீர் பருக உரிமையளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

சென்ற வாரம் நாவலர் பெருமானின் குருபூஜை கொழும்பிலும் வேறு பல இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விவேகானந்த சபை ஆதரவில் கொழும்பில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் செனட்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் பேசுகையில் நாவலர் பெருமான் சைவ சமயத்தவர்களுக்கு மட்டுமின்றிச் சகலருக்கும் தொண்டு செய்த பெரியாரென்றும் அவர் தமது காலத்தில் சைவமும் தமிழும் அழியும் நிலைமையில் இருப்பதைக் கண்டு அவற்றின் மறுமலர்ச்சிக்கு அரும் பணியாற்றினாரென்றும்அதேபோல் இன்றும் தமிழர் தங்களிடமுள்ள குறைகளை உணர்ந்து, நிவர்த்தி செய்து கொள்ள முயற்சிசெய்வதே நாவலருக்கு நாம் செய்யும் கைம்மாறு என்றும் கூறினார். 'நாவலர் பாதையில்' என்ற தலைப்புடன் ஒரு அரிய சொற்பொழிவாற்றிய திரு கைலாசபதி, நாவலர் இன்று நம்மிடையில் வாழ்ந்தால் தொழிற் கல்வியின் அவசியத்தைப் பலமாக வலியுறுத்தியிருப்பாரென்றும், தமிழ் மக்கள் இன்றையச் சூழ்நிலையில் குமாஸ்தா உத்தியோகங்களுக்காக உயிரை விட்டுப் படிப்பதைக் கைவிட்டுத் தொழிற் கல்வியில் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஸ்ரீமதி ஞானம் இரத்தினம், ஸ்ரீமதி பாலம் லக்ஷ்மணன் முதலான வேறு பலரும் பேசிய பின்னர் நாவலருக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதென்று கூட்டத்தில் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையில் பல்லாண்டுகளாக இலக்கியப் பணியாற்றி வந்த பரிசு பெற்ற தமிழ் எழுத்தாளர் திரு சோ. சிவபாதசுந்தரம் சென்ற வாரம் இலங்கையிலிருந்து ஒரேயடியாக விடைபெற்றுக் கொண்டு இந்தியாவுக்குப் பிரயாணமானார். அவரை வழியனுப்புவதற்காக கிரீன்லண்ட்ஸ் ஓட்டலில் நடந்த ஒரு பிரிவுபசாரக் கூட்டத்தில் அவரது இலக்கியச் சேவைகளைப் பாராட்டிப் பல எழுத்தாளர்கள் பேசினார்கள். சென்ற வகுப்புக் கலகத்துக்குப் பின்னர் தமது மன அமைதி பறி போய் விட்டதாயும், மனச் சாந்தியை நாடியே பிறந்த நாட்டை விட்டுப் பாரதத்துக்குப் போவதாயும் திரு சிவபாதசுந்தரம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார். யாழ்ப்பாணத்தவரும், மாதம் சுமார் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் பெற்று வந்தவருமான ஒருவர் உத்தியோகத்தை உதறித் தள்ளி விட்டு, தமிழன் மானம்



கோ சம்ரக்ஷணை

கஞ்சியையும் கழுநீரையும் வீணாக்காமல் ஒரு பாத்திரத்தில் சேகரித்து, பசு மாடுகளுக்குக் கொடுத்து ரக்ஷிக்கவும்.

காய்கறிகளை நறுக்கும் பொழுது மிஞ்சும் காய்கறிப் பாகங்களைப் பசுவுக்குத் தந்து ரக்ஷிக்கவும்.

கால்நடைகள் நமக்கு உழைக்கின்றன. அவற்றைக் காப்பாற்றுவது நமது கடமை.

உபதேச மொழிகள்

1. உபகாரியிடம் நன்றியோடு இரு.
2. அற ஸ்வரூபியே கடவுள்.
3. அரனை மறவேல்.
4. நாம் செய்யும் குற்றங்களை நாமே ஆலோசித்துப் பார்த்துக் கொண்டால் நம் எல்லோருக்கும் கடவுளே கருணை நிறைந்த பரோபகாரி என்பது புலனாகும்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

மரியாதையோடு வாழ இலங்கை பொருத்தமான நாடு அல்லவென்ற எண்ணத்துடன் பரதேசம் போவதென்றால், இங்கு நடந்து வரும் சிங்களவரின் தான்தோன்றித்தனமான ஆட்சி தமிழ் மக்களுக்கு எவ்வளவு தூரம் மனவேதனையை விளைவித்துள்ளது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். நசுக்கப்படுகிறோமென்ற காரணத்துக்காக நாட்டையே விட்டு ஓடுவது விவேகமா என்பது ஒருபுறமிருக்க, திரு சிவபாதசுந்தரத்தின் வெளியேற்றம் தமிழ் மக்களின் இன்றைய மனக்கொதிப்பை எடுத்துக் காட்டுவதாகக் கருதலாம். 'ஒலிபரப்புக் கலை' என்ற ஒரு உன்னதமான தமிழ் நூலை எழுதிச் சென்னை கலைக்கழகத்திடம் பரிசு பெற்ற ஒரே இலங்கை எழுத்தாளர் இவர்தானென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஆறுமாத காலம் தங்கிவிட்டுத் தமது மனைவியார் ஒரு இந்தியப் பிரஜை என்ற காரணத்தினால் தாமும் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றுவிடலாமென்ற நம்பிக்கையுடன் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

'இலங்கையைப்பற்றி ராஜாஜி அடிக்கடி சொல்லிவரும் தீர்க்கதரிசனம் அதி விரைவில் கைகூடி விடும் போலிருக்கிறது' என்று முன்னாள் பட்டிருப்புத் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவரான திரு எஸ். எம். ராஜமாணிக்கம் ஒருகூட்டத்தில் பேசியபோது, நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். மொழியால் வேறுபட்ட இரு சமுதாயத்தினர் வாழும் நாட்டிலே இரு வகுப்பாரும் சரிசமதையாக வாழவும், அதே சமயம் நாட்டின் ஒற்றுமை சீர்குலைந்து விடாதபடி பாதுகாக்கவும் சமஷ்டியாட்சி முறையை ஏற்படுத்துவதுதான் சரியான பரிகாரம் என்று பல சந்தர்ப்பங்களில் ராஜாஜி சொல்லி வந்திருக்கிறார். சென்ற மே, ஜூன் மாத வகுப்புக் கலகத்தின்போது இதை ராஜாஜி இரும்பவும் வலியுறுத்திக் கூறியபோது, இலங்கை அரசாங்கம் ராஜாஜி அவர்கள் 'கல்கி'யில் எழுதிய கட்டுரையை இருட்டடிப்புச் செய்தது. சீப்பை மறைத்து வைத்து விட்டால் கல்யாணம் நின்று விடுமென்று சிங்கள அரசாங்கம் நினைத்தது போலும். அவர்கள் நினைத்ததற்கு மாறாகத் தமிழரசுக் கட்சியோடு நின்ற சமஷ்டியாட்சிக் கோரிக்கை இப்போது கண்டியச் சிங்களவர் பலரிடையிலும் ஆதரவு பெற்றிருக்கிறது. இதைத் தமிழர்கள் சொன்னால் கடும் வகுப்புவாதமென்றும், நாட்டைத் துண்டு போடத் தமிழர்கள் சதி செய்வதாயும் பழி சுமத்துகிறார்கள் சிங்களவர்களே சமஷ்டியாட்சி முறையை வற்புறுத்துவதானால் அதை வகுப்புவாதமென்று எப்படித் துணிந்து வர்ணிக்க முடியும்?

சமஷ்டிக் கோரிக்கை புதிய விஷயம் அல்லவென்றும் இன்றையப் பிரதம மந்திரியான பண்டாரநாயகாவே சில ஆண்டுகளுக்கு முன்னால் சமஷ்டியாட்சி முறையைப் பலமாக ஆதரித்து வந்திருக்கிறாரென்றும், திரு ஆர். இ. ஜயதிலகா என்ற சிங்களப் பார்லிமெண்ட் பிரதிநிதி சுட்டிக்காட்டியிருக்கிறார். சமஷ்டியென்றால் நாட்டைத் துண்டு போடுவதல்லவென்பதையும் மொழியால் வேறுபட்ட இரு வகுப்பார் சரிசமதையாக வாழவும், அதே சமயம் நாட்டின் ஒற்றுமை சீர்குலையாமல் பாதுகாக்கவும் சரியான ஏற்பாடு சமஷ்டியாட்சி முறைதானென்பதையும் மக்களிடையில் பிரசாரம் செய்ய விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட விருக்கின்றன.



பம்பாயில் மோட்டார் வர்த்தகத் துறையிலும், பிலிம் வட்டாரத்திலும் பிரக்கியாதி வாய்ந்தவரும் ஸ்ரீ டி. கே. வெங்கடாசல அய்யர் பி. ஏ., எல். டி. அவர்களின் குமாரருமான ஸ்ரீ டி. வி. ராமஸ்வாமி அவர்களுக்கும், கல்கத்தா ஸ்ரீ கே. ஜி. நடராஜன் அவர்களது குமாரி சௌ. விஸ்விக்கும் கேரள ராஜ்யத்திலுள்ள நீலாம்பூரில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்தனர். வாழ்க ராமசாமி – விஸ்வி

ஆனந்தரங்கம் பிள்ளை

க. நா. சுப்ரமண்யம்

மோலியேர் என்று ஒரு ஹாஸ்ய நாடகாசிரியர்; மேதை என்று சொல்வார்கள். அவர் பிரான்சு தேசத்து மொழியில் அற்புதமான பல நாடகங்கள் எழுதியிருக்கிறார். அவற்றில் ஒன்றில் ஒரு புதுப் பணக்காரன் வருகிறான். அவனுக்குத் தன் பணத்தைக் கொண்டு கலைஞர்களை ஆதரிக்க வேண்டும் என்று ஆசை. கவிகள், வசனகர்த்தாக்கள் என்று அவன் சொல்லும்போது, கூட இருப்பவன் வசனகர்த்தாக்கள் கலைஞர்கள் அல்லவே அல்ல என்று வாதிக்கிறான். ஏனென்றால் இந்தப் புதுப் பணக்காரன் பேசுவதெல்லாம் வசனம்தானே என்பது அவன் வாதம். இந்த வாதம் புதுப் பணக்காரன் மனத்திலே இரண்டு விதமான கொள்கைகளைக் கிளப்பி விடுகிறது. "நானா? நான் பேசுவதெல்லாமே வசனம்தானா?" என்றும், அப்படியானால் தானும் ஒரு கலைஞன் தானே என்றும் தோன்றுகிறது அவனுக்கு.

அப்படி ஒன்றும் வசனம் என்பது பிரமாதமான சரக்கல்ல என்கிற எண்ணம் தமிழர்களிடையே மட்டும் தனியாக இருந்து வந்த எண்ணம் அல்ல; இன்றுநேற்றுப் பிறந்த எண்ணமும் அல்ல. பல தேசங்களிலும் கவிதையையும் விடச் சிறப்பாகக் கலை செய்ய முடியும் என்று வசனம் செய்து காட்டித்தான் தனது ஸ்தானத்தை நிரந்தரமாக்கிக்கொண்டது என்று சொல்ல வேண்டும். தன்னையும் அறியாமலே தமிழில் வசனம் செய்து தந்தவர்களில் ஆனந்தரங்கம் பிள்ளையை முதல்வராகக் கொள்ள வேண்டும். தமிழர்களும் தங்களால் முடிந்த வரையில் அவரை அறிந்து கொள்ளாமலே இருக்கத்தான் முயன்றிருக்கிறார்கள் என்றும் சொல்லலாம்.



திரு ஆனந்தரங்கம் பிள்ளை

எந்த இலக்கிய நோக்கத்துடனும் ஆனந்தரங்கம் பிள்ளை தம் தினசரிக் குறிப்புக்களை எழுதி வரவில்லை. பின்னால் குறிப்பாகச் சில விஷயங்களை ஞாபகம் படுத்திக் கொள்ள உபயோகப்படும் என்று எண்ணி எழுதினார் என்று சொல்லலாம். தாம் சந்தித்த மனிதர்களையும், தம் கண்முன் நடந்த சம்பவங்களையும், அன்றன்றைய நடைமுறைகளையும் விடாமல் இருபத்தைந்து வருஷங்கள் 1736 முதல் 1761 வரையில் குறித்து வைத்திருந்திருக்கிறார். தாமோ, தம் குடும்பத்தாரோ தவிர வேறு யாரும் அவற்றை எந்தக் காலத்திலும் பார்க்க வேண்டும் என்று அவர் எண்ணவில்லை, பார்க்கட்டும் என்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. தமிழ் அவருடைய தாய் பாஷை என்பதற்காகத் தமிழில் எழுதினார். ஆங்கிலத்திலோ, பிரெஞ்சு பாஷையிலோ அவர் தம்முடைய தினசரிக் குறிப்புக்களை எழுதியிருந்தாரானால் அமர்க்களப்பட்டிருக்கும் என்றும், எப்படியெல்லாம் பிரமாதப்பட்டிருக்கும் என்றும் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. அப்பாவி! தமிழில் எழுதி ஏமாந்துபோய் விட்டார். தமிழர்கள், தங்கள் தமிழைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டே கபாடபுரத்துக் காவியங்களையும் கடல் கோளையும் பற்றிக் கண்ணீர் பெருக்கிக்கொண்டே, இன்று கிடைப்பதையும் கைநழுவ விட்டு விடுவார்கள் என்பது ஆனந்தரங்கம் பிள்ளைக்குத் தெரியவில்லை. தமிழில், தமிழ் நாட்டில் ஆனந்தரங்கம் பிள்ளையின் தினசரிக் குறிப்புகளுக்கு ஒரு மதிப்பு, தரம் இந்த நூற்றுத்தொண்ணூறு வருஷங்களில் வந்த இல்லை என்பது உண்மையிலேயே பெருமைப்பட முடியாத விஷயம்தான்.

ஆனால் ஆனந்தரங்கம் பிள்ளைக்கு இலக்கிய நோக்கம் சிறிதும் இல்லை. "கொக்குப் பறக்கும் குருவி பறக்கும்" என்று அற்புதமான(!) பாடல்கள் பாடி அவரிடம் திரவியம் பெற்றுப் போகக் கவிகளும் மகாகவிகளும் வந்து போனார்

கள். அவர் வசனம் எழுதியவர்தானே— அந்தக் கவிகளில் பலருக்கு அவருடைய இந்த அனுபவம் தெரியவே தெரியாது.

1709-ல் பிரம்பூரில் பிறந்த ஆனந்தரங்கம் பிள்ளை, இள வயதிலேயே புதுச்சேரி வந்தடைந்தார். வியாபாரத்தாலும், அறிவினாலும், புதுச்சேரியில் பலருடைய கவனத்தைக் கவர்ந்தார். வியாபாரியாக மட்டுமில்லாமல், பிரெஞ்சு கவர்னரின் மந்திரியாகவும், திவானாகவும், துபாஷாகவும் இருந்தார். செல்வாக்கும், செல்வமும் ஏராளமாக வந்தடைந்தன. ஏராளமான தான தருமங்கள் செய்தார்; குளங்கள் வெட்டினார்; தரும சத்திரங்கள் கட்டினார்; அண்டி வந்தவரை ஆதரித்தார். கவி என்று சொல்லிக்கொண்டு வந்தவருக்குக் கூடத் திருப்தி பிறக்கும்படி வாரி வழங்கினார். ராமநாடகக் கீர்த்தனைகள் எழுதிய அருணாசலக் கவிராயருக்கு ஆனந்தரங்கம் பிள்ளையின் அறிவிலே விசேஷ பக்தி. ஸ்ரீரங்கத்தில் தம் ராம நாடகக் கீர்த்தனைகளை அரங்கேற்றி விட்டு, இரண்டாவதாக ஆனந்தரங்கம் பிள்ளையிடம் அவற்றைப் பாடிக் காட்டி விட்டுத்தான் அவற்றை வெளியே பாடுவேன் என்று அவர் சொன்னதாகக்கூட ஒரு கதையுண்டு.

1749-ல் ஆனந்தரங்கம் பிள்ளை மூவாயிரம் குதிரைப் படைகளுக்குத் தலைவரானார். திரைகடலிலே அவருடைய சொந்தக் கப்பல்கள் பல திரவியம் தேடி ஓடிக் கொண்டிருந்தன. செங்கல்பட்டு ஜில்லாவின் ஜாகீர்தார் ஆனார். ட்யூப்ளேயின் அதிகாரத்துக்குட்பட்டு, பணம் காசு அச்சு அடிக்கும் தங்கசாலைக்குத் தலைவரானார். ட்யூப்ளேக்கு மிகவும் நெருங்கியவர் என்று அவரைப் பலர் பாராட்டினார்கள். பலர் பொறாமைப் பட்டார்கள். 1761-ல் புதுச்சேரியை ஆங்கிலேயர் முற்றுகையிட்ட போது, கடைசிவரை இருந்து பார்த்தார். ஆனால் நகரம் ஆங்கிலேயர் வசப்பட்டுவிடும் என்று தெரிந்தவுடன் படகு வழியாகத் தப்பிவிட முயன்றார். அந்த முயற்சியிலே படகில் ஜனவரி 11 (1761) அன்று இறந்து விட்டார்.

எதற்காக அவர் டையரிக் குறிப்புகள் எழுத ஆரம்பித்தார் என்பது தெரியவில்லை. எப்போது ஆரம்பித்தார் என்பதும் தெரியவில்லை. ஆனால் 1736 முதல் அவர் இறந்தது வரையில் விட்டுவிட்டு இந்த டையரிகள் கிடைத்துள்ளன. அவற்றிலுள்ள விசேஷத்தை உணர்ந்து அப்போதைய ஆங்கில சர்க்கார் கிடைத்த பகுதிகளை மொழிபெயர்த்துப் பன்னிரண்டு பாகங்களாக ஆங்கிலத்தில் சென்னையிலிருந்து பிரசுரித்திருக்கிறார்



“கச்சேரியின் போது ஒரே மழையாமே!”

“ஆமாம் சார், கொட்டு கொட்டென்று கொட்டி விட்டது. அப்புறம் வித்வான் அமிர்தவர்ஷிணி ராகத்தை எடுத்துப் பாடினார் ‘டக்’ என்று மழை நின்று விட்டது சார்!”

கள். நாட்டு நடப்பு, ஊர் வம்பு, தன் வியாபார அலுவல்கள், தான் கேட்டுத் தீர்ப்புச் சொன்ன வழக்குகள் எல்லாவற்றையும் விடாமல் குறிப்பெடுத்து எழுதி வைத்திருக்கிறார். ஆரம்ப காலத்தில் அவரே பல வருஷங்கள் தம் கைப்பட இந்தக் குறிப்புக்களை எழுதி வந்தார் என்றும், பிறகு அவர் சொல்வதை அந்தரங்கக் காரியதரிசி எழுதி வந்ததாகவும் தெரிகிறது.

வியாபாரி; நீதிபதி; அதிகாரி; மிகவும் சிக்கலான அரசியல் அலுவல்களில் நெருங்கிய சம்பந்தம் கொண்டவர். இத்தமாதிரியான பலதரப்பட்ட கோணங்களில் இருந்து வாழ்க்கை நடத்திய ஆனந்தரங்கம் பிள்ளையின் தினசரிக் குறிப்புகள் சுவாரசியமான இலக்கியம் அல்லவென்றால், வேறு எதைச் சுவாரசியமான இலக்கியம் என்று சொல்வது? ஆங்கிலத்தில் இந்த டையரிகளைப் படிக்கும்போது நாம் ஆனந்தரங்கம் பிள்ளையைச் சரிவரவே அறிந்துகொள்ள முடிகிறது. எவ்வளவு சாமர்த்தியமாக மனிதர்களையும், மனிதர்களின் மனப்பான்மையையும் எடை போட்டுத் தீர்மானித்துக் கொள்கிறார் அவர் என்று வியக்கத் தோன்றுகிறது. அவர் சம்பந்தப்பட்ட சரித்திரச் சம்பவங்களை அவர் மிகைப் படுத்தாமலும், குறைத்துச் சொல்லாமலும் நிறுத்தி நிதானமாகச் சொல்லும் போது, அவருடைய திறனை வியக்காமல் யாராலும் இருக்க முடியாது! வியாபார நாணயத்தையும், நீதி வழங்குவதில் சந்தர்ப்ப விசேஷங்களையும் அவர் சொல்லித் தான் வேண்டுமென்றே செய்த பட்சபாதமான தீர்ப்பும் சரியானதுதான் என்று ஸ்தாபிக்க முயலும் போது, இன்று நமக்குப் பழக்கப்பட்டுப் போன கதை யுக்திகள் சில நமக்கு ஞாபகம் வருகின்றன. பிரிட்டிஷ்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தென்

ஹிந்தியாவில் ஆதிக்கத்துக்காகப் போராடிய காலம் அது. அந்தக் காலத்தை மிகவும் சிறப்பாக நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் அவர். அந்தக் காலத்து மனிதர்களின் பழக்க வழக்கங்களையும், ராஜாக்களின் பலங்களையும் பலஹீனங்களையும், பிரெஞ்சுக்காரர்களுக்கு நன்மை பயக்கும்படியான வழியிலே அவர் மதிப்பிட்டு ட்யூப்ளேக்கு உதவி செய்த கட்டங்கள் வரும்போது படிப்பதற்கு மிகவும் நூதனமான ஒரு அனுபவமாக அமைகின்றன, ஆனந்த ரங்கம் பிள்ளையின் தினசரிக் குறிப்புகள்.

இலக்கியமாகத் தமிழில் ஆனந்தரங்கம் பிள்ளையுடைய தினசரிக் குறிப்புகள் தமிழருக்குப் பயன் அளிக்கவில்லை என்பது உண்மைதான். அதற்கு ஆனந்தரங்கம் பிள்ளை எவ்விதத்திலும் பொறுப்பில்லை தமிழ் வசனம் அப்போதுதான் பிறந்து உருவாகிக் கொண்டிருந்தது. பெஷிப்பாதிரியாருக்குச் சம காலத்தவரான ஆனந்தரங்கம் பிள்ளை அவரைச் சந்தித்துக் கூட இருக்கலாம். அவர் பரமார்த்த குரு கதையைப் படித்தும் இருக்கலாம். ஆனால் ஆனந்தரங்கம் பிள்ளையைத் தேடி வந்தவர்கள் பாண்டித்தியம் மிக்க கவிகள்தான். தெலுங்கிலும் தமிழிலும் ஆனந்தரங்கம் பிள்ளையை நாயகனாக வைத்துப் பாடிய—காசுக்காகத்தான்—பிரபந்தங்கள் இருப்பதாகத் தெரிகிறது ஆனால் அவரே பண்டிதர் அல்ல. அவர் எழுதிய வசன நூல் பற்றி அவர் காலத்தியவருக்குத் தெரியாது. பிற்காலத்திய தமிழர்களுக்கும் தெரியாது போனதைத் தமிழர்களின் துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

தான் பேசுவதெல்லாம் வசனம், தாமும் கலைஞன் என்று உணர்ந்தேதான், மோலியேரில் வருகிற புதுப் பணக்காரன் போல, ஆனந்தரங்கம் பிள்ளையும் தம் டையரியை எழுதினார் என்று சொல்ல வேண்டும். இந்த வசனம் இலக்கியமாகத் தமிழர்களுக்கு அன்றே கிடைத்திருந்தால், இந்த இருநூறு வருஷ சரித்திரத்தில் ஓரளவுக்குச் சில்லறையான சில மாறுதல்களாவது நாம் எதிர்பார்த்திருக்கலாம். சரித்திர சம்பந்தப்பட்ட ஒரு நூலாகக்கூட அது 1846 வரையில் யார் கவனத்தையும் கவர்ந்ததாகத் தெரியவில்லை. பிறகு அகப்பட்ட பகுதிகள் பிரெஞ்சு பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு அது பத்திரமாக பாரிஸ் நகரத் தேசிய வாசகசாலையில் நிரந்தரமான இடம் பெற்றது. 1892-ல் அதைப்பற்றிக் கேள்விப்பட்டு, சென்னை சர்க்கார் ஒரு ஆங்கில மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்தனர். ஒரு தமிழ்ப் பதிப்பு புதுவையிலிருந்து வெளிவந்திருப்பதாகவும் தெரிகிறது.


ஆங்கிலப் பதிப்புக்கு முன்னுரையில் ஸர் ஜே. எப். ப்ரைஸ் கூறுகிறார்: "மிகவும் சாமர்த்தியசாலியான ஒரு இந்தியர் தமது அந்தரங்க சிந்தனைகளை இந்த ஏடுகளிலே வெளியிட்டிருக்கிறார். மிகவும் சுதந்திரத்துடன் மனத்தில் நினைத்ததைச் சொல்லியிருக்கிறார். எஜமானர்கள், நண்பர்கள், விரோதிகள் எல்லோரையும் பற்றி விரிவாக எவ்வித ஒளிவு மறைவுமில்லாமல் எழுதியிருக்கிறார். முக்கியமான விஷயங்களுடன் முக்கியமில்லாததையும் கலந்து எழுதிய இந்த ஆசிரியரை இந்திய 'பெபிஸ்' என்று சொல்வது தகும்." (ஆங்கில இலக்கியத்தில் இடம் பெற்ற ஒரு தினசரிக் குறிப்பாசிரியர் பெபிஸ் என்பவர்.)

"அந்தக் காலத்துக் காட்சிகளும் சம்பவங்களும் ஒன்றன் பின் ஒன்றாக நம் மனக்கண்முன் இந்தத் தினசரிக் குறிப்புகளைப் படிக்கும்போது ஓடுகின்றன. உண்மை மனிதர்களை நம் மனக் கண் முன்னால் கொணர்ந்து நிறுத்தும் அவர் எழுத்து வன்மையை வியக்காமல் இருக்க முடியாது. சிறிய விஷயங்களையும் பொருத்தி அமைத்து அழகாக எழுதினார் ஆனந்தரங்கம் பிள்ளை" என்று வ. வே. சு. ஐயர் இந்தத் தினசரிக் குறிப்புகள் பற்றி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!

CCHO/G/5



கப் காலி
என்றால்...
டீ நன்றாக
இருந்தது!
இதன் பூரண தன்மையை அனுபவிப்பதற்கு டீ சரியாகத்
தயாரிக்கப்பட வேண்டும். டீ சென்டர்களில், திங்கட்கிழமை
தவிர, தினசரி பகல் 12 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்கும்
டீ தயாரிக்கும் முறையை செய்து காட்டுகிறார்கள்.
உங்கள் நண்பர்களுடன் வாருங்கள். கிளப்கள்,
காண்டீன்கள், ஹோடல்கள், ஆஸ்பத்திரிகள்
தங்கள் சிப்பந்திகளை அனுப்பலாம்.
நான்தான் டீ - என்னை டீ சென்டரில் சந்தியுங்கள்
78, வீர்நரிமன் ரோட், பம்பாய் ● 177-179, மவுண்ட் ரோட், சென்னை
TEA BOARD INDIA



பாண்டிமா தேவி

நா. பார்த்தசாரதி

பத்தாம் அத்தியாயம்

விலாசினியின் வியப்பு

அரண்மனைத் தோட்டத்து மரத்தடியில் தளபதியை அந்தரங்கமாகச் சந்தித்த பின் பகவதிக்குச் சுறுசுறுப்பாகத் திட்டமிட்டுக் கொண்டு செய்ய வேண்டிய சில காரியங்கள் இருந்தன. அண்ணன் அவளிடம் சொல்லி விட்டுப் போயிருந்த செயல்கள் எத்துணைப்பெரியவை? அவற்றை ஒழுங்காகவும், பிறருக்குத் தெரியாமலும் செய்து முடிப்பதற்கு எவ்வளவு சூழ்ச்சியும், சாதுரியமும் வேண்டும்?

தமையனின் அந்தச் சொற்கள் அவளுடைய செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன.

"நீ என்னுடைய தங்கை...! இந்தச் சூழ்நிலையில் என்னுடைய தங்கையிடமிருந்து நான் சில வீரச் செயல்களை எதிர்பார்க்கிறேன்."

நாட்டின் பயங்கரமான சூழ்நிலையை விளக்க அண்ணன் உதாரணமாகக் கூறிய துன்பக் கதையை நினைத்துக் கொண்டபோது அவனுடைய கதை கூறும் திறமையை எண்ணிச் சிரிப்பு வந்தது அவளுக்கு.

'எவ்வளவு இரகசியமாக, எவ்வளவு

நம்பிக்கையோடு அண்ணன் இந்தக் காரியங்களை அவளிடம் ஒப்படைத்துப் போயிருக்கிறான்? இதை எண்ணும் போது மட்டும் ஈடில்லாத பெருமிதத்தை அடைந்தாள் பகவதி. எல்லாப் பொறுப்புக்களையும் தன்னுடையதாக இழுத்துப் போட்டுக் கொண்டு செயலாற்ற முந்தும் ஒரு வீரனுக்கு உடன் பிறந்தவள்தான் அப்படிப் பட்ட பெருமிதத்தை அடையலாம்.

அவள் தோட்டத்துக்குப் போய் விட்டுத் திரும்பி வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஆசிரியர் மகள் விலாசினி அவளைத் தேடிக்கொண்டு வந்தாள்.

"என்னடியம்மா! இடீரென்று உன்னை இங்கே காணவில்லை? சிறிது நேரத்துக்கு முன்னால் இங்கு வந்தேன். நீ இல்லாததால் திரும்பிப் போய் விட்டேன்" என்றாள் விலாசினி.



"அதங்கோட்டாசிரியர்பிரானின் அருமைப் புதல்வியார் தேடிக் கொண்டு வரப்போகும் விவரம் முன்பே தெரிந்திருந்தால் நான் இந்த இடத்தை விட்டு நகர்ந்திருக்கவே மாட்டேன். மன்னித்தருள வேண்டும்" என்று சிரிக்காமல் பேசினாள் அவள். விலாசினி செல்லமாகக் கோபித்துக் கொள்வது போல் பகவதியை உறுத்துப் பார்த்தாள்.

"போதும், கேலிப் பேச்சு! சற்று முன் எங்கே போயிருந்தாய் நீ?"

"கேட்கிற கேள்வியைப் பார்த்தால் உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் நான் எங்கும், எதற்கும் போய்விட்டு வரக் கூடாது போல் அல்லவா இருக்கிறது?" என்றாள் பகவதி வியப்புடன்.

"போ போ! நன்றாகப் போய்விட்டு வா. எனக்கென்ன வந்தது? உன்னைப் போகக் கூடாது என்று தடுக்க நான் யார்? மகாராணி உன்னைப் பார்த்துக் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னார்கள். அதனால்தான் வந்தேன்!"

ஒரு பிணக்குமில்லாமலே சண்டை போடுவது போல் இப்படிப் பொய்க் கோபத்தோடு பேசிக் கொள்வது அந்த இரு பெண்களுக்கும் பொழுது போக்கான ஒரு விளையாட்டு. 'மகாராணி' என்ற பெயரை விலாசினி எடுத்தவுடன் பகவதி கலவரமடைந்தாள். விலாசினி தான் ஏதாவது அரட்டை அடிப்பதற்குத் தேடி வந்திருப்பாள் என்று எண்ணி வம்பு பேசிய பகவதி பரபரப்புற்று, "ஐயோ! மகாராணியா கூப்பிட்டார்கள்? வந்தவுடனே இதைச் சொல்லியிருக்கக் கூடாதா நீ?" என்று அவளைத் துரிதப்படுத்தி வினவினாள்.

"ஏனடி பதறுகிறாய்? ஒன்றும் அவசரமான காரியமில்லை. கோட்டாற்றுச் சமணப் பள்ளியிலிருந்து அந்த மொட்டைத் தலைச் சாமியார்கள் வந்து மகாராணியிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து மகாராணி ஏதோ ஒரு பாட்டை எழுதி வாங்கி வைத்துக் கொண்டார். அதை உன் வாயால் பண்ணோடு பாடிக் கேட்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறதாம்!" என்றாள் விலாசினி.

"இவ்வளவுதானா?"

"இவ்வளவேதான் செய்தி. நீ அன்று நிலா முற்றத்தில் என் நடனத்தின் போது பாடிய திருவாசகப் பாட்டைக் கேட்டதிலிருந்தே உன்னுடைய குரலில் மகாராணிக்கு ஒரே மோகம்."

"ஏன்? உன் நாட்டியத்தில் மட்டும் மோகமில்லையாக்கும்?" விலாசினியை எதிர்த்துக் கேட்டாள் பகவதி.

"சரி, சரி, நீ வா. மகாராணியைப் போய்ப் பார்த்து விட்டு வந்து அப்புறம் நமக்குள் வம்பளக்கலாம்" என்று குரலைக் கடுமையாக்கிக் கொண்டு பகவதியைக் கூப்பிட்டாள் அவள்.

அவசரம் அவசரமாக உடைமாற்றி அலங்கரித்துக் கொண்டு விலாசினியோடு புறப்பட்டாள் பகவதி.

மகாராணி அவர்களை அன்போடு வரவேற்றாள். "பகவதி! இன்று என் உள்ளம் பல காரணங்களினால் அலமந்து கிடக்கிறது. இந்த மாதிரிக் கவலைகளை மறக்கத் தெய்வத்தை நினைக்க வேண்டும், அல்லது தீந்தமிழ் இசையைக் கேட்க வேண்டும். கோட்டாற்றுப் பண்டிதர் வந்து கவலைக்கு மருந்தளித்துப் பேசிக் கொண்டிருந்தார். அவரும் போய்விட்டார். உன்னுடைய வாயால் பாடிக் கேட்க வேண்டுமென்பதற்காகவே அவரிடம் இந்தப் பாட்டை நான் எழுதி வாங்கிக் கொண்டேன்."

பகவதியின் கையில் அந்த ஓலையைக் கொடுத்தார் மகாராணி. ஒருதரம் வாய்க்குள் முணுமுணுத்தாற் போல் பாடிப் பார்த்துக் கொண்டு அதற்குப் பண் நிர்ணயம் செய்யச் சில கணங்கள் பிடித்தன அவளுக்கு.

"தேவி! இந்தப் பாடலைப் பழம்பஞ்சுரப் பண்ணிலும் பாடலாம்; இந்தளப் பண்ணிலும் பாடலாம்."



" இரண்டிலுமே தனித் தனியாகப் பாடிக் காட்டேன், கேட்கலாம்!" - மகாராணியாரிடமிருந்து ஆணை பிறந்தது.

மோனத்தைக் கிழித்துக் கொண்டு பழமபஞ்சரம் எழுந்தது. பின்பு இந்தளம் இனிமை பரப்பியது. பகவதியே வீணையும் வாசித்துக் கொண்டாள். பொல பொலவென்று பூக்குவியலை அள்ளிச் சொரிவது போல் ஒரு மென்மையை எங்கும் இழைய விட்டது அவள் குரல். செவி வழிப் புகுந்து பாய்ந்த அந்த இனிமையில் தன்னை மறந்து இலயித்துப் போய்ச் சிலையாய் வீற்றிருந்த மகாராணிக்குச் சுய நினைவு வந்தது. பகவதி பாடல் ஓலையைத் திருப்பி அளித்தாள்.

" குழந்தைகளே! நம்முடைய தமிழ் மொழிக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது, பார்த்தீர்களா? பேசினால் ஒரு வகை ஞானிமை. பாடினால் ஒரு வகை இனிமை. எழுதினால் ஒரு வகை இனிமை. இறைவன் இந்த மொழிக்குள் எத்தனை கோடி இன்பங்களை வைத்திருக்கிறான்!" என்று மகாராணி வியந்து கூறினார்.

பாடற் பண்களின் பெயர்களைப் பற்றிய ஆராய்ச்சி, நாட்டியத்தில் மெய்ப்பாடு வகைகள், இவ்வாறு எதையெதையோ பற்றி மகாராணியோடு சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்து விட்டு விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டனர் அந்தப் பெண்கள் இருவரும். போகும்போது விலாசினி மறுபடியும் பகவதியின் வாயைக் கிண்டி

னாள். "இப்போது நீயே சொல்! மகாராணிக்கு உன்னுடைய பாடலில் எவ்வளவு ஆசை தெரியுமா?"

"போடி, பைத்தியமே! ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை மாதிரித்தான் நீயும் நானும். ஏதோ ஆளுக்கொரு கலை அரைகுறையாகத் தெரியும். உனக்கு நாட்டியம் தெரிந்த அளவு பாடத் தெரியாது. எனக்குப் பாடத் தெரிந்த அளவு ஆடத் தெரியாது! எல்லாக் கலைகளும் தெரிந்த பெண்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இடையாற்று மங்கலத்து நங்கை குழல்மொழி—அவளை நீயும், நானும், சிறுவயதில் பார்த்தது. இப்போது அவள் எப்படி இருக்கிறாளாம், தெரியுமா? ஆடல், பாடல், பேச்சு, சிரிப்பு, கண்பார்வை, அத்தனையும், அத்தனை கலைகளாம் அவளிடம். அவள் இங்கு வந்து மகாராணியோடு ஒருநான்கு ஐந்து நாட்கள் நெருங்கிப் பழகி விட்டால் நீயும், நானும், பின்பு இருக்குமிடமே தெரியாது."—பகவதி நிறுத்தாமல் பேசிக் கொண்டே போனாள். திடீரென்று தொடர்பில்லாமல் அவள் இடையாற்று மங்கலம் நங்கையைப் பற்றிப் பேசுவதற்குக் காரணமென்னவென்று விலாசினிக்கு விளங்கவில்லை. அவள் வியப்பு அடைந்தாள்.

"ஏதடி அம்மா? திடீரென்று அந்தப் பெண்ணின் மேல் உனக்கு இவ்வளவு பொறாமை?"

"பொறாமையாவது, ஒன்றாவது? அவளைப் பற்றி இன்றைக்குச் சில செய்திகள் கேள்விப்பட்டேன். அதிலிருந்து அதே நினைவு!" என்றாள்.

"யாரிடத்தில் கேள்விப்பட்டாயோ?" விலாசினியிடமிருந்து இந்தக் கேள்வியைப் பகவதி எதிர்பார்க்கவே இல்லை. வாய் தவறிப் பேச்சுவாக்கில் தனக்கு இரகசியமாகக் கூறப்பட்டவற்றை வெளிப்படையாக வெளியிட்டு விட்டதை எண்ணி உதட்டைக் கடித்துக் கொண்டாள். 'கொஞ்சம் பொறுமை தலை காட்டினால் என்னைப் போன்ற ஒரு பெண் எவ்வளவு சாதாரணமாக அதைக் காட்டிக் கொண்டு விடுகிறாள்?' என்று தன்னையே கடிந்து கொண்டாள்.



திரு பி. எம். தர்மேசுவர முதலியாரின் புதல்வி சௌ. ஜயமணியின் நடன அரங்கேற்றம் நவம்பர் மாதம் 17ந் தேதி விமரிசையாக நடைபெற்றது.

"என்னடி பகவதி? நான் கேட்கிறேன். பதில் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்து விட்டாய்?"

பகவதி அவளுடைய கேள்விக்குப் பதிலே சொல்லாமல் பேச்சை வேறு திசையில் மாற்றிப் பார்த்தாள். ஆனால் அவள் விடவில்லை. பகவதியைத் துளைத்தெடுத்து விட்டாள்.

"இடையாற்று மங்கலத்துப் பெண்ணைப் பற்றித் தெரியாமல் உன்னிடம் சொல்லி விட்டேனடி, அம்மா! நீ என்னைத் தூண்டித் துருவிக் கேள்வி கேட்டு வாயைப் பிடுங்காதே!" என்று சிறிதளவு கடுமையான குரலில் எரிந்து விழுந்தாள் பகவதி. விலாசினிக்கு முகம் சுண்டி விட்டது. பேசுவதற்கு ஒன்றும் தோன்றாமல் வாயடைத்துப் போய் நின்றாள் அவள். அந்த நிலையில் பகவதியோடு அங்கிருப்பதற்கே பிடிக்கவில்லை அவளுக்கு.

"நான் அப்புறம் வந்து சந்திக்கிறேன்! இப்போது உன் மனநிலை சரியில்லை போலிருக்கிறது" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டாள். "விலாசினி! மனநிலையெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. நீ போகாதே. சிறிதுநேரம் இரு. பேசிக் கொண்டிருக்கலாம்" என்று பகவதி கூப்பிட்டும் அழைத்தக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல் நிற்காமல் போய்விட்டாள் அவள்.

"அடாடா! வீணாக இவள் மனத்தைப் புண்படுத்தி விட்டேனே" என்று உள்ளூற வருந்தினாள் பகவதி. பின்பு ஏதோ ஒரு திட்டமான முடிவுக்கு வந்தவள் போன்ற முகபாவத்துடனே தான் தங்கியிருந்த அந்தப்புரப் பகுதியின் அறைக் கதவை உட்புறமாக அடைத்துத் தாழிட்டாள்.

அப்படிக் கதவு அடைத்துத் தாழிடப் படுவதைக் கீழே தோட்டத்து வழியாக இறங்கிப் போய்க் கொண்டிருந்த விலாசினி பார்த்து விட்டுப் போனாள். இருந்தாற் போலிருந்து, 'பகவதிக்கு என்ன வந்துவிட்டது?' என்ற சிந்தனைதான் அவள் உள்ளத்தில் போகும்போது

புரண்டு கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்துக்குப் பின் தன் தந்தை அதங் கோட்டாசிரியரைச் சந்தித்த போது அவள் அதையும் மறந்துவிட நேர்ந்தது.

"விலாசினி! நாளைக் காலையில் நானும் பவழக்கனிவாயரும் ஊருக்குப் புறப்பட ஏற்பாடு செய்திருக்கிறோம். நீ எங்களோடு வருகிறாயா? அல்லது இங்கே அரண்மனையிலேயே இன்னும் சில நாட்கள் தங்கியிருக்கப் போகிறாயா? உன் விருப்பம் போல் செய்யலாம். நான் எதையும் வற்புறுத்தவில்லை. நீ இங்கே தங்கியிருந்தால் மகாராணியாருக்கு ஆறுதலாகவும், துணையாகவும் இருக்கும் போலிருக்கிறது. உன் தோழி பகவதி வேறு இங்கு இருக்கிறாள். உங்கள் இருவரையும் சமீபத்தில் ஊருக்குப் போக விடும் நோக்கம் மகாராணியாருக்கு இல்லை என்பதை அவர்களோடு பேசிக் கொண்டிருக்கும்போது குறிப்பாக அறிந்தேன்" என்று மகளிடம் கூறினார் ஆசிரியர்பிரான். 'இங்கிருப்பதா? ஊருக்குப் போவதா?' என்று ஒரு சிறு போராட்டம் இரண்டொரு விநாடிகள் அவள் மனத்தில் நிகழ்ந்தது.

"அவசரமில்லை! நிதானமாக யோசித்துச் சொல்லம்மா" என்றார் அவளுடைய அருமைத் தந்தை.

"யோசிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது, அப்பா? நான் இருந்தே வருகிறேன். நீங்கள் நாளைக்குப் போய்விட்டு வாருங்கள்!" ஒரு தீர்மானமான முடிவுடன் தந்தைக்கு மறுமொழி கூறிவிட்டாள் அவள்.

"மிகவும் நல்லது! இதைத்தானே நானும் சொன்னேன்" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டுப் போய்விட்டார் ஆசிரியர்பிரான்.

என்னதான் எடுத்தெறிந்து பேசிவிட்டாலும் பழக்கமானவர்களைச் சந்திக்காமல் இருக்க மனம் ஒப்புவதில்லையே? பகவதியிடம் பேசிக் கொண்டிருந்த போது 'மனமுறிவு ஏற்பட்டுத் திடீரென்று' தான் அங்கிருந்து வந்து விட்டதை அவள் தப்பாக எடுத்துக் கொள்வாளோ என்ற எண்ணம் அன்றிரவு படுக்கையில் படுத்தபோது மீண்டும் விலாசினியைப் பற்றிக்கொண்டது. அப்போது இரவு பத்துப் பதினொரு நாழிகைக்கு மேலாகியிருக்கும். அரண்மனையில் அமைதி பரவத் தொடங்கியிருந்தது. பகவதியைப் போய்ப் பார்த்து அவளோடு சிறிதுபோது பேசிக் கொண்டிருந்து விட்டு வந்தால்தான் நிம்மதி உண்டாகும் போலிருந்தது. விலாசினிக்கு மிக மென்மையான சுபாவம். பிறர் தன்னை நோகச் செய்தாலும் சரி, தான் அறியாமல் பிறரை நோகச் செய்தாலும் சரி, விரைவில் அதற்காக வாட்டமடைந்துவிடுவது அவள் இயல்பு. உறக்கம் வராமல் மஞ்சத்தில் இதே நினைவோடு புரண்டு கொண்டிருந்த விலாசினி, "போய் அவளைப் பார்த்துப் பேசிவிட்டே திரும்புவது" என்ற உறுதியுடன் கிளம்பினாள். முன்பெல்லாம் அவர்கள் ஒரே இடத்தில் அருகருகே சேர்ந்து படுத்துக் கொள்வார்கள். தூக்கம் வரும்வரை எதைப் பற்றியாவது பேசிக் கொண்டிருந்து விட்டுத் தூங்குவார்கள். இப்போது தனித்தனியே அவரவர்கள் தங்கியிருந்த இடங்களில் படுத்துக் கொண்டதால் விலாசினி பகவதியைப் போய்ப் பார்க்க வேண்டியிருந்தது. 'அதற்குள் பகவதி படுத்துத் தூங்கியிருந்தால் என்ன செய்வது?'



என்ற சந்தேகம் போகும்போது அவளுக்கு ஏற்பட்டது. 'தூங்கியிருந்தால் பேசாமல் திரும்பி வந்து விடுவோம். காலையில் பார்த்துக் கொள்ளலாம்' என்று தனக்குத் தானே சமாதானமும் செய்து கொண்டு மேலே நடந்தாள்.

விலாசினி பகவதியின் அறைவாசலை அடைந்தபோது அறைக்குள் விளக்கெரிவது தெரிந்தது. 'தூங்கவில்லை. விழித்துக்கொண்டுதான் இருக்கிறாள்போலும்' என்று தனக்குள் மெல்லச் சொல்லிக் கொண்டாள் விலாசினி. அறையின் கதவு அடைத்து உட்புறமாகத் தாழிட்டிருப்பது போல் தெரிந்தது. விலாசினிக்குக் கதவைத் தட்டலாமா, வேண்டாமா என்று ஒரு தயக்கம் ஏற்பட்டது.

அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டுக் கதவைத் தட்டலாம் என்று அறைக் கதவின் இடப் பக்கம் இருந்த சாளரத்தை நெருங்கி உள்ளே எட்டிப் பார்க்க முயன்றாள் அவள். சுவரில் சாளரம் அவளுடைய உயரத்தைவிட அதிகமான உயரமுள்ள இடத்தில் அமைந்திருந்ததனால் எட்டவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் திகைப்பும், வியப்பும் அடைந்து சுற்றும் முற்றும் மருண்டு பார்த்துக் கொண்டு நின்றாள் விலாசினி. அப்போது அங்கே ஒரு மூலையில் கிடந்த மர முக்காலி அவளுக்கு அபயமளித்தது. அந்தப் பகுதியில் விதானத்திலுள்ள சரவிளக்குகளை ஏற்ற வரும் அரண்மனைப் பணிப் பெண்கள் உயரத்துக்காக அதை இழுத்துப் போட்டுக் கொண்டு அதன் மேல் நின்று விளக்கேற்றுவார்கள். அந்த முக்காலியையும் அங்கே போட்டு விட்டுப் போன அரண்மனைப் பணிப் பெண்களையும் மனமார வாழ்த்திவிட்டு ஓசைப்படாமல் அதைத் தூக்கிச் சாளரத்தை ஒட்டினாற் போலச் சுவர் அருகில் கீழே வைத்தாள்.

கால் சிலம்புகள், கைவளைகள் ஓசைப் பட்டு விடாமல் மெதுவாக முக்காலியின்மேல் ஏறி நின்று உள்ளே பார்த்தாள். அவளுடைய கண்கள் அகன்று விரிந்து செவிகள் வரை நீண்டன. வியப்பின் எல்லையா அது! அறைக்குள் பிரும்மாண்டமான நிலைக்கண்ணாடிக்கு முன்னால் இடையில் வாளும் தலையில் அழகாகத் தலைப்பாகையும் தரித்துப் பெண்மைச் சாயல் கொண்ட முகமுள்ள ஒரு இளைஞன் நின்று அழகு பார்த்துக் கொண்டிருந்தான். விலாசினி வியப்பு, திகைப்பு, பயம், சந்தேகம் எல்லா உணர்ச்சிகளையும் ஒருங்கே அடைந்தாள். மேலும் உற்றுப் பார்த்தாள். உண்மை தெரிந்தபோது அவளுக்குச் சிரிப்பு வந்தது; முகமும் மலர்ந்தது.

இளைஞனாவது, கிழவனாவது, பகவதி தான் ஆண் வேடத்தில் கண்ணாடிக்கு முன் நின்று அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். உற்றுப் பார்த்து அதை நிதானிக்கச் சில விநாடிகள் பிடித்தன அவளுக்கு. உள்ளே பகவதி இருந்த நிலையைப் பார்த்தபோது அவள் அந்த வேடத்தோடு எங்கோ கிளம்பத் தயாராகிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

விலாசினி சட்டென்று முக்காலியிலிருந்து இறங்கி அங்கே அதிக இருட்டாயிருந்த ஒரு மூலையில் பதுங்கி நின்று கவனிக்கலானாள். பகவதி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். அறை வாசலில் கிடந்த இரண்டு மூன்று மாவடுக்களில் ஒன்றை எடுத்துத் தோட்டத்துப் பக்கமாக எறிந்தாள். அங்கே சலசலப்பு உண்டாயிற்று. மறுகணம் ஆபத்துதவிகள் தலைவனின் தலை மாமரத்துப் புதரிலிருந்து எட்டிப் பார்த்தது. பகவதி ஏதோ சைகை செய்து விட்டுக் கீழே இறங்கிப் போனாள். குழைக்காதனும், ஆண் உடையிலிருந்த பகவதியும் மதிலோரமாகப் பதுங்கிப் பதுங்கி எங்கோ செல்வதை மறைந்து நின்ற விலாசினி கவனித்தாள். பின்பு திரும்பிப் போய்ப் படுத்துக் கொண்டாள். விடிந்ததும் அவள் தந்தை ஊருக்குப் புறப்பட்டபோது, பிடிவாதமாக அவளும் ஊருக்குக் கிளம்பினது கண்டு அவள் தந்தை ஆச்சரியம் அடைந்தார்.

பதினோராம் அத்தியாயம்

அந்தரங்கத் திருமுகம்

ஆத்திரம் கொண்ட போர்வீரனின் கைகளில் வில் வளைவதைப் போல் குழல்மொழியின் புருவங்கள் வளைந்தன. அரண்மனையிலிருந்து நாராயணன் சேந்தனும், வேளானும் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டதும் அவர்களைக் காண்பதற்காக இடையாற்றுமங்கலத்து அந்தப்புர மேல்மாடத்திலிருந்து கீழே படியிறங்கி வந்து கொண்டிருந்தாள் அவள். 'தன் தந்தை தனக்கு அதிகம் செல்லம் கொடுத்துக் கெடுத்து விட்டதாக நாராயணன் சேந்தன் யாரிடமோ கூறிக் கொண்டிருந்த அந்தச் சொற்களைக் கேட்டவுடன் அவனைச் சந்திக்காமலே திரும்பி விடலாம் என்று கூட அவள் எண்ணினாள். அத்தனை கோபம் அவளுக்கு உண்டாயிற்று. 'தன் தந்தைக்கு அந்தரங்கமானவனாக இருக்கலாம்; நெருங்கிப் பழகி ஒட்டுறவு கொண்டிருக்கலாம். ஆனால் அதற்காகத் தன்னைப் பற்றி அப்படிப் பேச அவனுக்கு என்ன உரிமை?'

ஆத்திர மிகுதியால் அவனைப் பார்க்காமலே திரும்பிப் போய் விட நினைத்தவள் அப்படிச் செய்யவில்லை. அவனிடமே ஆத்திரந் தீர நேரில் கேட்டு விடுவதென்று வந்தாள். எவ்வளவு கடுமையான சூழ்நிலையாக இருந்தாலும்

தன்னிடம் சிரித்துப் பேசி அரட்டையடிக்கும் நாராயணன் சேந்தன் அன்று அவ்வாறு பேசியது அவள் உள்ளத்தில் உறைத்தது.

வேகமாகக் கீழே இறங்கிப் போய் ஒன்றும் பேசாமல் சினத்தைக் காட்டும் முகக் குறிப்புடன் அவன் முன் நின்றாள். படகோட்டி வேளானும், சில மெய்காவல் வீரர்களும் சூழ நின்று பேசிக் கொண்டிருந்த சேந்தன் அவள் அருகில் வந்து நின்றதும் பேச்சை நிறுத்தினான். குழல்மொழியின் பக்கமாகத் திரும்பி, "அம்மணீ! வணக்கம்...தங்களைத்தான் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன். கூற்றத் தலைவர்கள் கூட்டம் முடிந்தும், தவிர்க்க முடியாத காரணங்களால் மகாமண்டலேசுவரர் அரண்மனையிலேயே தொடர்ந்து தங்க நேரிட்டு விட்டது. ஆனாலும் தாங்கள் இங்கே இப்படியெல்லாம் நடக்க விட்டு விடுவீர்களென்று நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை. தங்கள் தந்தை அதிகமாகக் கவலைப் படும்படியான சூழ்நிலையைத் தாங்கள் உண்டாக்கியிருக்கிறீர்கள்.".....

குழல்மொழி புருவங்களுக்கு மேலே நெற்றி மேடு புடைக்க, முகம் சிவக்க, கோபத் துடிப்புடன் இரைந்தாள்.

"ஐயா! போதும்; நிறுத்துங்கள். நீங்கள் மிகவும் பெரியவர். எத்தனையோ குடும்பங்களில் எவ்வளவோ தந்தைமார்களுக்கு அறிவுரை கூறிப் பழகியவர். உங்கள் அறிவுரை கிடைக்காததனால் தான் என் தந்தை அநாவசியமாக எனக்குச் செல்லம் கொடுத்துப் பாழாக்கி விட்டார். இனிமேலாவது அவருக்குத் தக்க சமயத்தில் அறிவுரை கூறி எனக்குச் செல்லம் கொடுத்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."—

அவளிடமிருந்து வார்த்தைகளை வாங்கிக் கட்டிக் கொண்ட நாராயணன் சேந்தன் சிறிது நேரம் அந்தப் பெண்ணின் கோபத்தைப் போக்க வழி வகை தெரியாமல் தயங்கினான். அவளைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்ததைப் படியிறங்கி வரும்போது அவள் கேட்டுக் கொண்டே வந்திருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது.

"வருத்தப்பட்டுக் கொள்ளாதீர்கள். நான் சற்று முன் தங்களைப் பற்றி இங்கே பேசிக் கொண்டிருந்ததைத் தாங்களும் கேட்டுக் கொண்டே வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. நான் ஒன்றும் தவறாகச் சொல்லி விடவில்லை. மகாமண்டலேசுவரர் இல்லாத சமயத்தில் இங்கு நடந்திருக்கும் கவலை தரும் நிகழ்ச்சிகளை நினைத்து உணர்ச்சி வசப்பட்டு அவ்வாறு பேசியிருப்பேன். அதை ஒரு தவறாக எடுத்துக் கொண்டு என் மேல் கோபித்துக் கொள்ளக் கூடாது."—

"உங்கள்மேல் கோபித்துக் கொள்வதற்கு நான் யார்? அப்படியே கோபித்துக் கொண்டாலும் என்னுடைய கோபம் உங்களை என்ன செய்து விடப் போகிறது?"—

குழல் மொழி சமாதானப் பட்டு வழிக்கு வருவதாகத் தெரியவில்லை. கோபம் வரும் போது பெண்களுக்கு இயல்பாக ஏற்படும் வீம்பும், முரண்டும் அவளிடமும் இருந்தன. நாராயணன் சேந்தன் குழைந்தான்; கெஞ்சினான். என்னென்னவோ பேசி அவளைச் சமாதானப் படுத்த முயன்றான். வீம்பு நீடித்ததே தவிரக் குறையவில்லை. உலகத்தில் சிரமப்பட்டுத்தான் செய்ய முடியும் என்ற வகையைச் சேர்ந்த காரியங்களில் பெண்களின் வீம்புக்



கோபத்தைச் சமாதானப் படுத்துவதும் ஒன்று என அவனுக்குத் தோன்றியது.

கடைசியாக, அவளைச் சமாதானப் படுத்தி முடித்தபோதுதான் சேந்தனுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

"நீங்களே இப்படிக் கோபித்துக் கொண்டால் நான் என்ன செய்வது? உங்கள் தந்தை உங்களை உடன் வைத்துக் கொண்டு செய்ய வேண்டிய பெரிய பெரிய செயல்களையெல்லாம் என்னிடம் ஒப்புவித்திருக்கிறார். முக்கியமும், அவசரமும் வாய்ந்த செய்திகளை அனுப்பியிருக்கிறார். நாம் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். நீங்கள் முரண்டு பிடித்தால் ஒன்றும் ஆகாது."—



பிரான்ஸ் தேசத்துப் பிரதம மந்திரி டிகாலின் விசேஷத் தூதுவராக வந்திருந்த மந்திரி ஆண்ட்ரி மால்ரோ நவம்பர் 29ந் தேதி சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்துக்கு விஜயம் செய்தார். அவர் முன்னிலையில் நடைபெற்ற சங்கீத நிகழ்ச்சியை அவர் ரசிப்பதைக் காணலாம்.

"முக்கியமும், அவசரமுமில்லாத நேரம் அப்பாவுக்கு எப்போது தான் இருந்தது? நாட்டைப் பற்றியும், அரசாங்கத்தைப் பற்றியும் கவலைப்பட்டுக் கவலைப் பட்டுத் தம்முடைய உடல் நலத்தைப் பற்றிக் கவலைப்படுவதற்கு நேரம் இல்லை அவருக்கு. வெளியே யாரிடமும் சொல்லாமல் பொதுக் கவலைகளையும், துன்பங்களையும், மனத்தில் தேக்கி வைத்துக் கொண்டு என்ன சுகம் கிடைத்து விட்டது அவருக்கு?" குழல்மொழியின் பேச்சு பிடிவாதத்திலிருந்து விலகிப் போய்த் தந்தையின்மேல் அனுதாபமாக வெளிவந்தது.

"உங்களுக்கே அவையெல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கின்றனவே, அம்மணி! உங்கள் தந்தைக்கு இருக்கும் பொறுப்புக்களையும், கவலைகளையும் சொல்லி நீங்களே இரக்கப்படுகிறீர்கள். தமது மாளிகையில் தம் பொறுப்பில் வைக்கப் பட்டிருந்த அரசுரிமைப் பொருள்கள் கொள்ளை போய் விட்டதென்று தெரிந்தால் அவர் எப்படி அதிர்ச்சியடையாமல் இருக்க முடியும்?" சேந்தனுடைய பேச்சு வளர்கிற விதத்தைக் கண்டு குழல்மொழிக்கு வேறு ஒரு வகை அச்சம் ஏற்பட்டது. 'வசந்த மண்டபத்திலிருந்த துறவி காணாமற் போனது பற்றியும், தன்னிடம் அவன் தூண்டித் துளைத்து ஏதாவது கேள்விகள் கேட்பானோ?' என்று சிறிது கலவரமடைந்தது அவள் உள்ளம். இந்தக் கலவரமும், தந்தையிடமிருந்து அவன் கொண்டு வந்திருக்கும் முக்கியச் செய்திகளைத் தெரிந்து கொள்ளும் ஆவலும் அவள் சினத்தைப் போக்கி விட்டன.

பிறர் எந்தச் செய்தியைத் தன் வாயிலிருந்து கேட்பதற்கு அதிக ஆர்வத்தோடு துடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்தச் செய்தியை உடனடியாகச் சொல்லி முடித்துவிடாமல் அவர்களுடைய ஆவலைத் தொடரச் செய்து தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் தந்திரத்தை மேற்கொண்டான் நாராயணன் சேந்தன்.

"மகாமண்டலேசுவரருடைய திருக்குமாரியிடம் அதிகப்படியான கேள்விகளைக் கேட்டுப் புண்படுத்த வேண்டுமென்று நான் கருதவில்லை. அதே சமயத்தில் ஒன்றும் கேட்க விரும்பாமலும் இருக்க முடியவில்லை!"

"கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது? இங்கே நடந்தவற்றையெல்லாம்தான் அம்பலவன் வேளான் அங்கு வந்து தெளிவாகச் சொல்லியிருப்பானே!"

குழல்மொழியிடமிருந்து கொஞ்சம் அமைதியாகவே பதில் வந்தது. முன்பிருந்த படபடப்பும், ஆத்திரமும் அதில் இல்லை. நாராயணன் சேந்தன் சிரித்துக் கொண்டான். 'அப்பப்பா! தங்கம் நிறுக்கும் பொன் வணிகனைப் போல் மகாமண்டலேசுவரர்தான் ஒரு சொல் மிகாமல், ஒரு சொல் குறையாமல், அளந்து எண்ணி அளந்து பேசுவார் என்றால் அவருடைய புதல்வி அவரைக் காட்டிலும் அழுத்தமாக இருக்கிறாளே?' என்று அவன் மனத்துக்குள் நினைத்துக் கொண்ட நினைப்பின் சாயைதான் சிரிப்பாக வெளிப்பட்டு மறைந்தது.

"என்னிடம் எதையெல்லாமோ கேட்டு நேரத்தைக் கடத்துகிறீர்களே தவிர, என் தந்தை உங்களிடம் கூறி அனுப்பியிருப்பதாகச் சொன்ன முக்கியச் செய்திகளைப் பற்றி நீங்கள் கூறப் போவதாகவே தெரியவில்லையே?"

"அவற்றை இந்த அகால நேரத்தில் இங்கு நான் விவரித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் நீங்களே படித்துத் தெரிந்து கொள்வது நல்லது. உங்கள் தந்தை உங்களுக்கென்று அந்தரங்கமாக எழுதி அனுப்பியிருக்கும் விரிவான இருமுகத்தை உங்களிடம் கொடுத்து விட்டுப் போகிறேன். அதைப் படித்து எல்லாவற்றையும் நன்கு சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். நாளைக் காலையில் விடிந்ததும் உங்களைச் சந்திக்கிறேன்." (தொடரும்)

வெள்ளித் திரை

இணையற்ற படம்

காந்தன்

ஆங்கிலத்தில் எத்தனையோ படம் பார்க்கிறோம். அவைகளில் மிகச் சிறந்த படங்களும் உண்டு. ஆனால் இணையற்ற படம் என்று அவைகளைச் சொல்லிவிட முடியாது.

பாருக்குள்ளேயே படப் பிடிப்புக் கலையில் இணையற்றவராக விளங்கும் செஸில் பி' டெமில் தயாரித்த படம் என்றால் அதுவும் இணையற்றதாகத்தான் இருக்க முடியும். மந்திர தந்திரக் காட்சிகளையும், மாய ஜாலக் காட்சிகளையும் ஸ்டூடியோ காம்பவுண்டுக்குள்ளேயே தயாரித்துக் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டும் நம் நாட்டுப் படாதிபதிகள், டைரக்டர்களின் ரகத்தைச் சேர்ந்தவரல்ல அவர். படப் பிடிப்பையும், டைரக்ஷனையும் மாபெரும் கலைகளாக மதித்துப் போற்றுபவர் அவர். சரித்திரக் கதைகளின் உண்மையான ஆதாரங்களைக் கண்டறிந்து அவை மாறுபட்டு விடாமல் மிகவும் சிரத்தையோடு தயாரித்து வெளியிடுவதில் மிக்க ஆர்வமுள்ளவர்.

'The Ten Commandments' என்ற படத்தைப் பல்லாண்டுகள் உழைத்து, செஸில் பி' டெமில் இணையற்ற படமாகத் தயாரித்திருக்கிறார். பைபிளில் காணக் கிடக்கும் புனித வரலாற்றைப் படமாக்கத் துணிந்ததே அவருடைய திறமைக்கு எடுத்துக்காட்டு; அந்த வரலாற்றை அறிந்தவர்களெல்லாம் அதிசயப்படும் வண்ணம் படமாகத் தயாரித்தது, அவரது திறமையின் இணையற்ற தன்மையைக் காட்டுகிறது.

புனிதத் தன்மை வாய்ந்த புண்ணிய புருஷரான மோஸஸின் வரலாறு இது வரையில் ஏட்டில் இருந்து ஏற்றம் பெற்று வந்தது. இப்பொழுது வண்ணப் படமாக உருவாகிப் பாரெங்கும் பாராட்டைப் பெற்று வருகிறது.

சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்திலும் இஸ்ரேலிலும் நடந்த கதை இது. எகிப்தில் இஸ்ரேல் நாட்டவரான ஹீப்ருக்கள் ஏராளமாக இருந்தனர். இன்று போல் அன்றும் அவ்விரண்டு நாடுகளும் விரோத மனப்பான்மையுடன்தான் இருந்தன. எகிப்திய மன்னன் ஹீப்ருக்களை அடிமைகளாக வைத்து, சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கி வந்தான். ஒரு ஹீப்ருவின் முதல் குழந்தை தன் இனத்து மக்களின் அடிமை வாழ்வை அகற்றப் போகிறது என்று கேள்வியுற்று எல்லா ஹீப்ரு முதல் குழந்தைகளையும் கொன்று விடும்படி கட்டளையிடுகிறான் எகிப்திய மன்னன்.

கொடுங்கோல் மன்னனின் இந்தக் கொடூரக் கட்டளைக்குப் பயந்து தன் மகனை எப்படியும் காப்பாற்றத் துணிகிறாள் ஒரு ஹீப்ரு மாது. தன் மகனை ஒரு மூங்கில் பேழையில் கிடத்தி நைல் நதியில் விட்டு விடுகிறாள். மன்னன் தங்கை — இளவரசி பிதியா அரண்மனை ஸ்நான கட்டத்தில் ஒதுங்கிய அந்தக் குழந்தையை எடுத்துத் தன்னுடையதாகவே வளர்க்கிறாள். ஊராரும் அது அவளுடைய குழந்தையென்றே நம்புகின்றனர். அந்தக் குழந்தைதான் தீர்க்கதரிசி மோஸஸ்.

ஹீப்ருக் குழந்தைகளையெல்லாம் கொன்று விடும்படி கட்டளையிட்ட கொடுமையைப் படத்தில் தொனிப் பொருளாகக் காட்டியிருக்கும் உத்தி அருமையாயிருக்கிறது.

அடிமைகளைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கும் பயங்கரக் காட்சி மனத்தில் பதியும் வண்ணம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

மோஸஸ் முடிசூடும் தருணத்தில் அவன் எகிப்தியன் அல்ல, ஒரு ஹீப்ரு என்பது வெளிப்படுகிறது. அப்பொழுது மோஸஸின் வளர்ப்புத் தாய் படும் மன வேதனை, பெற்ற தாய் அடையும் பெருந் துக்கம், இதன் காரணமாக மோஸஸுக்கு ஏற்படும் சோதனையாவும் படத்தில் பார்த்துப் பரவசம் அடைய வேண்டிய உணர்ச்சிச் சித்திரங்களாயிருக்கின்றன.

ஹீப்ரு இனத்தாரை விடுவிக்கப் பிறந்தவன்தான் மோஸஸ் என்பது தெரிய வந்ததும், அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இளவரசன் அதை நடத்தி வைக்க வேண்டுமென்பது அரசாங்கச் சட்டம். இளவரசன் மோஸஸைக் கொல்லாமல் நாட்டை விட்டு வெளியேற்றி விடுகிறான்.

எகிப்திய நாட்டின் இளவரசி மோஸஸ் மீது காதல் கொள்ளுகிறாள். மோஸஸ் அரசுரிமை பெறாமற் போகவே அந்தக் காதலும் நிறைவேறாமற் போகிறது. அந்தக் கட்டங்கள் இனிப்பும் கசப்பும் சேர்ந்து ஒரு தனிச் சுவையை அளிக்கின்றன.

வெளியேறிய மோஸஸுக்குப் பாலைவனத்துச் சோலை வனம் ஒன்றில் தங்கும் இடமும் பைங்கிளி போன்ற பாவையின் அன்பும் கிடைக்கின்றன. அங்குதான் மோஸஸுக்குக் கடவுளின் குரலைக் கேட்கும் அரிய வாய்ப்பும் கிட்டுகிறது. அப்பொழுதுதான் மோஸஸ் அவதார புருஷர் என்பதும் வெளியாகிறது.

பைபிளைப் பற்றிக் கொஞ்சம் அறிந்தவர்களும் மோஸஸைப் பற்றி நிச்சயம் அறிந்திருப்பார்கள். அம் மாபெரும் மனிதரின் வாழ்க்கை வரலாறு சுவை மிக்கது. மாநிலத்து மக்கள் வாழ்வை மாண்புறச் செய்வான் வேண்டிக் கடவுள் ஸைனாய் மலையின் மேல் பத்துக் கட்டளைகளை மோஸஸுக்கு அருளிய அற்புதக் காட்சியை எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் பார்க்கலாம். கடவுளின் குரலில் தொனித்த காம்பீர்யம், அந்த மலைப் பிராந்தியத்தின் நிர்மானுஷ்யமான சூழ்நிலை, கடவுளின் வாக்கைக் கேட்டுப் பரவசம் அடைந்து விட்ட மோஸஸின் மௌன நிலையாவும் என்றென்றும் மனத்தில் பசுமையாயிருக்கும்.

மோஸஸ் பாகத்தை ஏற்று, அற்புதமாக நடிக்கும் சார்ல்டன் ஹெஸ்டன் இந்தப் படத்தின் ஜீவநாடி. இளங் காளையாக அரண்மனை வாழ்வை நுகர்ந்தது, ஹீப்ரு இனத்தைச் சேர்ந்தவனென்று தெரிந்ததும் அடிமை

வாழ்வில் அவதிப்பட்டது, இறுதியில் கடவுளின் அருளைப் பெற்றுத் தீர்க்க தரிசியாகி உலகத்து மக்களின் உள்ளங்களிலெல்லாம் உறைந்தது — ஆகிய மூன்று சூழ்நிலைகளிலும் அவர் மிகத் திறமையுடன் நடிக்கிறார்.

சிறந்த நடிகரான யல் பிரன்னர் மன்னன் இரண்டாவது ரமேஸஸாக அபாரமாய் நடிக்கிறார். யுவான் டிகார்லோ மோஸஸின் மனைவியாக வருகிறார். மோஸஸின் நண்பன் ஜோஷுவாவின் பாகத்தை ஜான் டெரிக் ஏற்றுத் திறமையுடன் அற்புதமாக நடிக்கிறார்.

பழமை வாய்ந்த பைபிள் கதையை வண்ணப் படமாகப் பார்க்கும்போது, அந்தக் காலத்துக்கே நாமும் போய் விட்டோமோ என்ற பிரமை உண்டாகிறது. இப்படத்தை உன்னதமான முறையில் தயாரிக்க எத்தனை முயற்சிகள் தேவையாயிருந்தன என்பதைக் கீழே காணும் விவரம் தெளிவு படுத்துகிறது:

படம் தயாரிக்கத் திட்டங்களை உருவாக்குவதற்குப் பத்து வருஷங்கள்; ஆதிகாலத்துக் கதைக்கு ஆதாரமான பிரதேசங்களுக்குப் போய் வருவதற்கு மூன்று வருஷங்கள்; திரைக் கதையைத் தயாரித்து வசனம் எழுத மூன்று வருஷங்கள்; ஆக மொத்தம் எத்தனை வருஷங்கள் என்பதை நீங்களே கூட்டிப் பார்த்துக் கொள்ளலாம். இவற்றைத் தவிர, ஏராளமான பாத்திரங்கள் படத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். படம் தயாரிக்க ஏழு கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது.

படத்தில் வரும் காட்சி ஒவ்வொன்றும் தனிச் சிறப்புடன் இருக்கிறது.

அரச சபையில் மோஸஸ் நிகழ்த்திக் காட்டும் அற்புதங்கள், ஹீப்ரு அடிமைகளை மோஸஸ் விடுவித்துக் கொண்டு சென்றது, நைல் நதி ரத்தப் பிரவாகமானது, செங்கடல் பிரிந்து ஹீப்ருக்களுக்கு வழிவிட்டது, அதே செங்கடல் மன்னன் படையைத் தடுத்து நிறுத்தி விழுங்குதல் ஆகிய காட்சிகள் மெய் சிலிர்க்க வைக்கின்றன.

சைனாய் தீபகற்பத்தை அடைந்த ஹீப்ருக்கள் அடிமைவாழ்வு அகன்று போன ஆனந்தத்தில் வெறி கொண்டு மது, மங்கையர் மோகத்தில் இறங்கித் தீச்செயல்கள் பல புரிகின்றனர். அமளிதுமளிப்படும் இந்த அரிய காட்சியைப் படமாக்கி யிருப்பதை எத்தனை தடவை வேண்டுமானாலும் பாராட்டலாம்.

பல முறை பார்த்து மகிழ வேண்டிய அதியற்புதமான படம். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வர்ண ஜாலங்களும், காட்சிஜோடனைகளும், தலைசிறந்த நடிப்புத் திறமையும் கொண்ட ஈடு இணையற்ற படம்.



ஜனரஞ்சகமான


காதல் கவிதைபோல்

பாவலரையும் கவருவது

ஸ்வஸ்திக் பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்

காஸ்டர் ஆயில் இந்தியாவின் பரம்பரையான கூந்தல் அலங்காரசாதனம். அது கூந்தலுக்கு புஷ்டியை யளித்து ஆரோக்கியமான பளபளப்பையும் உண்டாக்குகிறது. ஸ்வஸ்திக்கால் மென்மையாக நறுமணமூட்டப்பட்டது. சென்ற 20 ஆண்டுகளாக பல லக்ஷம் பேர்களால் விரும்பப்படுவது.





ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்

SWTpl-S-O-M-I TMs



61

**யாம்மெய்யாக் கண்டவற்றுள்
இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.**

முனிவர் சொல்கிறார்; என் அனுபவத்தில் ஊர்ஜிதப்பட்ட உண்மைகளுக்குள் மிகவும் உறுதியாக ஊர்ஜிதப்பட்ட உண்மை யாதெனின் வாய்மையின் சிறப்பு. வாய்மையாவது பொய் சொல்லாமை.

வாய்மையைக் காட்டிலும் நல்லது வேறு இல்லை என்பது அனுபவத்தில் கண்ட உண்மை என்கிறார்.

* * *

உள்ளத்திலும் பேச்சிலும், இரண்டிலும், சத்தியம் தவறாமல் காத்து வந்தோமானால் வேறு விரதங்கள் காத்தும் தானங்கள் செய்தும் அடையும் நன்மையை விட அதிக நன்மை அடைவோம்.

**மனத்தொடு வாய்மை
மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.**

பேச்சில் பொய் இருக்கலாகாது. அது மட்டும் போதாது. மனத்திலும் பொய் இருக்கலாகாது. உள்ளமும் பேச்சும் இரண்டும் பொய்யா நிலையில் வைத்து வெற்றி பெற்றோமானால் தானமும் தவமும் செய்வாரைவிடச் சிறந்தவர்களாவோம்.

* * *

**புறம்தூய்மை நீரான்
அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்**

தண்ணீர் உடலைச் சுத்தமாக்கும். அகத்தைச் சுத்தமாக்குவது வாய்மை.

காணப்படும்—உண்டாகும்.

நீரால் அமையும் என்று முதல் அடியில் சொன்ன படியால் இரண்டாம் அடியில் காணப்படும் என்பதற்கும் அந்தப் பொருளையே வைத்துப் புறத்துக்கு நீர் எப்படியோ அப்படி அகத்துக்கு வாய்மை என்பது பரிமேலழகரின் உரை.

வேறு விதமாகவும் பொருள் சொல்லலாம். புறத்தின் அதாவது உடலின் தூய்மையைக் கண்ணால் காணலாம். ஒருவனுடைய அகத்தின் தூய்மையை அவனுடைய வாய்மையால்தான் காண முடியும். ஆனபடியால் இரண்டாம் அடியில் 'காணப்படும்' என்று வந்தது.

சொல்லும் சொல்லானது தருமமா, அதருமமா என்கிற கேள்வி தோன்றினால், பொய்யல்லாத சொல்லைப் பேசிய படியால் அறம் வழுவவில்லை என்று எண்ணி விடலாகாது. அந்தச் சொல்லால் ஒரு உயிருக்கு எவ்விதத்திலாவது தீமை உண்டாவதாக இருந்தால் அது தருமம் வழுவியதாகும்.

**வாய்மை எனப்படுவது
யாது எனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.**

பிற உயிருக்கு ஏதேனும் தீமை உண்டாக்குவதாயின் அது வாய்மை அல்ல.

உண்மை என்பது மட்டும் போதாது; தீமை தராத சொல்லே வாய்மை எனப்படும். ஒருவனுக்குத் தீங்கு இழைக்க வேண்டும் என்று எண்ணிச் சொல்லும் சொல் உண்மையே யாயினும் அது வாய்மை ஆகாது என்கிறார் முனிவர்.

ஒரு சொல் நற்செயலா, தீய செயலா என்று நிர்ணயிப்பதற்கு இன்னா செய்யாமையே பிரமாணம். பேசும் பேச்சும் இந்த விதிக்கு அடங்கியதாகும். தீமை பயக்கும் பேச்சு உண்மையாயினும் அது தருமமாகாது. ஆனபடியால் தீமையில்லாத சொல் என்று வாய்மையின் இலக்கணத்திலேயே முனிவர் இந்தக் குறளில் அமைத்தார்.

யாதொன்றும்—சிறிதளவும்

இதனால் வாய்மையின் சிறப்பை முனிவர் குறைக்கவில்லை. வாய்மையின் இலக்கணத்தில் தீமை பயவாததாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.

தீமை பயவாத பொய்ச் சொல் வாய்மையாகி விடும் என்று முனிவர் சொல்லவில்லை. வாய்மைக்கு மற்றொரு இலக்கணத்தையும் கூட்டிச் சொன்னார். நிகழ்ந்ததைக் கூறல் மட்டும் போதாது. உண்மையும் தீமை பயவாமையும் இரண்டும் சேர்ந்திருத்தல் வேண்டும்.



எல்லா விசேஷ தினங்களுக்கும்
ஏற்றதொரு புடவை
சக்தி
சில்குகள்
சக்தி மில்ஸ்களில் தயாரிக்கப்பட்ட ஸில்குகளைவிட விதவிதமான ஸில்குகள், பல்வேறு வர்ணங்களிலும், அநேக சகங்களிலும் வேறு எங்கும் கிடைக்காது. ஞாபகமிருக்கட்டும்—சக்தி ஸில்குகள் உயர்தரமானவை. எளிதில் சலவை செய்யக்கூடியது. சாயம் போகாதது. மேலும் சலவையில் சுருங்கிப்போகாதென்பதற்கு உத்திரவாதமுள்ளது. சக்தி ஸில்குகளை அணிந்து மோகனமாகத் தோன்றுங்கள்.
ஸ்ரீ சக்தி மில்ஸ் லிமிடெட், பம்பாய்

வட்ட மேஜை

[ராஜாஜி அவர்களின் ஜெயந்தி இதழைப் பாராட்டி வாசக அன்பர்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை மகிழ்ச்சியுடன் கீழே பிரசுரித்திருக்கிறோம். —ஆசிரியர்.]

ராஜாஜி இதழ்

'இராஜாஜி இதழ்' கண்டு களிப்படைந்தேன். அரசியல் ஞானியும், தமிழ் நாட்டின் தவ முனியுமாகிய இராஜாஜி அவர்களின் பிறந்த நாளை நினைவூட்டி, அவரது அறிவுரைகளை அவனிக்கு அறிவுறுத்தி வரும் தங்களது கடமை உணர்வைக் கண்டு மகிழ்கிறேன். இலக்கியத் துறையில் சுடர் விட்டுள்ள அரசியல் மேதை இராஜாஜி எழுதிய 'காதலும் கலியாணமும்' என்ற கட்டுரை இலக்கியப் பூங்காவில் பூத்த ஓர் நறுமலர். அவரது தொண்டுகள் சிறக்க நாம் இறைவனை இறைஞ்சுவோம். அவர் பல்லாண்டு நம்மிடையே இருந்து வழிகாட்டி நம் அனைவரையும் 'வையத்தில் முதல்வராக' ஆக்க ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.

கல்யாண்
4—12—58 க. இரா. இராமமூர்த்தி

இந்த வாரக் 'கல்கி' இதழைக் கண்டவுடன் ஏதோ ஒரு சக்தி என்னை இந்தக் கடிதம் எழுதத் தூண்டியது. மிக எளிய முறையில், ஆனால் வரிக்கு வரி வார்த்தைக்கு வார்த்தை அருமையாக இருக்கிறது. சுருங்கச் சொன்னால் கூழ் படைக்கிறேன் என்று கூறிவிட்டு அமிர்தம் வார்த்தாற்போல் இருக்கிறது. இராஜாஜியின் கட்டுரையைச் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை படிக்க வேண்டும். அவருடைய ஒவ்வொரு பொன்மொழியும் ஒரு லட்டுப்போல் இருக்கிறது. இந்த இதழ்க் 'கல்கி' படித்து முடித்தவுடன் ஒரு பெரிய விருந்தில் அளவுக்கு மீறிச் சாப்பிட்டு விட்டதுபோல் இருக்கிறது.

சென்னை-17
5-12-58 ரா. கோ.

இன்று காலை 7—12—58 'கல்கி' இதழ் இவ்விடத்தில் கிடைக்கப் பெற்றேன். தனிப்பெரும் தலைவர் இராஜாஜியின் உருவம் கண்டு வெகு ஆவலுடன் தலையங்கம் படிக்கத் தொடங்கினேன். இவ்விதழ் 'இராஜாஜி இதழாக' மலர்ந்தது கண்டு எல்லையில்லா ஆனந்தம் கொண்டேன்.

இது ஒரு ஒப்பற்ற சிறப்பு மலர். என்றும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம். முதலாவதாக 'காதலும் கலியாணமும்' என்னும் கட்டுரை என்னைப் போன்ற யுவர்களுக்கும், யுவதிகளுக்கும் ஒருவிதப் படிப்பினையை உணர்த்துகிறது. மனத்தை ஒரு நிலையில் வைத்து வாழ்க்கையை நடத்துமாறு அறிவுரை வழங்கியுள்ளார். அதைப் படிக்கும் பெற்றோர்களும், இளைஞர்களும் கட்டாயம் அதன்படி யோசித்து நடந்து கொள்வார்கள் என்பதை நம்பலாம்.

அவருடைய மணிமொழிகளும் உவமைகளும் என்றும் மறக்க முடியாதவை. இராஜாஜி நம்மிடையே பல காலம் இன்னும் வாழ்ந்து அறியாமை என்னும் பேய்தனை அகற்றுவதற்கு வேண்டிய ஆயுளை எல்லாம் வல்ல இறைவன் அளித்து அருள் பாலிக்க வேண்டும்.

சாம்ராஜ்பேட்டை
பங்களூர் தாசரதி

கை விளக்கு

மலையொத்த பார்த்திபனும்
மனங்குன்றி நிற்கையிலே
'கலங்காதே' என்றுரைத்து
கண்ணன் தரு கைவிளக்கு

குழல் ஊதிக் குழலொத்த
குரல்கொண்டான் அருள்மொழிகள்
வழிவழியாய் மனிதகுலம்
வாழ்விக்கும் கைவிளக்கு

ஒளியற்ற மனக்குகையில்
சூழ்கின்ற இருள்நீக்கி
தெளிவுற்ற ஞானமருள்
தெய்வீகக் கைவிளக்கு

திரிகின்ற புலனோடு
உடன்செல்லும் உள்ளத்தை
அருள்காட்டி அழைக்கின்ற
ஆன்மீகக் கைவிளக்கு

பேதை மனம் பீடுறவே
பேருண்மை காட்டுகிற
'கீதை' யென்ற பொன்விளக்கு
கீர்த்தியருள் நல்விளக்கு

கல்கத்தா
5-12-58 "ரகுரு"

சிந்தனைக்கு விருந்து

'கல்கி' பத்திரிகையில் வெளிவந்த ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைப் படித்து மனமகிழ்ந்த பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். இந்த அரங்கத்தை ஏற்பாடு செய்து, இவ்வளவு வெற்றிகரமாய் முடித்ததற்கு உங்களைப் போற்றுகிறேன். பல சிக்கலான பொருளாதாரப் பிரச்னைகளை நன்றாக அலசி ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

திரு நா. பார்த்தசாரதி எழுதும் 'பாண்டிமா தேவியும்', பௌராணிகர் எழுதும் 'பக்தி வயலும்', ஸ்ரீஹரி எழுதும் 'நாட்டு வைத்தியமும்' இவைகளெல்லாவற்றையும் விட மிக முக்கியமாக ஸ்ரீ ராஜாஜியவர்களின் 'வள்ளுவர் வாசகமும்,' காமகோடி பீடாதி



பம்பாய் சங்கீத ஸமாஜத்தின் ஆதரவில் நடைபெற்ற தீக்ஷிதர் தின விழாவில் கான கலாதர ஸ்ரீ மதுரைமணி அய்யர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

பதிகளின் 'அருள் வாக்கும்' எங்கள் கவனத்தைத் தொட்டு ஈர்க்கின்றன.

வாரந்தோறும் இவைகளைப் படித்துவிட்டு, எங்கள் வீட்டில்நாங்கள் நடத்தும் சர்ச்சையை நீங்கள் கேட்டால், அவை எவ்வளவு தூரம் எங்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன என்பதை யறிவீர்கள். தொடக்கத்திலிருந்து, உங்கள் பத்திரிகையின் சந்தாதாரனாயிருக்கும் நான், இந்தச் சிறந்த சேவைகளுக்காக, உங்களைப் பெரிதும் போற்றுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
16—10—58

வி. ஆர். மயிலேறு.
எம். ஏ.,

விவசாயமும் சட்டதிட்டமும்

'கல்கி' 23-ந் தேதி இதழில் நமது மதிப்புக்குரிய கனம் ராஜாஜி அவர்கள் நிலச் சுவான்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் 'பரஸ்பர ஒப்பந்தத்தைப் போற்றுவோம்' என்று மக்கள் மனத்தில் பதியும்படியாக ஆய்ந்த கருத்துடன் தலையங்கம் எழுதியிருந்தார்கள். விவசாயத்தைச் சட்ட திட்டங்களினால் முன்னேற்றம் செய்துவிடமுடியாது. இச் சட்டங்களினால் விபரீதங்கள்தான் ஏற்படுகின்றனவே தவிர ஒருவித நன்மையும் ஏற்படவில்லை; ஏற்படவும் முடியாது. நிலச் சுவான்தார்களும் குடியானவர்களும் சௌஜன்யமாகவும் பரஸ்பர அன்போடும் வாழவேண்டும். முன்னால் நிலச் சுவான்தார்களும் குடியானவர்களும் அன்யோன்யமாக இருந்தார்கள். இன்று இருவர்களுக்குள்ளும் பூசலும் குரோத மனப்பான்மையும் ஏற்பட்டு விட்டன. விவசாயச் சட்டதிட்டங்களினால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. முன்னால் நிலச் சுவான்தார்கள் ஊக்கமுடன் கடன் படடாவது உரம், குப்பைகளை வாங்கிப் போட்டுத் தங்களது நிலங்களை நல்ல முறையில் செழிக்கச் செய்தார்கள். இன்று விவசாயத்தில் ஊக்கமிழந்து நிலத்தைக் கவனிக்காமல், கிடைத்தது போதும் என்றிருக்கிறார்கள். ஸ்ரீ ராஜாஜி அவர்கள் எழுதியபடி முன்னால் நிலச்சுவான்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் நிலக் கட்டுக்குத்தகை விஷயமாக ஒப்பந்தம் (அடவோலை) இருந்தது. இன்று விவசாய சட்டதிட்டங்களினால் இந்த ஒப்பந்தங்கள் செல்லாக்காசாகிவிட்டன. ஆகவே, சட்டதிட்டங்களைக் கொஞ்சம் தளர்த்தி நிலச்சுவான்தார்களும் குடியானவர்களும் பரஸ்பரம் நல்லெண்ணத்தோடு வாழ வழி வகுக்கவேண்டும்.

அம்பலசேரி
27—11—58

மு. மா. முத்தையா

மருந்தோ மருந்து!

உணவு உற்பத்தியைப் பெருக்கி விலைவாசி உயர்வைத் தடுக்க அரசியல் வைத்தியர் திரு ராஜாஜி அவர்கள் கூறிய மருந்து உண்மையிலேயே மிகவும் நல்ல அருமருந்தாம். நில உரிமையாளர், சாகுபடி செய்வோர் இருவரிடையே நிலவும் பரஸ்பர உறவை வலுப்படுத்த வேண்டுமேயன்றி புதுச் சட்டங்களால் பிளவுபடுத்தல் தீமையே பயக்கும்.


நிலவுடைமைக்கு உச்ச வரம்பு என்பது உணவு உற்பத்திப் பெருக்கை அவசியம் பாதிக்கும். அதனால் அடுத்த தேர்தலில் வோட்டுக்கள் விளையுமேயன்றி உணவு (உற்பத்திப்பெருக்கம்) சிறிதும் விளையாது. ஆகவே ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற முதுமொழிக்கிணங்க, ''விவசாயம் மிகவும் புனிதமான தொழில்'' என்ற எண்ணம் மக்கள் மனத்திற்படும்படி அரசாங்கம் ஆவன செய்யுமா

அதிராம்பட்டினம்
8—11—58

அ. உலகநாதன்



வீட்டிலும் வெளியிலும் அணிவதற்கு
ஸ்டாண்டர்ட் மில்ஸ்
பாப்லின் சட்டைகள்
சாதாரண — சாயந்தோய்த்த
மற்றும் கோட்டிங் · லாங்கிளாத் · பெட்டிங்கிளாத் · பாப்லின் பிரிண்ட்ஸ் · சாயந்தோய்த்த · பிரிண்டட் கிரேப் · குடைகளுக்கான துணி · புக் பைண்டிங் துணி


மழையோ மழை
எக்ஸ்க்யூஸ் ஸார்! வண்ணான் மழை காலம்னு இரண்டு மாசமா சலவையைக் கொண்டு வரவில்லே!
மானேஜர்
பொட்டி, பூட், சாவி கொடை ரிப்பேர்
பல துளி பெரு வெள்ளம்னு சொல்ற மாதிரி மாசா மாசம் உங்க வாடகைப் பணம் வராமல் பெரிய தொகையா நீங்க கடன் தர வேண்டியிருக்கு
என்னய்யாது! வாடகைப்பணம் கேட்க வந்தா கதவைத் திறக்காமல் ஊமைக் கோட்டான் மாதிரி பதில் சொல்லாமல் இருக்கிறீரே!
யோவ்! கதவைத் திறக்கிறீரா... இல்லே கதவைத் திறந்து கொண்டு நானே உள்ளே வரட்டுமா?
அதை முதல்லே செய்யுங்க! உலகத்திலுள்ள அத்தனை மந்திரிகளும் ஒன்றாகச் சேர்ந்து வந்தா கூட......
... திறக்க முடியாதபடி உங்க வீட்டுக் கதவு மழைக்கு இறுக்கிக் கொண்டிருக்கு
!!!

படித்துப் பாருங்கள்

கானாம்ருத வர்ணமாலிகா

இந்நூலாசிரியர் சென்னை ரஸிகரஞ்சனி சபா சங்கீதப் பள்ளியின் தலைவர். ஏற்கனவே கானாம்ருதபோதினி என்று பால பாட புத்தகம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதைத் தொடர்ந்து, அதற்கு அடுத்தபடியாகத் தான வர்ணங்களை வித்யார்த்திகளுக்குப் பயன்படும் வகையில் இப்போது வெளியிட்டிருக்கிறார். சாஸ்திரீய சங்கீதத்துக்கு அஸ்திவாரம் ஸ்வர ஞானமும் பிரஸ்தார க்ரமங்களும் என்பது வெளிப்படை. அதற்கு இன்றியமையாதது வர்ணங்களின் பயிற்சி. இப் புத்தகத்தில் 20 ஆதிதாள வர்ணங்களும் 5 பத வர்ணங்களும் 10 அடதாள வர்ணங்களும் எளிதில் புரியும் வகையில் ஸ்வர தாளக் குறிப்புகளுடன் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் சாதாரணமாக வழக்கத்திலுள்ள வர்ணங்களே. கர்த்தா, ஜன்யராகங்களின் அமைப்புகள் பற்றிய முதல் அத்தியாயமும் 350 ராகங்களுக்கு ஆரோஹண அவரோஹணங்களும் கொடுக்கப்பட்ட அனுபந்தம் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும். சங்கீத வித்வான்கள் சங்கீதப் புத்தகம் வெளியிடுவதால் எந்தெந்த ஸ்வரங்களைச் சேர்த்துப் பாடினால் ராகச் சாயை நன்கு புலப்படுமோ, அம்மாதிரி குறித்துக் காட்டுவது எளிது. அவர் பள்ளி ஆசிரியராகவும் இருந்து விட்டால் அது இன்னும் சிறப்பு. இவ்வகையிலும் இப் புத்தகம் சிறப்புடையது. காலம் சென்ற பிரபல சங்கீத, சாகித்ய வித்வான்களின் படங்கள் ஒவ்வொரு வர்ணத்துக்கும் முடிவில் கொடுத்திருப்பது புத்தகத்துக்கு மேலும் அழகு தருகிறது.

ஆசிரியர்: சங்கீத வித்வான் ஏ. எஸ். பஞ்சாபகேச அய்யர். கிடைக்குமிடம்: ஆசிரியர், ரஸிகரஞ்சனி சபை சங்கீதப் பள்ளி, மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 2—50.

கலை இன்பம்

நாமக்கல் கவிஞர் திரு ராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய சில கட்டுரைகளின் தொகுப்பு இந்தப் புத்தகம்.

கவிஞர் அவர்களுடைய வாதத் திறம் அனைவரும் அறிந்ததே. தாம் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து 'இதைவிடத் தெளிவாக எடுத்துக் கூற முடியாது' என்று எண்ணும்படி சொல்லி விடுகிறார். நுண் கலைகளைப் பற்றி அவர் எழுதியிருக்கும் முதல் கட்டுரையை எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் பாடமாக வைக்க வேண்டும். அவ்வளவு தெளிந்த முறையில் சுவையோடு கலை யின்பத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

இந்தத் தொகுதியில் கவிஞருக்குத் திருவள்ளுவ முனிவரிடத்திலும், கம்பர் பெருமானிடத்திலும் மகாகவி பாரதியாரிடத்திலும் உள்ள பக்தி சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

"பாரதியின் கொள்கை என்ன?" என்று அவர் ஆறு பாடல்களை எடுத்துப் பதிலும் சொல்லுகிறார். சுருக்கமாகவும் தெளிவாகவும் அவருடைய கொள்கையை அறிந்து கொள்ள,

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்-தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேண்டும்-இது
வாழும் முறைமையடி-பாப்பா.

என்ற ஒரு பாட்டே போதும். ஜீவ காருண்யம், தெய்வ நம்பிக்கை, வைராக்கியம் என்ற மூன்றும் சேர்ந்த வாழ்க்கைதான் நல் வாழ்க்கை என்பது பாரதியின் கொள்கை" என்று உறுதியாகக் கூறுகிறார்.

'மெட்டும் இசையும் பாட்டும்' என்ற கட்டுரையில் இசைக்கு முதலிடம் கொடுப்போரின் சாத்திரத்தையும் மேலும் சிலவற்றையும் கூறுகிறார்.

அழுத்தத் தமிழ் அபிமானம் மிகுந்த கவிஞருக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைப் பாருங்கள். "தமிழ் அனைத்திலும் தலைமைக்கு நாடு மீண்டும் அடைய வேண்டுமானால் தமிழர்கள் தமிழில் எண்ண வேண்டும்; தமிழில் எழுத வேண்டும்; தமிழில் படிக்க வேண்டும்; தமிழில் பாட வேண்டும்; தமிழில் கேட்க வேண்டும்; தமிழில் நடிக்க வேண்டும்; தமிழில் வாழ்க்கை நடத்த வேண்டும்" என்று அறிவுறுத்துகிறார்.


இந்தப் புத்தகத்தின் முன்னுரையில் கூறியிருப்பதுபோல் ஆராய்ச்சியோடு கலந்து, அனுபவக் கலை, சிந்தனையை ஒரு நிலைப்படுத்தி, தெய்வ நிலைப்பாடும் கட்டுரைத் தொகுதியே இக் 'கலையின்பம்.'

காதல் திருமணம்

திருமணக் காதல், காதல் திருமணம் என்ற இரண்டு கதைகள் இதில் அடங்கியிருக்கின்றன. இந்தத் தலைப்புகளைப் படித்து விட்டுச் சற்று நேரம் அவற்றின் வித்தியாசத்தைப் பற்றி யோசிக்கலாம். சரியான முடிவுக்கு வராமல் சற்றுக் குழப்பத்துடனேயே கதைகளைப் படிக்கத் தொடங்குவோம். கவிஞருடைய தலைவர் நிச்சயம் கலையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் படிக்கலாம். நமது நம்பிக்கை வீண் போகவில்லை. சாதாரணமாகத் தினசரி நமது இல்லங்களில் நடக்கக் கூடிய சிறிய சம்பவங்களை வைத்துக் கொண்டு இளைஞர்களுக்கெல்லாம் பாடமாக இருக்கும் வகையில் மிக அழகாகக் கதையை எழுதியிருக்கிறார். பெண்களுடைய மன உறுதியையும் ஆண் மகனின் சஞ்சல சுபாவத்தையும் எடுத்துக் காட்டி, காதல் என்ற ஒரு மிக நுட்பமான விஷயத்தை விளக்கச் செய்கிறார்.

தன் அத்தானை ஏமாற்ற நேர்மையாகத் துடிக்கும் காரியமானாலும், தமயந்திடம் அளவற்ற வாஞ்சையுள்ள பதுமாவதியும் மிகச் சிறந்த கதாபாத்திரங்கள். அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம்.

மேற்கண்ட இரு நூல்களையும் பிரசுரித்தவர்கள்: கலைஞர் பதிப்பகம், 241, ராஜவீதி, கோயமுத்தூர்; ஒவ்வொன்றின் விலையும் ரூ. 2.


இயற்கையின் அற்புதம்
வேப்ப மரமும், வேலமரமும் இயற்கையின் சிருஷ்டிகள். இவைகளை உபயோகிப்பதால் பற்களுக்கு நன்மை என்பதை மனிதன் அறிந்தான். பிறகு இவைகளைக் காட்டிலும் ஒரு டூத் பிரஷ் சிறந்ததெனக் கண்டான். மனிதனுடைய சுபாவம் மேன்மேலும் சிறந்ததையே நாடுவது இயல்பு அல்லவா! அதற்கு ஏற்றவாறு சிறிதும் சந்தேகமில்லாமல் முன்னணியில் நிற்பது ஆரியன்.
Aryan
ஆரியன்
டூத் பிரஷ்
நன்கு சுத்தம் செய்கிறது
நீடித்து உழைக்கிறது


எச்சரிக்கை!
உங்கள் குழந்தையின்
ஜலதோஷம்
அபாயகரமாகக் கூடும்!
வியாதி ஆரம்பிக்கு முன்னரே.
அவன் சளித்தொந்திரவுகளை இந்த நல்ல,
சக்திவாய்ந்த ஆயின்மெண்டால் ஒழியுங்கள்!
2 விதங்களில் ஜலதோஷத்திலிருந்து நிம்மதி தருகிறது.
1
மூக்கின் வழியாக வேலை செய்கிறது.
2
சருமத்தின் வழியாக வேலை செய்கிறது.
உங்கள் குழந்தை விக்ஸ் வேபோரப்பின் சக்தி வாய்ந்த ஔஷத ஆவிகளை சுவாசிப்பதால், அவன் மூக்கிலும், தொண்டையிலும் உள்ள சளி உபாதை அகல்கிறது.
வேபோரப்பின் சுகம் தரும் உஷ்ணம் சருமத்தினூடே சென்று உங்கள் குழந்தையின் மார் கபத்தை உடைத்தெறிகிறது.
விக்ஸ்
வேபோரப்
மார்பிலும், முதுகிலும்,
தொண்டையிலும் தேய்த்தாலே போதும்!
VICKS
VapoRub
VICKS
VapoRub

[நம் நாட்டிலேயே நமக்குத் தேவைப்படும் பெட்ரோலியம் முழுதும் கிடைக்க என்ன வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை இக் கட்டுரையில் டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் ஆராய்கிறார். இவர் பூகர்ப்ப இயல் நிபுணர். இந்திய சர்க்காரின் பூகர்ப்ப ஆராய்ச்சி இலாக்காவின் உயர் தலைவராகப் பல ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றி இப்போது ஓய்வு பெற்றிருக்கிறார். இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய பல நாடுகளிலுள்ள விஞ்ஞானக் கழகங்களில் அங்கம் வகிப்பவர். இந்தியாவின் பிரதிநிதியாகப் பல மகாநாடுகளுக்குச் சென்றிருக்கிறார். பல புத்தகங்கள் இயற்றி, இந்தியாவில் பூகர்ப்ப சம்பந்தப்பட்ட எந்த விஷயத்தைப் பற்றியும் சந்தேகமின்றிச் சொல்லும் திறமையுடையவர். கனிப் பொருளைப் பற்றி ஏதாவது தெரியவேண்டுமென்றால் டாக்டர் எம். எஸ். கிருஷ்ணனைக் கேட்டால் தெரியும் என்று சொல்லுமளவுக்குப் புகழ் படைத்தவர். இவ்விஷயம் பற்றி அவர் அனுப்பியுள்ள கட்டுரையைத் தமிழாக்கிக் கீழே பிரசுரிக்கிறோம். ஆசிரியர்]

இந்தியாவில் எண்ணெய் வயல்கள்

டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன்

பெட்ரோலியம் என்று நாம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்கும் சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்தது. அந்த மொழியில் பெட்ரோலியம் என்றால் கல்லெண்ணெய் என்று பொருள். மற்ற பாஷைகளிலும் கூட இந்த வஸ்துவைக் குறிக்க வழங்கும் சொற்கள் கல்லெண்ணெய், மண்ணெண்ணெய் என்ற அர்த்தத்தில்தான் வழங்கப்படுகின்றன. நமது பாரதத்திலும் அவ்வாறே. உலகத்தில் பல்வேறு பாகங்களில் இப் பொருள் கிடைக்கிறதென்பது பிராசீன காலங்களிலிருந்தே அறியப்பட்டுள்ளது. சாதாரணமாக ஒரு கசிவுப் பொருளாகத்தான் பல இடங்களில் இது காணப்படுகிறது. பெரும்பாலும் வாய்க்கால்களிலும் நீர்த்தேக்கங்களிலும் நீர்ப்பரப்பின் மீதும் இக் கசிவு பரவி வானவில்லில் காணும் வர்ண ஜாலங்களையொத்த காட்சியைத் தோற்றுவிக்கும். வறண்ட பிரதேசங்களில் இக் கசிவு வெளிப் பார்வைக்குத் தெரியாது. ஆனால் அங்கே "தார்" அல்லது "ஆஸ்பால்ட்"டைப் போன்ற கருமைப் படிவங்கள் இருக்கலாம். ஏனெனில், இக் கசிவுப் பொருளின் இலேசான பாகங்கள் வற்றிப் போய் தேங்கிப் போகும் கசண்டு அல்லது திப்பிகள் தாம் இம்மாதிரி 'தார்' போன்று தங்கிப் போகும். தற்காலம் பெட்ரோலியம் பெருமளவில் உற்பத்தியாகும் மெக்ஸிகோ, வெனிஜுலா, பெர்ஸியா, ருஷ்யா, ருமேனியா, இராக், இந்தியா, பர்மா, இந்தோனேஸியா போன்ற பிரதேசங்களிலெல்லாம் பெட்ரோலிய எண்ணெய்க் கசிவுகள் விரிவாக இருந்து வந்துள்ளன. சில இடங்களில் வாயுக்கள் தேங்கிப் போய் அதிலிருந்து வாயுக் கசிவு உண்டாகிறது. இம்மாதிரி வாயு எரியும் தன்மையுடையது. தானாகவே எரியும். ஏறக்குறைய நிரந்தரமாயும் எரியும். இம்மாதிரி வாயு ஜுவாலையுள்ள இடங்களெல்லாம் புனித ஸ்தலங்களாகக் கருதப்பட்டு யாத்திரை க்ஷேத்திரங்களாக ஆகிவிடுகின்றன. இம்மாதிரி பல இடங்கள் ருஷியாவிலும், பாரசீகத்திலும், இந்தியாவில் பஞ்சாபில் ஜ்வாலாமுகி என்னுமிடத்திலும் இருக்கின்றன. அந்த வட்டாரத்திலுள்ள ஜனங்கள் இத்தகைய காட்சிகளைத் தெய்வீக சக்தியால் ஏற்பட்டவை என்று கருதுகிறார்கள்.



டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன்

பெட்ரோலியம் என்பது ஒரு தனிப்பொருள் அன்று. பல பொருள்களின் சேர்க்கையாலான ஒரு கூட்டுப் பொருள். "ஹைட்ரோ-கார்பன்"கள் என்னும் கூட்டத்தைச் சேர்ந்தவை. ஏனெனில் இதில் பிரதானமாக 'கார்பனு'ம் ஹைட்ரஜனும் சேர்ந்துள்ளன. (ஆக்ஸிஜின் என்ற பிராணவாயுவும் நைட்ரஜனும், கந்தக வாயுவும் கூடச் சிறிதளவு கலந்து காணப்படுகின்றன.) திரவ வடிவத்தில் காணும் இந்தப் பொருளைத்தான் வர்த்தகச் சமூகத்தில் "க்ரூட்" (சுத்திகரிக்கப்படாத) எண்ணெய் என்று சொல்லப்படுகிறது. இதன் நிறம் கரும் பச்சை அல்லது கரும் பழுப்பு. மென்மையான நிறத்தில் இது சாதாரணமாகக் காணப்படுவதில்லை. ஆமணக்கு எண்ணெய் போன்று பசையுடன் சிறிதளவு ஒட்டும் தன்மையுடையது. நமக்குப் பழக்கமான கெரோஸின் என்ற மண்ணெண்ணெயின் மணத்தையுடையது. ஒளி ஊடுருவிச் செல்லும்படி நிர்மலமாக இருக்கும்போது அதன் நிறம் இளம் பச்சை, அல்லது இளம் பழுப்பு வர்ணமாக இருக்கும். கனத்தில் தண்ணீரைவிடக் கொஞ்சம் லேசானது. சிற்சில வகைகள் தான் தண்ணீரைக் காட்டிலும் கனமானவை. அப்படிப்பட்டவை மிகவும் சொற்பம். எனினும், தண்ணீருடன் 'க்ரூட் ஆயில்' கலக்காது. ஆனால் ஈதர் நீரிலும் (Ether) பென்ஜீனிலும் கார்பன்-டைஸல்பைட் (Carbon disulphide) மற்றும் இவை போன்ற பொருள்களிலும் கரைந்து போகும் தன்மையுடையது. இதனுடைய கன வடிவங்கள்

(Solid forms) தாம் தார் என்றும் ஆஸ்பால்ட் என்றும், தாரின் மற்றொரு வகையான "பிட்ச்" (Pitch) என்றும் வழங்கப்படுகின்றன. இவற்றுடன் சம்பந்தப்பட்டது மிக இலேசானவையும் எளிதில் வற்றிப் போகும் தன்மையுமுடைய ஹைட்ரோ — கார்பன் அணுக்களாலான இயற்கை வாயு.

ஒரு அற்புதப் பொருள்

திரவ வடிவத்திலாயினும் கன (ஸ்தூல) வடிவத்திலாயினும் பெட்ரோலியம் பண்டைக் காலத்திலிருந்தே ஒரு அற்புதப் பொருளாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. வைத்திய முறையில் இது வெளி உபயோகத்துக்கு ஒரு மருந்தாகவும், மத சம்பந்தமான சடங்குகளில் உள்ளுக்குச் சாப்பிடும் புனிதப் பொருளாகவும் இருந்து வந்துள்ளது. பொருளாதாரத் துறையில் இது ஒரு எரி பொருளாக உபயோகப்படுத்துவது சென்ற மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளுக்குட்பட்டுத்தான் தோன்றியது. சென்ற பத்தொன்பதாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் கைகளினாலேயே தோண்டி எடுக்கப்பட்ட எண்ணெய்க் கிணறுகள் சில இருந்ததாகத் தெரிகிறது. அம்மாதிரிக் கிணறுகள் பர்மாவில் சமீபத்தில் 1930–ம் ஆண்டு வரையில் உபயோகத்தில் இருந்தன. பென்ஸில்வேனியாவில் 1859-ம் ஆண்டில் எட்வின்-எச்-ட்ரேக் (Edwin - H - Drake) என்பவர் முதன் முதலாக யந்திர துரப்பணத்தைக் கொண்டு பூமியைத் துளைக்க முற்பட்ட பிறகுதான் பெட்ரோலியத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியது. அந்த நாட்களில் ஆலைகளில் அடுப்புக்கு எரி பொருளாகத்தான் பெட்ரோலியத்தைக் கருதினார்கள். அதை யொட்டியே அதன் முக்கியத்துவமும் இருந்தது. இந்த நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் கூடக் கிணறுகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட எண்ணெயைப் பூமி மட்டத்துக்குக் கொண்டு வந்து சிறு சிறு பள்ளங்கள் வெட்டி, எண்ணெயை அவற்றில் தேக்கி, வற்ற வைத்தோ அல்லது பூமியில் ஊறிப் போகவிட்டோ அதனுடைய இலேசான அம்சங்களை அகற்றினார்கள். தானாகவே எரியும் தன்மையுள்ள அம்சங்கள் அக் காலத்தவர்களுக்கு மிகுந்த தொல்லையாக இருந்தன. அதனால்தான் இந்தப் பாகத்தை எப்படியேனும் அகற்ற மேலே குறிப்பிட்ட முறையைக் கடைப்பிடித்தார்கள். ஆனால் இப்போதெல்லாம் குரூட் எண்ணெயில் கலப்பாக எரியக்கூடிய பாகம்தான் மிகவும் முக்கியமானது என்பது உணரப்பட்டு, அதைப் பாதுகாக்க எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனெனில் தற்காலத்திய ஆகாய விமானங்களையும் மோட்டார் கார்களையும் இயங்கச் செய்வதில் உபயோகமாகும் காஸலின் என்னும் எண்ணெயில் எளிதில் எரியக்கூடிய இந்த அம்சம்தான் அதிகமாக இருக்கிறது. எண்ணெய்க் கிணறுகள் இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பதிலும், துரப்பணத்தைக் கொண்டு கிணறுகள் வெட்டுவதிலும், 'குரூட்' எண்ணெயைச் சுத்திகரிப்பதிலும், பெட்ரோலியத்தையும் அதன் இதர இணைபொருள்களை உபயோகிப்பதிலும் பெருவாரியான முன்னேற்றங்கள் இப்போதெல்லாம் ஏற்பட்டு விட்டன. இன்னமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நவீன காலத்தில் போக்குவரத்து சாதனங்களுக்கும் தொழிற் கூடங்களுக்கும் பெட்ரோலியம் ஒரு இன்றியமையாத பொருளாகக் கருதப்படுகிறது. மேலும் எந்த நாடு அதிகமாகப் பெட்ரோலியக் கிணறுகள் உள்ளதாக இருக்கிறதோ அந்த நாடு அரசியல், பொருளாதாரத் துறைகளில் மிகுந்த செல்வாக்குள்ள நாடாகவும் வளர்ந்து விடுகிறது.

எங்கே எங்கே பெட்ரோலியம் இருக்கின்றன, அவற்றை எப்படி விஞ்ஞான முறையில் எடுப்பது என்பதை அறியப் பெட்ரோலியம் முதன் முதலாக எப்படி உண்டாயிற்று, எப்படி அது சிற்சில இடங்களில் மட்டும் தேங்கிக் கிடக்க நேரிட்டது, ஏன் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மட்டுமே அது காணப்படுகிறது, எப்படி அந்த இடங்களில் முழுதும் வற்றாமல் தேக்கமாக நிலைத்து விட்டது என்பன போன்ற விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். முதன் முதலாகக் கிணறு தோண்டப்பட்ட காலத்திலிருந்து கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் சேகரித்த விவரங்களும், ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளின் அறிவும்தான் பெட்ரோலியத்தைப் பற்றிப் பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்களுக்கும் என்ஜினியர்களுக்கும் ஆதாரம். இந்த அறிவைக் கொண்டுதான் இந்தத் தொழிலை எல்லாவித அம்சத்திலும் அபிவிருத்தி செய்கிறார்கள்.

உற்பத்தி ஆகும் விதம்

பெட்ரோலியம் முதன்முதலில் எப்படி உண்டாயிற்று? இவ்விஷயத்தில் பல்வேறு கருத்துக் கோட்பாடுகள் உண்டு. வாத விவாதங்களுக்கும் இடமுண்டு. சிலர் எரிமலைகளுடன் சம்பந்தப்பட்டதுதான் பெட்ரோல் என்று கருதினர். இதை உறுதிப்படுத்துவதே போல், சில இடங்களில் எரிமலை மணல் மேடுகள் கூடத் தென்படுகின்றன. இவற்றிலிருந்து வெளிவரும் அக்கினி ஜுவாலைகள் உண்மையான இயற்கை எரிமலைகளிலிருந்து வெளிப்படும் ஜுவாலைகளைப் போன்று இருப்பினும் நெருப்புக் குழம்புக்குப் பதில் ஹைட்ரோ-கார்பன் வாயுக்களும் ஆவியாகப் போகும் மண்ணும் நிறையக் கக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட மணல் மேட்டு எரிமலைகள் இந்தியாவுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் அரகான் கடலோரத்திலும் மெக்ரான் கடலோரப் பகுதியிலும் காணப்படுகின்றன. இந்த மணல் மேடுகளில் காணப்படும் ஹைட்ரோ - கார்பன்கள் உலோகக் கார்பைட்டுகள் (Metallic Carbides) மீது தண்ணீரை ஊற்றினால் ஹைட்ரோ - கார்பன் ஏற்படுவது போல் உண்டானவை என்று வாதம் செய்து பெட்ரோலியம் எரிமலையிலிருந்து கிடைக்கும் ஒரு பொருள் என்று எரிமலைவாதிகள் கருதுகிறார்கள். ஆனால் தற்காலம் பெட்ரோலியத்தைப் பற்றி, ஆராய்ச்சிகள் நடத்திய பூகர்ப்ப நிபுணர்கள் கடல் நீரில் அபரிமிதமாகக் காணப்படும் கடற்பாசி, போரமினிபெரா (Foraminifera)



அவன் வயிறு நிறைய சாப்பிடுகிறுன், ஆனுலும்...

குடும்பத்தினருக்கு வயிறு நிரம்ப சாப்பாடு போடுவதால் மட்டும் பயனில்லை. நீங்கள் அவர்களுக்குப் போடுவது சமநிலைப் போஷாக்குள்ள உணவாயும் இருக்கவேண்டும்.

ஆரோக்கியமும், சக்தியுமுள்ளவர்களாயிருப்பதற்கு நமது உணவில், விடமின்கள், மினரல்கள் புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்புச்சத்து முதலிய ஐந்துவித போஷாக்குகள் அடங்கியிருக்கவேண்டும். இவைகளில் கொழுப்புச் சத்துகூட மிகவும் முக்கியமானது.

வனஸ்பதி—தூய்மையான கொழுப்புச்சத்து


நமது தினசரி உணவில் குறைந்தது 3 அவுன்ஸ் கொழுப்புச் சத்து சேர்ந்திருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளார்கள். இந்த அளவு கொழுப்புச்சத்து சுலபமாகவும் குறைந்த செலவிலும் கிடைக்க நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உணவுப் பொருட்களை வனஸ்பதியில் சமையல் செய்வதே. பரிசுத்தமான தாவர எண்ணெயை விஞ்ஞான முறையில் பக்குவப் படுத்தப்பட்டதே, வனஸ்பதி. அதனுல் அது அதிக ருசியும், போஷாக்கும் அளிப்பதாக இருக்கிறது. மேலும், வனஸ்பதி சாதாரண எண்ணெய்களைவிட சிறந்தது. ஏனெனில் ஒவ்வொரு அவுன்ஸ் வனஸ்பதியிலும் 700 இன்டர்நேஷனல் யூனிட் விடமின் 'ஏ' சேர்க்கப்பட்டுள்ளது. விடமின் 'ஏ', கண்களும் சருமமும் ஆரோக்கியமாக இருக்கவும், தேகம் வளர்ச்சியடையவும் மிகவும் அத்யாவசியமானது.

வனஸ்பதி நவீனமானதும், சுத்தமானதுமான பாக்டரிகளில், விஞ்ஞான முறைப்படி சிறந்த ரீதியில் தயாரிக்கப்படுகிறது. ஆகவே அதை வாங்கும்போது, அது மிகவும் போஷாக்கு வாய்ந்ததென்றும் சுத்தமானதென்றும் நீங்கள் பூரணமாக நம்பலாம்.

வனஸ்பதி
இல்லாளுக்கு வரப்பிரசாதம்!

தி வனஸ்பதி மான்யுபாக்சரேர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

போன்ற மிக மிகப் பழைமையான உயிர்ப் பொருள்களிடமிருந்துதான் பெட்ரோலியம் சாதாரணமாகக் கிடைக்கிறது என்று எண்ணுகின்றனர். இந்தக் கடற்பாசிகளும் அதைப் போன்ற இதர பொருள்களும் காலப்போக்கில் பலப் பல மாறுபாடுகள் அடைந்து இறுதியில் இம் மாறுபாடுகளின் விளைவாக எண்ணெய்க் கொப்புளங்களாகச் சின்னஞ் சிறு சல குண்டுகளின் உருவத்தைப் பெற்று பாசிகள் ஒட்டிக் கொண்டிருக்கும் கற்பாறைகளின் மேற்பரப்பிலுள்ள சிறு துவாரங்களில் தங்கி விடுகின்றன. இவ்வாறு எண்ணெய்க் கசண்டுகள் தேங்கியுள்ள கற்பாறைகள்தான் பெட்ரோலியத்தின் மூலஸ்தானம் என்று சொல்ல வேண்டும். இக் கற்பாறைகள் பூகர்ப்பப் போக்கின்படி பல்வேறு அழுத்தங்களுக் குட்பட்டு நிலைபெயர்ந்து விடுகின்றன. சில அழுத்திக் கீழே போகக்கூடும். சில பாறைகள் ஒன்றுக்கொன்று ஒன்றுபோல் இணைந்து இறுகக்கூடும். மற்றும் சில வளைவுற்று. ஒன்றன் மீது ஒன்றாக மடிந்து மடிப்பும் வளைவுகளும் ஏற்படலாம். இப்படிப் பட்ட மாறுதல் நிகழும்போது கற்பாறைகளில் தங்கியுள்ள பெட்ரோலியமும் தன் நிலை பெயர்ந்து தண்ணீர் சரிவை நோக்கி ஓடுவது போல, ஒரு கற்பாறையிலிருந்து மற்றொரு பாறையை நோக்கி ஓடி எந்த இடத்தில் குழைவுகள் காணப்படுகின்றனவோ அங்கே ஏரி, குளம்போல் தேங்கி நிலைத்து நின்று விடுகின்றன.



பூமிக்கடியில் எண்ணெய் வயல்கள் இருக்கும் இடங்களைக் காட்டும் படம்: அ. கமான் போன்ற குழைவு. இ. எண்ணெய்த் தேக்கம் பூமி மடிப்பினால் தடைப்பட்டிருக்கிறது எ-க. ஏற்றத் தாழ்வுகள் மிகுந்த இடங்கள்; எண்ணெய் நிச்சயம் கிடைக்கு மென்று நம்ப முடியாது. உ. எண்ணெய்ப்பசிகையில் சில தேக்கங்கள். ச. இடையேயுள்ள பாறைகள் எண்ணெய்க் குளங்களை மறைக்கும் தோற்றம்.

பெட்ரோலியப் பாறைகள்

இம்மாதிரி பெட்ரோலியக் குளங்களுக்குப் பாறைகள்தான் அடிப்பாகம், பக்கத்திலுள்ள கரைகளும் பாறைகளே. இவற்றை எண்ணெய்க் குளப்பாறைகள் எனலாம். இப்பாறைகளின் தன்மை சாதாரணமாக எண்ணெயை உறிஞ்சித் தன்னகத்தே தேக்கி வைத்துக் கொள்வதற்குப் போதிய இடைவெளியை உடையதாக இருக்கும். கடற்பஞ்சில் தண்ணீரை உறிஞ்சுவதற்கு நுண்ணிய துவாரங்கள் இருப்பது போன்று குளப்பாறைகளிலும் நுண்ணிய துவாரங்கள் இருக்கும். இவற்றில் சாதாரணமாகத் தண்ணீர் தேங்கிக் கிடக்கும். தண்ணீரைவிடப் பெட்ரோலியம் இலேசானதால் இப்பாறைகளிலுள்ள தண்ணீரைத் தள்ளிக்கொண்டு அது மேலே வந்து விடும். இப்படி மேல் மட்டத்துக்கு வரும் போது பெட்ரோலியத்துடன் எப்போதும் காணப்படும் வாயுவும் கூடவே வருகிறது. அப்படி மேலே பொங்கிப் பெட்ரோலியம் வெளிச் செல்லாமலிருக்க வேண்டுமானால், அந்தக் குளம் நீரும் காற்றும் உள்ளே புகாதபடி அடைபட்டிருக்க வேண்டும். அதாவது இந்தக் குளத்துக்கு மேலே உயரத்தில் குப்பிக்குக் கார்க் அடைப்பது போன்று மற்றொரு சிறு பாறை இக்குளப் பாறைக்கு மூடி போட்டது போல் அமைந்திருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் குளத்தில் தங்கியுள்ள பெட்ரோலியமும் அத்துடன் இருக்கும் காற்றும் வெளியே போகாது அடைபட்டுக் கிடக்கும். அடைபட்டுக் கிடந்தால் மட்டும் போதாது; குளப்பாறையின் வடிவமும் தன்மையும் மேன்மேலும் பெட்ரோலியம் பெருமளவில் தேங்குவதற்கு வசதியுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

தேக்கங்களின் லட்சணங்கள்

இவ்வளவு லக்ஷணங்களுடன் இருக்கும் எண்ணெய்க் குளங்கள் வெவ்வேறு வடிவங்களிலும் வெவ்வேறு அளவிலும் இருக்கும். சில குளங்களில் லக்ஷக்கணக்கான டன்கள் பெட்ரோலியம் தேங்கிக்கிடக்கும். சிலவற்றில் மிகச் சொற்பமாகவும் இருக்கும். பெட்ரோலிய பூகர்ப்ப அறிவு முதிர்ச்சியடையாத ஆரம்ப காலத்தில் சாதாரணமாகப் பெட்ரோலியம் பூமிக்கு அடியில் கமான் வளைத்தது போல் அமைந்துள்ள குழைவுகளிலும், கவிழ்த்து மூடப்பட்ட கிண்ணத்தைப் போன்ற அமைப்புள்ள குழிகளிலுமே கிடைக்கும் என்று கருதப் பட்டது. இம்மாதிரி பிரதேசங்களைப் பூகர்ப்ப இயலில் "ஆண்டிக்லைன்" என்று சொல்லப்படுகிறது. இது தோற்றத்தில் ஒரு பீங்கான் 'பேஸினை'க் கவிழ்த்தது போலவும், அல்லது ஒரு சவாரி வண்டியின்

கூடு போலவும் இருக்கும். முதுகுப்புறம் கமான்போல் வளைந்த இதற்குக் குவிந்த கூரை என்றுகூடப் பெயர். பெயருக் கேற்பத்தான் தோற்றமும் இருக்கும். இம்மாதிரி வடிவங்களுள்ள பிரதேசங்கள்தான் பெட்ரோலைத் தேக்கிவைக்க உகந்த இடங்கள் என்று கருதப்பட்டாலும், அனுபவத்தின் மூலம் இவற்றைத் தவிர மற்ற இடங்கள்கூடப் பெட்ரோலியம் தேங்குவதற்கு ஏற்ற இடங்கள் என்று தெரிய வருகிறது. பூமியில் பெரிய பிளவுகள் இருக்குமிடங்களிலும், முதல் பாறை என்று மேலே விவரிக்கப்பட்ட கற்பாறைகளின் ஒழுங்கற்ற அமைப்பிலும், கெட்டியான கற்பாறைகளின் நடுவே ஊடுருவிச் செல்லும் 'போலா'ன இடங்களிலும்கூடப் பெட்ரோலியம் தேக்கமுறக் கூடும் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. குவிந்த கூரைக்குள்ளும் ஆன்டிக்ளைனிலும், எண்ணெயும் வாயுவும் மேல் மட்டத்தில் தங்கிவிடும். இந்த எண்ணெய்க் குள அமைப்புக்கள் சில மேலே படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

எண்ணெய் தேங்குவதற்கும் நிலைத்து நிற்பதற்கும் பூமிக்கடியில் சிற்சில அமைப்புக்கள் மட்டுமே ஏற்றவை என்பது போல் அவற்றை வெட்டி எடுத்துப் பூமிக்கு மேலே கொண்டு வருவது சுலபம் என்பதை நிர்ணயிக்கச் சில அம்சங்கள் இருக்க வேண்டியது மிக மிக அவசியம். குளப்பாறையின் தன்மையும் எண்ணெய் மேலே கொண்டு வருவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். குளப்பாறைக்குள் வேண்டிய மட்டும் எண்ணெய் இருக்கலாம். ஆனால் அதன் நுண்ணிய துவாரங்களிலிருந்து சுலபமாக எண்ணெய் வெளிவராமல் தடைப்பட்டுக் கிடந்தால் உபயோகமில்லை. துவாரங்களிலுள்ள காற்றும் இடைவெளியும் சாதாரணமாகக் காற்றின் அழுத்தச் சக்தியினாலேயே மேலெழும்பும்படியாகப் பெரியனவாக இருத்தல் அவசியம். துவாரங்கள் மிக நுட்பமானவையாக இருந்தால், எண்ணெய்த் துளிகள் பாறையை விட்டு இலேசில் விலகாது. எண்ணெயும் தடித்துக் குழம்பு போல் இருந்தால் சுலபமாக அது இடம் விட்டு இடம் பெயராது. சில எண்ணெய்களில் பெருமளவு வாயுக்கள் கரைந்திருக்கும். அப்படியிருப்பது நல்லதுகூட. எண்ணெய் சுலபமாக நிலைபெயர்ந்து ஓடுவதற்கு இது உதவுகிறது. அத்துடன் எண்ணெயின் ரசாயனப் பொருள்கள் எவ்வாறு சேர்ந்திருக்கின்றன என்பதும் முக்கியம். ஏனெனில் பாரபின் மெழுகு, அல்லது ஆஸ்பால்ட் (Asphalt) போன்ற பொருள்கள் அதிக அளவில் எண்ணெயில் கலந்திருந்தால் அதன் ஓட்டம் வேகமாக இராது. இப்பொருள்கள் எவ்வளவுக் கெவ்வளவுகுறைந்திருக்கின்றனவோ அவ்வளவுக்கு எண்ணெயின் ஓட்டமும் அதிகமாக இருக்கும்.

மேல் மட்டத்துக்கு வருவதெப்படி?

எண்ணெய்க்குளங்கள் வாயுத்தேக்கங்கள் எங்கே இருக்கின்றன என்பதை நிர்ணயம் செய்வது எளிதான காரியம் அன்று. அதற்கு நேரான வழிகளும் இல்லை. அதாவது, பூமியின் மேற்பரப்பை மட்டும் ஆராய்ந்துவிட்டுக் குறிப்பிட்ட எந்த இடத்தில் எண்ணெய்த் தேக்கங்கள் இருக்கின்றன என்று நிச்சயிக்க முடியாது. சாதாரணமாக எண்ணெய் கிடைக்குமிடங்களைத் தேடுவதென்பது பரவலாக வண்டல் படிந்து படிந்து பழமையடைந்த பிரதேசங்களில் எண்ணெய்த் தேக்கங்களுக்கு ஏற்றதாக இருக்கக் கூடிய இடங்களை ஒருவாறு ஊகித்தறிவதே. பல அறிகுறிகளைக் கொண்டு இம்மாதிரி பிரதேசங்களை நிர்த்தாரணம் செய்ய வேண்டும். முதலாவதாக, எண்ணெய்த் துளிகள் ஏராளமாகப் படிந்து குளங்களாகத் தேங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கும்படியாக வண்டல் மண் படிவங்கள் கனமாக இருக்க வேண்டும். இப்பாறைக்கு மட்டும் கனமாக இருக்க வேண்டியதென்பது அவசியம் இல்லை. ஏனெனில் ஆழமில்லாத சில பிரதேசங்களில் கைகளாலேயே தோண்டப்பட்ட கிணறுகளிலிருந்து எண்ணெய் கிடைத்திருக்கிறது என்பதைப் பற்றி மேலே சொல்லியிருக்கிறது. ஆனால் குளப் பாறைகள் தோன்றிய அந்த ஆதி காலத்தில், ஒரு சில ஆயிரம் அடிகள் கனத்துக்காவது வண்டல் படிந்த பிரதேசமாக இருந்திருக்க வேண்டும். இந்த வண்டல் படிந்த அடுக்குகளில் சிலவற்றிலாவது சிற்சில இடங்களிலாவது குளப்பாறைகள் உண்டாவதற்கு ஏற்ற படுகைகள் இருக்க வேண்டும். பாறைகளின் அமைப்பும் எண்ணெய்த் தேக்கங்கள் உண்டாவதற்கு ஏற்றபடி இருக்க வேண்டும். அதாவது கடற்பஞ்சிலிருப்பது போன்ற நுண்ணிய துவாரங்களுடனும் குப்பிக் கார்க்கு போன்ற மூகப்புப் பாறையுடனும் இருக்க வேண்டும். எண்ணெய்த் தேக்கங்களும் தற்கால விஞ்ஞான அறிவுக்கு எட்டிய சாதனங்களைக் கொண்டு பூமி மட்டத்துக்கு வெளிக் கொண்டுவரக் கூடிய ஆழத்தில் இருக்க வேண்டும். தற்காலத்தில் வேலை செய்து வரும் எண்ணெய்க் கிணறுகள் பெரும்பாலும் 3000 அடியிலிருந்து 6000 அடி ஆழத்தில்தான் இருக்கின்றன. 10.000 அடி ஆழத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகளும் பல இருக்கின்றன. சமீபத்தில் அஸ்ஸாம் ராஜ்யத்தில் நஹோர்கடியா என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய்த் தேக்கம் 13,740 அடி ஆழத்தில் இருக்கிறது. உலகத்திலேயே இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய்க் குளங்களில் மிகவும் ஆழமானது மெக்ஸிகோ வளைகுடா கடற்கரையோரத்திலுள்ள லூஸியானா ராஜ்யத்திலுள்ளதுதான். அதன் ஆழம் 22 510 அடி. அதாவது பூமி மட்டத்திலிருந்து நாலு மைல்களுக்கும் மேற்பட்ட ஆழம்.

மேலும் ஒரு அம்சம் கூட முக்கியமானது. குறிப்பிட்ட பிரதேசம் ஓரளவுக்குப் பூகம்ப அதிர்ச்சிக் குட்பட்டிருந்தால் கூட நல்லது. ஏனெனில் அப்போதுதான் ஒன்றன்மீது ஒன்றாகப் படிந்துள்ள பூமி மடிப்புகள் கெட்டியாக இறுகிப் போகாமல் இடைவெளியுடன் கூடியவையாக இருக்கும். மடிப்புகளே இல்லாமல் கெட்டியான இடங்களைக்கூட அம்மாதிரிப் பிரதேசங்களில் சிறந்த எண்ணெய்க் குளங்களும் தேக்கங்களும் இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கலாம். [அடுத்த இதழில் முடியும்]

ஏஸி

அல்லது

ஏஸி டிஸி?



PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

அமிர்தாஞ்சனம்

முதல்மருந்தாக

உபயோகித்துப் பாருங்கள்



அமிர்தாஞ்சனம் 9 இல் 7 வகை வலிகளை அறவே போக்கிவிடுகிறது. உண்மையில், எல்லாவிதமான தசை வலிகளையும் தலை நோவுகளையும் தணித்து இதமளிக்கிறது. 65 வருட காலமாக ஆதிக்கம் செலுத்திவரும் இந்த அருமருந்து, வலிகண்ட பகுதியினுள் ஊடுருவி வலிகளுக்குப் பொறுப்படையான காரணமான இரத்த நெருக்கத்தைக் கரைத்துவிடுகிறது.





அமிர்தாஞ்சன் லிமிடெட்
சென்னை-4
மற்றும் பம்பாய் 1, கல்கத்தா 1



அமிர்தாஞ்சனம் இன்ஹேலர் மூக்கடைப்பை அகற்றுகிறது.

AL-58-3C TAM



தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ். இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.



**பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.**

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

FPY-54-TAM

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

ஸோல் ஏஜண்டுகள்: தாதா அண்டு கம்பெனி
88, னைனியப்ப நாயக் தெரு. சென்னை-3

நோயால் வருந்தும் பொழுதும்,
நோயிலிருந்து குணம் பெறும்
பொழுதும் யாவருக்கும்
ஓர் சிறந்த டானிக்



நல்ல தேகவளர்ச்சியையும், திரும்ப வாலிபத்தையும் கொடுக்கக் கூடிய ஆயுர்வேதிக் டானிக்

ZANDU

ச்யவன்பிராஷ்

லேஹியம்



**ஜண்டு பார்மஸூடிகல்
வொர்க்ஸ் லிட்.,**

கோகலே ரோடு லௌத், பம்பாய்-28.

Graphic 2-49

டிசம்பர் மாதக் குளிர் ஈட்டியாகப் பாய்ந்து எலும்பைக் குடைந்தது. தூய வெண்ணிறச் சேலையின் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்ட தங்கம், ஜன்னலுக்கு வெளியே தாவும் பார்வையை மீட்டுப் புத்தகத்தில் பதித்தாள். இன்ப போதையில் மூழ்கிக் கிடந்த மனம் படிப்பில் லயிக்கவில்லை. அவள் கைகள் மெல்ல அந்தப் புத்தக அட்டையை வருடின. மனம் கவரும் இளம் சிவப்பு நிறத்தில் தங்க வண்ணப்பூ வேலைப்பாடுகளுடன், உயர்ந்த தோலாலாகிய அட்டை இடப்பட்டுச் சிக்கென்று கைக்கு அடக்கமாக இருந்தது; அழகிய புத்தகம். புத்தகத்தை மார்புடன் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள். அன்பு மதத்தைப் பரப்பிய மகானின் அமுத மொழிகள் அடங்கிய அப்புத்தகத்தை, டாக்டர் ஞானதிக்கம் அவளுக்கு அன்பளிப்பாக ஈந்தது எவ்வளவு பொருத்தம்!

"தங்கம்! நீ கிறிஸ்தவப் பெண்ணாகப் பிறக்கவில்லையே? ஆனாலும், உண்மையான கிறிஸ்தவனின் பொன்னான மனம் உன்னுடையது என்று முதல் நாளே நான் கண்டுபிடித்து விட்டேன்" என்றார் டாக்டர் ஞானதிக்கம்.

"என்ன பைபிளா, டாக்டர்? என்னிடம் ஏற்கெனவே ஒன்று இருக்கிறதே. புத்தகம் முழுதும் மனப்பாடம் எனக்கு... ஒன்று மட்டும் உண்மை, டாக்டர்! நானும் எவ்வளவோ நூல்கள் படித்திருக்கிறேன். விவிலிய நூலில் நான் கண்ட மன அமைதியை எதிலும் பெறவில்லை" என்றாள் பரவசத்துடன்.

கடலன்ன தம் ஆழ்ந்த கண்களால் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே நின்ற டாக்டர் ஞானதிக்கம் ஒன்றுமே பேசவில்லை; மெல்லிய பெருமூச்சுடன் நகர்ந்து விட்டார்.



நர்ஸ் தங்கம்

ஆர். எஸ். ஞானம்பாள்

வேலையில் சேர்ந்த அன்று டாக்டர் கேட்டார்: "நீ கான்வெண்டில் படித்தவளா, தங்கம்?"

"இல்லை. ஸிஸ்டர் ஒருவரிடம் படித்தேன்."

"நினைத்தேன். உன் தந்தையின் பெயர் சடகோபாச்சாரி என்று கூறினாய். ஆயினும், எங்களவர் பழக்க வழக்கமெல்லாம் உனக்கு நன்கு அத்துபடியாகி இருக்கிறதே! தங்கம், என்னிடம் நர்ஸ் வேலை பார்ப்பது சுலபமில்லை. அவதியுறும் உயிர் இனத்தின் துன்பத்தைத் துடைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு டாக்டர் தொழிலில் இறங்கியவன் நான். இரவும் பகலும் பணிபுரியும் என்னுடன் ஈடுகொடுக்க முடியாமல், வந்த உடனேயே விலகிச் சென்ற நர்சுகள் பலர். இது முற்றிலும் வசதியற்ற கிராமம்; நீர்வளமோ, நிலவளமோ ஒன்றுமில்லாத வறண்ட பட்டிக்காடு. உனக்குத் தகுந்த தோழிகளைக் கூட இங்கே காண முடியாது. சுற்று வட்டாரத்தில் பத்து மைல்களுக்கு நகர வாசனையே வீசாத இந்தச் சூழ்நிலையில் நிரந்தரமாகத் தங்கி வேலை பார்க்க முடியுமா? நீ மனம் விரும்பாமல் ஒரு கணம் கூட இங்கு இருக்க நிர்ப்பந்தமில்லை" என்றார்.

"நான் யோசனை செய்வதற்கு என்ன இருக்கிறது, டாக்டர்? என் வரை, உலகில் ஏதோ ஒரு மூலையில் உயிர் வாழ வேண்டும்; அதற்கு உழைக்க வேண்டும். அதிர்ஷ்டவசமாக என் உழைப்பு பிறர் துன்பம் தீர்க்கும் தன்மை உடையதாக உள்ளது. என் உழைப்பால் உங்கள் லட்சியம் குறைவில்லாது நடைபெறும் என்றால் என் ஆயுள் முழுதும் இங்கேயே





சென்னை, கிருத்தலக்ஷ்மி விலாச சபையின் மாதர்கள் தினத்தில் டாக்டர் எம். வி. ரங் அவர்களின் புதல்வி பேபி மாதுரியின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. அப்பொழுது முன்னாள் மேயர் தாராசெரியன் அவர்கள் ஒரு தங்க மெடலை மாதுரிக்குப் பரிசளித்தார்.

இருந்து விடவும் நான் தயார்'' என்றாள் தங்கம் மனப்பூர்வமாக.

தங்கம், டாக்டர் ஞானதிக்கத்திடம் வேலைக்கு அமர்ந்து நான்குமாதங்களாகி விட்டன. நாலாயிரம் வருஷங்கள் பழகியது போல் ஒரு நெருக்கம் அவர்களிடையே இருந்து வந்தது. டாக்டர் நினைப்பார்; வாய்விட்டு அவர் வெளியிடுவதற்கு முன்னால் தங்கம் அதைச் செயலாற்றி விடுவாள்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை. இனிய கற்பனைகளில் ஈடுபட்டிருந்த தங்கத்துக்குச் சோதனை தினம். முதுகில் பெரிய ரத்தக் கட்டியுடன் உயிருக்கு மன்றாடும் ஒரு 'கேஸ்' வந்தது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் சாவு நெருங்குகிறது என்று தெளிவாகத் தெரிந்தது. டாக்டர் இல்லை; பதினொரு மைல் தூரத்தில் உள்ள மாதாகோவிலுக்குச் சைக்கிளில் சென்றிருந்தார். அவர் வாழ்வில் ஞாயிறு தோறும் தவறாத நியதி அது.

அசட்டுத் துணிச்சலுடன் தானே டாக்டரின் வேலையை மேற்கொண்டு விட்டாள் தங்கம். 'தவறு நேர்ந்து விட்டால்' என்று அஞ்சி நடுங்கும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, 'ஆபரேஷன் செய்து கட்டுப்போட்டு முடித்த சமயத்தில் தான் ''கன்கிராஜுலேஷன்ஸ், தங்கம்! இன்று ஒரு உயிர் உன்னால் பிழைத்தது'' என்று டாக்டரின் குரல் ஒலித்தது. நிமிர்ந்த தங்கம் அதிர்ந்து போனாள். குலுங்கிக் குலுங்கி அழும் தங்கத்தை ஆச்சரியத்துடன் பார்த்தார் டாக்டர் ஞானதிக்கம்.

''நான் செய்தது தவறு. டாக்டர்! வெறும் நர்சான நான் உங்கள் வேலையைச் செய்ய முற்பட்டதே பிழை. என் தவறால் இந்த உயிருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் கடவுள் என்னை மன்னிக்கவே மாட்டார்!''

ஆதரவுடன், அன்புடன் அவளைத் தேற்றினார் ஞானதிக்கம்.

தங்கம் பயந்ததற்குத் தகுந்தாற் போல், அன்றிரவே அந்த நோயாளியின் நிலை கவலைக்கிடமாகி விட்டது. ஞானதிக்கம் வெகு பாடுபட்டார்—அவனைப் பிழைக்க வைத்துவிட. தங்கத்தின் முகத்தில் மீண்டும் சிரிப்பின் ஒளியைத் தாம் காணவாவது, அவன் பிழைக்க வேண்டுமே?' என்று சிரமப்பட்டார்.

விடியற்காலையில், 'இனிக் கவலைப்பட அவசியமில்லை. நோயாளி பிழைத்து விடுவான்' என்று கூறியபடியே மருந்துக் கூடத்தினுள் நுழைந்தவர் திகைத்து விட்டார். முழங்காலை மண்டியிட்டுக் கண்மூடிப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தாள் தங்கம். எதிரே, சுவரில், பரம பிதாவின் திரு உருவம் அமுத மழையென அன்பான புன்னகையை உதிர்த்துக் கொண்டிருந்தது. மெய்சிலிர்க்க, ''தங்கம்! உன்பிரார்த்தனையைக் கர்த்தர் ஏற்றுக் கொண்டு விட்டார். என் திறமையைவிட உன் பிரார்த்தனையே சக்தி வாய்ந்தது'' என்று அவள் தோள் மீது கை வைத்தார்.

தங்கத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. டாக்டர் ஞானதிக்கம் தம் மனத்தை விண்டு காட்டி விட்டார். அவர்கள் அன்பு இன்று பிறந்து நாளை அழியும் வகையானதே அல்ல.

''இது ஒன்று துரும்புபோல் உறுத்திக் கொண்டிருப்பானேன், தங்கம்? இந்தக் கிறிஸ்துமஸில் நீ முறைப்படி கிறிஸ்தவ நங்கையாகி விடலாம். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி பாதிரியாரிடம் கூறி விட்டேன். புது வருஷம் பிறந்த மறுநாள் நம் திருமணம் நடக்கவும் நான் குறித்தாயிற்று. அழைப்பிதழ் அச்சடிக்கக் கொடுத்து விடலாமா, தங்கம்?''—தங்கத்தின் ஆமோதிப்பை, அனுமதியை வேண்டி நின்றார் ஞானதிக்கம். அவருக்

குப் பதில் கூறும் பொறுப்பை அவள் கண்களே மேற்கொண்டன.

டாக்டர் ஞானதிக்கமும், நர்ஸ் தங்கமும் மருத்துவ விடுதியை விட்டு ஒன்றாக வெளியே செல்வது அபூர்வக் காட்சி. திருமணத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கத் தங்கம் கூட இல்லாமல் தமக்கு ஒன்றுமே இயலாது என்று உணர்ந்தார் டாக்டர். ஓயாது உழைப்பிலேயே ஊன்றிய உடலும், உள்ளமும் உல்லாசம் வேண்டின.


தங்கம் டாக்டரிடம் வந்த நாள் முதலாகக் கிராமத்தையும், சுற்று வட்டாரச் சேரிகளையும் விட்டு 'டவுனு'க்கு வர நேர்ந்ததே இல்லை; நகரத்தின் நாகரிகக் காட்சிகள் தங்கத்தின் மனத்தில் இனம் புரியாத கிளுகிளுப்பை உண்டாக்கின. வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டு, சினிமா பார்த்து விட்டு, டாக்டருடைய நண்பரின் வீட்டை அடைந்தனர்.

தங்கம் விடிய விடியத் தூங்கவே இல்லை. நினைக்க நினைக்க வேடிக்கையாக இருந்தது. எங்கே பிறந்து எங்கே வளர்ந்து, கடைசியில்...!

தாயை இழந்த தங்கத்துக்குத் தாயுமாக இருந்த அவளுடைய தந்தை மறைந்தபொழுது பத்து வயதுகூட இராது. எட்டிய உறவினர் கூட்டம் ஒட்டாமல் ஒதுங்கியே நின்றது. தேம்பியழும் சிறுமியைத் தாங்கி ஆதரிக்க முன்வந்தாள் 'ஸிஸ்டர்' ஜபமணி. மிஷன் ஸ்கூலில் உபாத்தியாயினியாக இருந்த ஜபமணிக்கு, சடகோபாச்சாரியின் செல்வப் புதல்வியின்மீது விழுந்த பாசத்துக்குக் காரண காரியம் காட்ட முடியாது.

பரமபிதாவின் அடியவர் கூட்டம், தங்கத்தின் வரவைப் புண்ணியாத்மா ஒன்றின் வரவு என விழாவாகவே கொண்டாடமுற்பட்டது. 'கருணை காட்டுவது மனிதராகப் பிறந்தவரின் கடமை. தங்கம் உலகம் தெரிந்த அறிவாளியானபின் மனம் விரும்பிக் கர்த்தரின் கருணையை வேண்டினாலொழிய மதமாற்றத்துக்குச் சம்மதியேன்' என்று வன்மையாக மறுத்துவிட்ட ஜபமணி யார் வெறுப்பையும் லட்சியம் செய்தவள் இல்லை. பெற்ற தாயைக் கண்டதில்லை






ஓய்வுபெற்ற ஆந்திரா அக்கௌண்டெண்ட் ஜெனரல் காரியாலய சூப்பிரிண்டெண்ட் திரு எம். கே. பஞ்சாபகேசன் அவர்களுக்கு சஷ்டியப்தபூர்த்தி சமீபத்தில் சிறப்பாக நடந்தது.

தங்கம். தாயென்றால் ஜபமணியின் திருஉருவம்தான் நெஞ்சில் நிற்கும். உணவும், உடையும் மட்டும் இல்லை; அவளுக்கு அறிவைப் புகட்டிய ஞானத்தாய் ஜபமணி. திவ்வியப் பிரபந்தம், தினம் ஒரு பாடலாவது படித்து அர்த்தத்துடன் விளக்கி மனப்பாடம் செய்யச் சொல்லி வற்புறுத்துவாள். தேவாரமும் திருவாசகமும் தொட்ட இடத்தில் வரும் அப்பெண்மணிக்கு. அவர்கள் வாழ்ந்த சின்னஞ்சிறு கிராமத்திலே, அவள் அறிவை உணர்ந்து பாராட்டியவர் யாருமே இல்லை. பிற மதத்துப் பெண்மணி ஒருத்திக்கு சம்ஸ்க்ருத சுலோகங்களில் எப்படித்தான் அவ்வளவு ஈடுபாடு வந்ததோ! கண்ணீர் பெருக, அவள் தன் மதத்துக்குப் புறம்பான தெய்வங்களைக் குறித்த பாடல்களைப் பாடுவதைக் கேட்டு மகிழ்வது தவிர உணர்ந்து ஆச்சரியப்படக் கூடத் தெரியாத வயது தங்கத்துக்கு.

நாலைந்து மாதங்களாக உடல் நலிவால் படுக்கையில் வீழ்ந்து விட்ட ஜபமணி சொன்னாள்: "தங்கம்! உன்னைத் தனியாக விட்டுச் செல்கிறேனே என்ற ஒரு கவலைதான் எனக்கு. ஆயினும் நீ அறிவாளி; மானமாகப் பிழைக்கத் தொழில் பயின்ற உனக்கு ஈசன் அருள் புரிவார் என்ற நம்பிக்



ஹௌரா தென்னிந்திய சங்கத்தினர் கல்கி உதவி ஆசிரியர் திரு ரா. வீழிநாதன் எழுதிய 'மனோரமா' என்னும் நாடகத்தைக் கல்கத்தா தேசிய உயர்நிலை பள்ளியில் நவம்பர் 16ந் தேதி வெகு விமரிசையாக நடத்தினர். இந்த நாடக நிதியைத் தங்கள் நூல் நிலைய அபிவிருத்திக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அந் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

கையினால் தைரியமாகச் சாவை எதிர் பார்க்கிறேன்.

"தங்கம்! என்னைக் கர்த்தர் மன்னிக்கட்டும். என்னுடன் கோவிலுக்கு வர நீ விரும்பியபோதெல்லாம், வேதப் புத்தகத்தைப் படிக்க எடுத்த சமயமெல்லாம் உன்னைத் தடை செய்த பாவி நான். நீயும் என்னை மன்னித்துவிடு. தூய மலராக என்னிடம் வந்த உன்னை, எவ்விதத்திலும், என் சேர்க்கையோ, என் வளர்ப்போ பாதிக்கக் கூடாது என்று வெகுவாகக் கவலைப்பட்டேன். உன் மதத்துக்குரிய நூல்களையும் கற்பித்தேன்.

"அறியாப் பருவத்தில் காதல், ஊதல் என்று பித்துப் பிடித்துக் தான்தோன்றியாகப் போய் மதம் மாறிய பின்னரே உணர்ந்தேன், தலைமுறை தலைமுறையாக ரத்தத்தில் ஊறிப்போன ஆசாரங்களை உதறுவதும், மனத்தில் குடிகொண்டுள்ள தெய்வத்தை மறப்பதும் எவ்வளவு கடினம் என்பதை. பிறந்த மதத்தில் நிம்மதியும் அமைதியும் காணமுடியாத எனக்குப் பிற மதம் புகுந்தும் நிம்மதி கிட்டவில்லை.

"இந்த நிலையில் தான் நீ வந்தாய். தங்கம், உலகம் — ஏன், நீயும்கூட, கைம்மாறு கருதாது உன்னை அன்பாக வளர்ப்பது மூலம் நான் ஏதோ பெரிய செயலைச் சாதித்து விட்டதாகக் கருதலாம். ஆனால் சுயநலம்தான், உன்னிடம் அன்பு செலுத்தக் காரணம். தங்கம்! நீ என் மகள். என் வயிற்றில் பிறந்திருக்க வேண்டியவள். ஆச்சரியமாக இல்லை? ஆம், உன் தந்தை சடகோபனின் ஜாதகத்துடன் என் ஜாதகம் பொருந்தாத காரணம் காட்டி எங்களைப் பிரித்துவிட்டது விதி. ஆத்திரத்தில் அறிவிழந்து வீட்டை விட்டு ஓடிய ரங்கமணிக்குக் கிறிஸ்தவர்களின் கன்னியா மடம் ஜபமணி என்ற புதுப்பெயருடன் புது வாழ்வு அளித்தது. சடகோபனை இழந்த எனக்குக் கன்னி வாழ்வு கசப்பாக இல்லை. எனினும் புதிய சூழ்நிலை புது தெய்வம் எதையும் ஏற்க மறுத்தன மனம். இன்றும் கண்ணை மூடிய பிரார்த்தனையில் ஈடுபட்டால் பள்ளிகொண்டவனின் பால்வடியும் முகம்தான் மனத்தில் தோன்றுகிறதே தவிர அமரன் ஏசு என் நெஞ்சில் நிலைபெறுவதே இல்லை. மதம் மாறி ஆத்மத் துரோகம் செய்ததுடன் பிறந்த மதம், புகுந்த மதம் இரண்டுக்குமே பாவியாகிவிட்ட எனக்கு உய்வு உண்டா? என்னைக் கடவுள்தான் மன்னிப்பாரா?... ."

எப்பொழுது கண் அயர்ந்தாளோ, அறைக்கு வெளியே இருந்து டாக்டரின் மெல்லிய குரல் கேட்டுத்தான் விழித்தாள். "நேரமாயிற்று. தங்கம்! இப்பொழுதே கிளம்பினால்தான் காலையில் கேஸ்களைக் கவனிக்க முடியும்."

எழுந்திருக்க மனம் வராது புரண்டு படுத்தாள் தங்கம். எங்கோ கனவுலகில்



காரைக்குடி நகரத்து ''மதாபிமான சங்கத்தின் ஆதரவில் ராய. சொக்கலிங்கம் அவர்களின் மணிவிழா சம்பத்தில் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் குன்றக்குடி அடிகளார் சொற்பொழிவாற்றுவதைக் காணலாம்.

கேட்பதுபோல் மிருதங்கமும் ஜாலராவும் சுருதியுடன் இணைந்து இனிமையாக ஒலித்தன. டாக்டரின் கரம் பற்றும் நாளை எண்ணி எண்ணிக் கணக்கிட்டுக் காலண்டரை மனப்பாடம் செய்து வைத்திருந்த அவளுக்கு நினைவு வந்தது; அன்று டிசம்பர் மாதம் இருபத்தியொன்றும் நாள்; வைகுண்ட ஏகாதசி, அரங்கப் பெருமாளைச் சேவிக்கச் செல்லும் பக்தர்கள் அவன் புகழ் பாடிச் செல்கின்றனர். தெருவோடு செல்லும் பஜனை கோஷ்டியைக் கண்டு தாடையில் போட்டுக் கொண்டாள்; கரம் குவித்துத் தலைகுனித்து வணங்கி மெய்சிலிர்க்கச் சிலையாகி நின்றாள் தங்கம்.

''முட்டாள்கள்; பாவிகள்! கர்த்தர் தம் இரு கைகளாலும் அணைத்துப் பரமண்டலத்துக்கு அழைத்துச் செல்லும் சுலபமான வழியை அறியாத அறிவிலிகள்.'' டாக்டர் ஞானநிக்கம்தான் தம் நண்பனிடம் பஜனை கோஷ்டியைக் குறித்து உணர்ச்சியுடன் விமரிசித்துக் கொண்டிருந்தார்.

''ஞானநிக்கம்! நீங்கள் தங்கத்துடன் பேசிக் கொண்டிருங்கள். நான் கடைக்குப் போய்ச் சாமான்கள் வாங்கி வருகிறேன்'' என்று நண்பர் கூறினார்.

'சரி' என்று டாக்டர் ஞானநிக்கம் தலை யசைத்து விட்டுத் தங்கம் இருக்குமிடத்துக்கு வந்தார்.

''ஏன் தங்கம்! உன்முகம் வாடிக் கிடக்கிறது? புது இடம், நேற்று இரவு நல்ல தூக்கமில்லையா? ஓய்வே தராமல் உன்னை வேலை வாங்கும் நான் எவ்வளவு இரக்கமற்றவன்!'' அவள் மலர் முகத்தைத் தூக்கிப் பிடித்து இன்பம் காண விழைந்தார் ஞானநிக்கம்.

அவர் கைகளை மெள்ள விலக்கியபடி, ''என்னை மன்னித்து விடுங்கள், டாக்டர்! மதம் மாறவோ, தங்களை மணம் புரியவோ நான் கொஞ்சமும் விரும்பவில்லை'' என்றாள் தங்கம்.

அவளுடைய பதில் டாக்டர் ஞானநிக்கத்தைத் தூக்கி வாரிப் போடச் செய்தது. அவர் இந்தப் பதிலை அவளிடம் எதிர்பார்க்கவில்லை.

அதிர்ந்து போன ஞானநிக்கம், ''என்ன தங்கம்?'' என்று குழப்பத்தில் மூழ்கித் தவித்தார்.

''ஆமாம், டாக்டர்! நான் எப்பொழுதும் உங்கள் நர்ஸ் தங்கமாகவே இருப்பேன். இன்று ஒரு நாள் மட்டும் எனக்கு விடுமுறை கொடுக்க வேண்டும்.''

நர்ஸ் தங்கத்தின் மன மாற்றத்தைக் கண்டு டாக்டர் ஞானநிக்கத்துக்குக் கோபமோ, வெறுப்போ, துவேஷமோ ஏற்படவில்லை. அவளுடைய மன உணர்ச்சிக்கு அவர் மதிப்பும் கௌரவமும் அளித்தார்.

அன்று ஆதிகேசவப் பெருமாள் கோவிலில் பக்தர்கள் அரங்கப் பெருமாளைத் தரிசிக்கத் திரளாகக் குழுமியிருந்தனர். அந்தக் கோவில் மண்டபத்தில் பக்தி பரவசத்துடன பாடிக்கொண்டிருந்தாள் தங்கம். அவள் பக்திப் பாடல்களிலே பக்தர்கள் மெய்யுருகி நின்றனர்.

''பக்கத்துக் கிராமத்தில் இருக்கிறாரே, டாக்டர் ஞானநிக்கம் அவரிடம் நர்ஸாக இருக்கிறாளாம் இந்தப் பெண். என்ன அழகாகத் திவ்யப் பிரபந்தப் பாடல்களைப் பாடுகிறாள்! கேட்கக் கோடி காது வேண்டும்'' என்று பக்தர்கள் மெய்மறந்து கூறினர். மக்கள் கூட்டம் அலைமோதியது. ஆதிகேசவப் பெருமாள் கோவிலை நோக்கி.

கிறிஸ்துமஸ் பெருநாள். ஞானநிக்கம் மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்: ''பரமண்டலத்தில் இருக்கும் பரம பிதாவே! உம் கருணைக்குப் பாத்திரமாகாமல் பாவிகள் கூட்டத்தில் ஒன்றிவிட்ட தங்கத்தை மன்னியும், கர்த்தரே! எங்கள் ஏகவே! உம் அடிமையாளை என் பொருட்டுத் தங்கத்தை மன்னியும். ஆமென்!''

1898-1958





பண்டிட்
டி. கோபாலாசார்லு

பண்டிட்
டி. தேசிகாசார்லு

ஆயுர்வேதாஸ்ரமம்

வைர விழா

சமர்ப்பணம்

ஆயுர்வேதாஸ்ரமம் வைர விழாக் கொண்டாடும் இக் குதூகல சந்தர்ப்பத்தில், மானிடரின் பிணியைப் போக்கும் பணியில் மேலும் தீவிரமாக ஈடுபட விரதம் எடுத்துக் கொண்டு, 1898-ம் ஆண்டு தொடங்கி கடந்த 60 ஆண்டுகளாக, மதிப்பிற்குரிய தங்கள் ஸ்தாபகர், பண்டிட் டி. கோபாலாசார்லுவும், டி. தேசிகாசார்லுவும் தன்வந்திரி பகவான் அருட்பிரசாதத்துடன் நிறைவேற்றி வந்த பரம்பரைத் தொழிலைச் சிறப்பு மென்மேலும் ஓங்கும்படி நடத்த உறுதி பூண்டுள்ளனர்.

வைர விழாவிற்குத் தலைமை தாங்க அன்புடன் இசைந்து, ஆயுர்வேதத்தில் தமக்கு இருக்கும் சிரத்தையை வெளிப்படுத்திய

மேதகு மைசூர் மகாராஜாவுக்கு

நிர்வாகத்தினரின் நன்றி உரித்தாகுக. ஆயுர்வேதாஸ்ரமத்திற்கு இத்துணைகாலமும் ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கிய நகர மாந்தர்கள், வைத்தியர்கள், வைத்திய ஸ்தாபனங்கள், வியாபாரிகள், விநியோகஸ்தர்கள் முதலானோருக்கும், அயல்நாட்டு அன்பர்களுக்கும் நன்றி செலுத்தி, அவர்களது ஆதரவைத் தொடர்ந்து கோருகின்றனர்.

❋

ஆயுர்வேதாஸ்ரமம், சென்னை-17

கீழ்க்கண்ட பிரசித்திபெற்ற ஔஷதங்களைத் தயாரிப்பவர்கள் :

ஜீவாம்ருதம் ★ அருணா ★ பாலப்பிராஸா

என் கதை

கடிகாரம்



கௌசிகன்

ரமணியும் உஷாவும் அண்ணன் தங்கை. ரொம்பக் கெட்டிக்காரர்கள். எந்த விஷயத்தைப் பற்றியும் தெரிந்து கொள்வதில் ஆசை அவர்களுக்கு. ஒரு நாள் உஷாவுக்குச் சின்னஞ்சிறிய பித்தளைப் பல்சக்கரம் ஒன்று கிடைத்தது. அழகான பளபளக்கும் சக்கரம். சக்கரத்தின் நடுவிலே முன்னும் பின்னும் முளை இருந்தது. உஷா அதைச் சுற்றி விட்டாள். மேஜையின் மீது அந்தச் சக்கரம் 'கிர்' என்று வேகமாகச் சுற்றியது. ஆடாமல் அசையாமல் தூங்குவது போல் அது சுற்றும் அழகை உஷா ரசித்துக் கொண்டிருந்தபோது ரமணி அங்கு வந்தான். உஷா தனக்குக் கிடைத்துள்ள சக்கரத்தையும் அது சுற்றும் அழகையும் பற்றித் தன் அண்ணனிடம் பெருமையடித்துக் கொண்டாள்.

"ப்பூ...இதென்ன! ஓட்டைச் சக்கரம்!" என்று அலட்சியமாக உதட்டை நெளித்தான் ரமணி. அது தன் கைக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவனுக்கு.

"ரமணி! அப்படிச் சொல்லாதே. எத்தனையோ யந்திரங்களையெல்லாம் ஓட வைப்பவனுக்கும் நான். என் மகிமை உனக்குத் தெரியுமா?" என்றது இனிமையான ஒரு குரல் சலங்கை ஒலி போல். அதை உஷா சொல்லவில்லை. அப்படியானால்?...ரமணி உஷா இருவரும் திகைத்தார்கள். பேசியது பித்தளைப் பல் சக்கரம். வேகம் குறைந்து ஆடி ஆடி அசைந்து உருண்டு நின்ற சக்கரம் இவர்களைப் பார்த்துச் சிரித்தது.

"ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? நான் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா நீங்கள்? என்னுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லையா உங்களுக்கு?" என்று கேட்டது பல்சக்கரம்.

"கதை கேட்பதுதான் எங்களுக்குக் கரும்பு தின்பது போல் ஆச்சே. நீ யார்? உன் கதை என்ன சொல்லு?" என்றான் ரமணி. அப்போது சுவரிலிருந்த கடிகாரம் பன்னிரண்டு தடவைகள் 'டிங்டாங்' 'டிங்டாங்' என்று அடித்தது. அண்ணனும் தங்கையும் அதிசயத்தோடு கடிகாரத்தைப் பார்த்தார்கள். ஏன் தெரியுமா? அப்போது கடிகாரத்தின் முட்கள் ஒன்பது மணியைத்தான் காட்டிக் கொண்டிருந்தன. அப்படியிருக்கப் பன்னிரண்டு தடவைகள் மணியடிப்பானேன்?



குழந்தைகளின் வியப்பைப் புரிந்து கொண்டது போல் சக்கரம் கூறியது:

"அந்தக் கடிகாரத்துக்குள் இருக்கும் என் சகோதரர்களில் யாருக்கோ உடல் நலமில்லை. அதனால்தான் இந்தக் கோளாறு!"

"உன் சகோதரனு.....அப்படியென்றால்?" புரியாமல் கேட்டாள் உஷா.

"ஆமாம், உஷா! நான் இதைப் போன்ற ஒரு கடிகாரத்தைச் சேர்ந்தவன்தான். கடிகாரத்தினுள்ளே என்னைப் போன்ற பல சக்கரங்கள் இருக்கின்றன. அதனால்தான் கடிகாரம் ஓடுகிறது" என்றது பல் சக்கரம்.

ரமணியும் உஷாவும் கடிகாரம் எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினார்கள்.

"ஆமாம்! எங்கள் அப்பா ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் உனக்குச் சாவி கொடுக்கிறாரே, எதற்காக?" என்று கேட்டான் ரமணி.


"அதுவா...? இப்போது உன் தங்கை உஷா என்னை மேஜையின் மீது சுற்ற விட்டாளே; அதே போல்தான் உன் அப்பாவின் செய்கையும். புரியவில்லையா? உன் மாமா வாங்கிக் கொடுத்திருக்கும் மோட்டாருக்குச் சாவி கொடுக்கும்போது என்ன ஆகிறது? அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஸ்பிரிங் தகடு அழுத்தமாகச் சுற்றப்படுகிறது. பிறகு அந்த ஸ்பிரிங் பிரியும்போது மோட்டாரின் சக்கரங்களை வேகமாகச் சுழல வைக்கிறது. காரும் 'கிர்' என்று தரையில் ஓடுகிறது. இல்லையா? இதேதான் கடிகாரத்தின் உள்ளேயும் நடக்கிறது. கடிகாரத்தினுள்ளே என்னைப் போல் சிறியதும் பெரியதுமான சக்கரங்கள் பல இருக்கின்றன. சாவி கொடுப்பதினால்தான் எங்களோடு இணைக்கப்பட்டுள்ள ஸ்பிரிங் அழுத்தமாகச் சுற்றப்படுகிறது. உன்னைக் கட்டிப் போட்டால் நீ என்ன செய்வாய்? அவிழ்த்துக் கொண்டு விடுதலையாகத்தானே முயலுவாய்? அதே போல் நாங்களும் விடுதலை பெற முயலும்போது ஸ்பிரிங் மெள்ள மெள்ளப் பிரிகிறது. அப்படிப் பிரியும்போது ஏற்படும் சலனமே எங்களுடைய ஓட்டம்."

"நேரத்தைக் குறிக்கும் முட்களை ஓட்டும் அதே சக்கரம்தானா மணியை அடிக்கும்படியும் செய்கிறது?" என்று கேட்டாள் உஷா.

"நான்தான் சொன்னேனே, கடிகாரத்தினுள்ளே என்னைப் போல் பல சக்கரங்கள் இருக்கின்றன என்று. ஒரு சக்கரத்தில் உள்ள பல் இன்னொரு சக்கரத்தின் பற்களோடு பொருந்தும்படி இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சக்கரமும் ஒவ்வொரு காரியத்துக்காக. ஆனால் எங்களையெல்லாம் ஓட வைப்பது எங்களில் மூத்தவரான பெரியவர்தான். அண்ணாவான பெரியசக்கரம் சுழன்றால்தான் தம்பியாகிய நாங்களும் சுழலுவோம்.

"உன் பம்பரத்தைச் சுற்ற நீ என்ன செய்கிறாய்? கயிற்றை இழுத்து விடுகிறாய். உடனே பம்பரம் 'கிர்' என்று வேகமாகச் சுற்ற ஆரம்பிக்கிறது இல்லையா?"

"கயிற்றை இழுத்து விட்டதும் பம்பரம் சுழலுவதும், கடிகாரத்துக்குச் சாவி கொடுத்ததும் நீங்கள் ஓட ஆரம்பிப்பதும் ஒன்றுதானா?" என்று கேட்டான் ரமணி.



"அது எப்படி ஒன்ருகும்? செயல் ஒன்ருனுலும், முறை வேறு. பம்பரம் வேகமாகச் சுற்றி வேகம் குறைந்து விழுந்து விடுகிறது. இல்லையா? ஆனல் அதைப் போல் வேகமாக நாங்கள் சுழல முடியாது. நண்டின் முன்னுலுள்ள கையைப் பார்த்திருக்கிருயா? அது அகல விரிந்தால் எப்படி இருக்குமோ, அது போல் இரண்டு கொடுக்குகள் பெரிய பல் சக்கரத்தின் இரு பக்கமும் இருக்கும். பெரியவர் வேகமாகச் சுழல ஆரம்பிக்கும்போது அவரது பல் சக்கரத்தினிடையே கொடுக்கு தனது கையைக் கொடுத்து நிறுத்தும். பிறகு கையை எடுக்கும். மறுபடியும் பற்களுக்கிடையே கையைக் கொடுத்து நிறுத்தும். இப்படிப் பம்பரத்தைப் போல வேகமாகச் சுழல விடாமல் ஒவ்வொரு பல்லின் இடையிலேயும் தனது கையைக் கொடுத்துக் கொடுத்து நிறுத்தி நிறுத்திச் சுற்ற வைக்கும் அந்தக் கொடுக்குகள்.


"கடிகாரத்தின் உள்ளே இருக்கும் ஒவ்வொரு சக்கரத்துக்கும் தன்னுடைய வேலை என்ன என்று தெரியும். ஒரு சக்கரம் விநாடி முள்ளை நகர்த்தச் சுழலும், மற்ருென்று நிமிஷ முள்ளை நகர்த்தும், மூன்ருவது மணி முள்ளை ஓட வைக்கும். இதில் வேடிக்கை என்ன தெரியுமா? விநாடி முள்ளை இயங்க வைக்கும் குட்டிச் சக்கரம் வெகுவேகமாகச் சுழலும். நிமிஷ முள்ளைச் சுற்ற வைக்கும் சின்னச் சக்கரம் கொஞ்சம் வேகமாகச் சுற்றும். மணியைக் காட்டும் சின்ன முள்ளை ஓட்டும் பெரிய சக்கரம் ரொம்ப மெதுவாக நகரும்" என்றது பல் சக்கரம்.

"ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறதே. எங்கள் தாத்தாவும் பாட்டியும் எங்களைப் போல் குழந்தைகளாக இருந்தபோது கூட நீ-அதுதான்-கடிகாரம் இருந்ததா?" என்று கேட்டாள் உஷா.

"காலத்தை மனிதன் அளக்க ஆரம்பித்த அந்தக் கதை இருக்கிறதே, அது ரொம்ப சுவாரஸ்யமானது. ஆதிகால மனிதனுக்கு மாதம், வாரம், வருஷம் இந்தக் கணக்கெல்லாம் தெரியாது. சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் நாளின் ஆரம்பம், முடிவு என்று குறித்துக் கொண்டான். இரண்டு நாட்கள் என்று சொல்ல, இரண்டு சூரியன் என்று சொல்லி வந்தான். நாகரிகம் வளர வளர, காலத்தைக் கணக்கிடுவதிலே கவனம் செலுத்தினன் மனிதன். ஆதிகாலத்தில் நம் நாட்டில் நட்சத்திரங்களைக் கொண்டு நாட்களைக் கணித்தார்கள் பெரியோர்கள்.

மைதானத்திலே ஒரு குச்சியை நட்டு அதன் நிழல் பூமியில் விழுவதைக் கணக்கிட்டு மணியை நாழிகையில் சொல்லி வந்தார்கள் வெகுகாலத்துக்கு முன்னே. ரோமானியர்களும் கிரேக்கர்களும் காலத்தைக் கணக்கிட உபயோகித்த 'ஸன் டயல்' கருவி (படம் 3) இதே முறையைப் பின்பற்றியது. 'நாழிகை வட்டில்' என்று சொல்லப்படும் Sand Glass (படம் 1) மேலை நாட்டில் பழக்கத்தில் இருந்தது. மாவு போன்று சலித்த மணல் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்த வட்டிலின் மேலிருந்து கீழே விழும். மெழுகுவத்தியில் கறுப்பும், வெளுப்புமான வளையக் குறிகளிட்டு அது உருகி எரிந்து குறைவதிலிருந்து (படம் 2) காலத்தைக் கணக்கிட்டார்கள். சைன தேசத்திலே மணல் கடிகாரத்தின் தத்துவப்படியே நீர்க் கடிகாரம் உபயோகத்தில் இருந்தது. ஒரு பாத்திரத்திலுள்ள நீர் சொட்டுச் சொட்டாக ஒழுகி அடுத்த பாத்திரத்தை அடையும் நேரத்தைக் கணக்கிட்டுக் காலத்தை அளந்தார்கள். ஆதி காலத்திலே அலாரம் கடிகாரம் கூட இருந்தது. கீழே இடப் பக்கத்திலுள்ள படத்தில் அதைக் காணலாம். குறிப்பிட்ட நீளமுள்ள குச்சியில் குறிப்பிட்ட இடங்களில் கனமான உலோக மணிகளைக் கயிற்றில் இணைத்து அந்தக் கயிறு குச்சியில் படும்படி தொங்கவிட்டிருப்பார்கள். கீழே உலோகப் பாத்திரம் இருக்கும். குச்சியைக் கொளுத்தி விடுவார்கள். குச்சி எரிந்து கொண்டே வந்து கயிற்றைத் துண்டிக்கும், உடனே உலோக மணி பாத்திரத்தில் விழும். அதனுல் ஏற்படும் சப்தமே இப்போதுள்ள 'அலாரம் மணி' போல. குச்சி குறிப்பிட்ட இடம் வரை எரிந்து கொண்டு வர இத்தனை நேரமாகும் என்று கணக்கிட்டார்கள்."

(அடுத்த இதழில் முடியும்)





19. நூலேணி வழியே...

"இப்போது எங்கே போகிறோம் என்று தெரியுமா?'' என்று கேட்ட ரமேஷைப் பார்த்து, "சொன்னால்தானே எங்களுக்குத் தெரியும்?'' என்றான் மணி.

"கோராவின்வீட்டுக்கு'' என்றார் ரமேஷ்.

"அவரைப் பற்றிய முழு விவரங்களும் சேகரித்து விட்டோம். ஆனால் திடீரென்று அவரைப் போய்க் கைது செய்ய முடியாது; செய்யவும் கூடாது. ஏனென்றால் ஒரு முக்கியமான மனிதர், அவர் பாதுகாப்பில் இருக்கிறாரா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் அவரை அங்கிருந்து கடத்தியாக வேண்டும். அதன் பிறகுதான் 'கோரா' என்ற கோவிந்தராஜனைக் கைது செய்யலாம்.''

"இந்தக் 'கோரா' என்ற கோவிந்தராஜன் யார்?'' என்று கேட்டான் கிட்டு.

"நாலைந்து வருஷங்களுக்கு முன் திடீரென்று தோன்றிய மனிதன் இவன். சிங்கப்பூரிலிருந்து வந்ததாகப் பிறர் நம்பும்படி நடித்து, அக்கம்பக்கத்திலுள்ளோரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி உள்ளவர். சுற்றுவட்டாரத்தில் நல்ல செல்வாக்கு. பணக்காரர்கூட. ஆனால் அவர் வீட்டுக்குள் யாரும் போய்ப் பார்த்ததில்லை. அத்தனை பெரிய வீட்டில் அவரும் அவருடைய ஒரே வேலைக்காரனையும் தவிர வேறு யாரும் கிடையாது. இந்த விவரங்களை யெல்லாம் நான் இரண்டு மூன்று நாட்களில் மிகவும் சிரமப்பட்டுச் சேகரித்தேன்'' என்றார் ரமேஷ்.

"அது சரி! இப்படிப்பட்டவர் வீட்டுக்குள் என்ன மர்மம் இருக்கிறது, யாரை ஒளிய வைத்திருக்கிறார் என்பதை எப்படி நாம் அறிய முடியும்? எந்தக் காரணத்தைக் கொண்டு அவர் வீட்டுக்குள் நுழைவது?'' என்று கேட்டான் மணி.

"அதைப் பற்றிய யோசனை இல்லாமலா உங்களை அங்கு இப்போது அழைத்துப் போய்க் கொண்டிருக்கிறேன். கோவிந்தராஜனிடம் யார் போய் எந்த நிதிக்குப் பணம் கேட்டாலும் கொடுக்கக் கூடியவராம். தாம் தர்மசிந்தையுள்ளவர் என்பதைப் பிறர் நம்புவதற்காக இதைச் செய்து வருகிறார். ஆகவே கிட்டு, நீ என்னோடு வரவேண்டும். நான் உன் தகப்பனார். நீ என் மகன். நாமிருவரும் கோவிந்தராஜனைச் சந்திக்க வேண்டும். இவர்கள் வெளியே காத்திருப்பார்கள். உன் கல்விக்காக நான் அவரிடம் நிதி யாசகம் கேட்கப் போகிறேன். அதற்காகத்தான் இந்த வேஷம். நான் அவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது நீ மெள்ள நழுவி அந்த வீட்டைச் சோதனையிட வேண்டும். இதோ இந்தக் கொத்துச் சாவியை வைத்துக் கொள். இது உனக்குத் தேவையாயிருக்கும். எப்படி என்திட்டம்?'' என்றார் ரமேஷ்.

ரங்கசாமியின் கார் போய்க் கொண்டிருந்தது. மணி உற்சாகம் குன்றியவனாக வெளியே பார்த்துக் கொண்டு வந்தான். கோவிந்தராஜனுக்கு இரண்டுபங்களாக்கள் உண்டு. ஒன்று நகரத்திலும், மற்றொன்று நகருக்கு வெளியேயுள்ள பெரிய சோலையின் மத்தியிலும் இருந்தது. கோடை காலத்தில் கோவிந்தராஜன் அந்தப் பங்களாவில்தான் வசிப்பார். இப்போது அவர் அங்குதான் இருந்தார். இதை முன்பே அறிந்து கொண்டிருந்தார் ரமேஷ்.

ஏதோ சிந்தனையுடன் யாருடனும் பேசாமல் வெளியே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மணி சட்டென்று, "ரங்கசாமி! காரை நிறுத்து!'' என்று கத்தினான். திடுக்கிட்ட ரங்கசாமி காரை நிறுத்தியதும் மணி காரிலிருந்து கீழே குதித்து, "சரி, நீங்கள் போய்வாருங்கள்!'' என்றான் எங்கோ பார்த்துக் கொண்டு. எல்லாரும்





ஏககாலத்தில், "என்ன மணி, இது? ஏன் இப்படி?" என்றார்கள் பரபரப்புடன்.

"ஒன்றுமில்லை! நீங்கள் போய் வாருங்கள். எனக்கு வேறு ஒரு முக்கியமான அலுவல் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான் மணி. ஏதோ காரணமில்லாமல் இப்படி நடந்துகொள்ள மாட்டான் மணி, என்பதை உணர்ந்து கொண்ட கிட்டுவும் ரங்கசாமியும் அவனை அதற்கு மேல் வற்புறுத்தவில்லை. மணியை விட்டு விட்டுக் கார் வேகமாகக் கிளம்பியது.

மணி காரணமில்லாமல் இறங்கவில்லை. தூரத்தில் தெரிந்த ஒரு கட்டடத்தின் மாடி ஜன்னலிலிருந்து ஒரு கைக்குட்டையை அசைத்து யாரோ சமிக்ஞை செய்து கொண்டிருந்தார்கள். அதைக் கண்டே மணி கீழே இறங்கினான்.

* * *

சேகருக்கு இப்போது கையில் அத்தனை வலி இல்லை. தூக்கி, நீட்டி, மடக்க முடிந்தது. இரண்டு நாட்களாகவே அந்தச் சிறையிலிருந்து தப்புவது எப்படி என்பதைப் பற்றித் தீவிரமான சிந்தனையில் ஈடுபட்டிருந்த சேகர் தம்முடன் அந்தப் பெண் லலிதாவுக்கும் விடுதலையளித்து அழைத்துச் செல்லுவது என்று தீர்மானித்து விட்டார். கடைசியில் இருவரும் சேர்ந்தே ஒரு திட்டம் வகுத்தார்கள். படுக்கையின் மேல் விரிப்பைத் துண்டு துண்டாகக் கிழித்து ஒன்றோடொன்றை முடிந்து முறுக்கிக் கயிறு போலச் செய்தார்கள். சேகரின் கைக்குப் பாண்டேஜ் கட்டுவதற்காக லலிதா கத்தரிக்கோல் கொண்டு வந்திருந்தாள். அதன் உதவியால் சேகர் இரண்டு நாட்கள் இரவு முழுதும் அந்த அறையிலிருந்த ஒரே ஜன்னலின் கம்பிகளைப் பதித்திருந்த மரத்தைக் கெல்லிக் கெல்லி இரண்டு கம்பிகளை அசைத்து அசைத்துச் சுலபமாக எந்த நிமிஷத்திலும் அதை எடுத்து விடுவதற்கு வசதியாக்கி வைத்திருந்தார்.

அன்று சேகரும் லலிதாவும் எப்படியும் தப்பி விடுவதென்று தீர்மானித்திருந்தார்கள்.

காவல்காரர்களின் வழக்கமான கண்காணிப்பு முடிந்ததும் 'பெட்ஷீட்'டினால் உருவாக்கிய நூலேணியை ஜன்னல் கம்பியில் கட்டித் தொங்க விட்டார் சேகர். இரண்டாவது மாடியிலிருந்து அது பாதியில் அந்தரத்தில் தொங்கியது. தரையைத் தொட அதைப்போல் இன்னொரு பங்கு வேண்டும். இதற்கு என்ன செய்வது? இத்தனை பாடுபட்டுக் கடைசியில் பலன் இல்லாமல் போய் விடுமோ?

இப்படிக் கவலையுடன் ஜன்னல் வழியே வளைந்து திரும்பும் பாதையைச் சேகர் பார்த்த போதுதான் அங்கே ரங்கசாமியின் கார் வந்து கொண்டிருப்பதைக் கண்டார். 'கோரா'வின் கோட்டை பங்களாவை நோக்கிப் போய்க் கொண்டிருந்த அந்தக் காரை ஜன்னல் வழியாகக் கைக் குட்டையை அசைத்து அழைத்தார். தற்செயலாக இதைக் கவனித்த மணி, 'இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. யாரோ யாரையோ அந்தக் கட்டடத்து மாடியில் சிறையிட்டிருக்கிறார்கள். அவர் உதவிக்கு அழைக்கிறார். ஒரு வேளை அது நிலவறையிலிருந்து மறைந்த மனிதராக இருந்தால்?....' வீரச் செயல்கள் புரிய வேண்டும் என்று துடிக்கும் மணியின் உள்ளம் உவகையால் துள்ளியது. 'இவர்கள் தேடிச்செல்லும் மனிதரை இவர்களுக்கு முன் நான் கண்டு பிடித்துக் காப்பாற்றி விடுகிறேன்' என்று எண்ணமிட்டபடியே வேகமாக நடந்தான் மணி.

அங்கே மாடியறையில் சேகர், 'நூலேணி பாதியிலேயே முடிந்து விடுகிறதே என்ன செய்வது' என்று யோசித்தவர் மணி காரிலிருந்து இறங்கி வருவதைக் கண்டு துணிவு கொண்டவராக எப்படியும் இறங்கி விடுவது என்று முடிவு செய்து கொண்டு ஜன்னல் கம்பிகளைப் பெயர்த்து எடுத்தார். அதே சமயம் அறையின் கதவைத் திறந்து கொண்டு குண்டன் உள்ளே நுழைந்தான். அவன் கையில் ஒரு கத்தி இருந்தது. முகத்திலே ஆத்திரமும் கோபமும் ஜ்வலிக்கப் பேய்ச் சிரிப்பு சிரித்தான்.

"டேய், பயலே! உன் கைவரிசையை என்னிடமே காட்டப் பார்க்கிறாயே? தப்பிக்கவா பார்க்கிறீங்க?" என்று சொல்லிக் கொண்டே கத்தியை அசையாமல் சேகர் முன்னால் நீட்டிக் கொண்டு அசைந்து அசைந்து அவரை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான். லலிதா பீதியினால் உடல் வெல வெலக்கச் சுவரோடு போய் ஒண்டிக் கொண்டாள். கூச்சலிடக் கூட அவளால் முடியவில்லை. (தொடரும்)



கனிவுடைமையே பண்புடைமை

"யார் அம்மா இது? என்னைப் பார்த்து ஏன் இப்படிச் சிரிக்கிறார்?" என்று கேட்டான் குழந்தை, கண்டக்டரைச் சற்று சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டே. பாவம், அந்தச் சிறு பையனின் உள்ளத்தில் இன்று ஏக வேதனை. பாட்டியுடனும், தனக்குப் பிடித்த பூனைக்குட்டிகளுடனும் வெகு ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தவனைப் பிரித்து அழைத்துக் கொண்டு வந்துவிட்டால் ஏன் வேதனை இருக்காது? யார் மேலும் அவனுக்கு வெறுப்பே பொங்கியது.

"இல்லையப்பா, அவர்தான் இந்த பஸ்ஸின் கண்டக்டர். ரொம்ப நல்லவர், உன் அப்பாவைக் கூடத் தெரியும்" என்றாள் தாயார். "அப்படின்னா, பாட்டியைக் கூடத் தெரியுமா?" என்றான் பையன் சட்டென்று. "தெரியும் குழந்தே, நல்லாத் தெரியும்." என்று கனிவுடன் கண்டக்டரின் பதில் வந்தது. "போன வருஷம் கூட சித்திரை மாசம் மீனாக்ஷி கோவிலுக்குப் போக இதே பஸ்ஸில்தான் வந்தாங்க." உடனே சிறுவனின் இளம் இதயம் மலர ஆரம்பித்துவிட்டது. "என் பாட்டியிடம் எவ்வளவு பூனைக்குட்டி இருக்கு தெரியுமா? ஒண்ணு கறுப்பு, ஒண்ணு சிவப்பு, இன்னொண்ணு...உம்...ம்...எல்லாத்தையும் விட்டுட்டு வந்துட்டேன்." "கவலைப்படாதே தம்பி, உனக்கு வெள்ளை வெளேர்னு பூனைக்குட்டி நான் கொண்டு தரேன்" என்று கண்டக்டரின் பதில் மேலும் குழந்தையைச் சமாதானப் படுத்தியது.

இதுபோன்று இதயமுருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு தான் பணியாற்ற வேண்டும், ஒரு போக்குவரத்து ஸ்தாபனம். வெறும் திறமை மட்டும் போதாது. மனிதத் தன்மை வேண்டும். பழைய சம்பிரதாயங்களில் ஈடுபாடுள்ள நாம் புதிய கருத்துகளையும் ஸ்தாபனங்களையும் சற்று யோசித்தே ஏற்கிறோம். ஆனால் ஏற்றுவிட்டாலோ அவை நமது வாழ்க்கையுடனேயே ஒன்றி விடுகின்றன.

இன்று டி. வி. எஸ். பஸ்ஸில் போகும் பிரயாணிகளுக்கெல்லாம் ஏதோ பஸ்ஸில் போனோம் என்ற எண்ணத்துடன் விஷயம் முடிந்து விடுவதில்லை. தலைமுறை தலைமுறையாக முன்னோர்கள் சென்ற வழியில் தாங்களும் செல்கிறோம் என்ற பெருமிதம் அவர்களுக்குண்டு. "எப்போதும் பஸ்ஸிலே போவதில் தான் சௌகரியம் அதிகம். அதிலும் டி. வீ. எஸ். பஸ்ஸில் போனால் சொந்த பஸ்ஸிலே போகிற மாதிரியாகவே இருக்கிறது" என்று பிரயாணி ஒருவர் கூறியதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்.

சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)



பதின்மூன்காம் அத்தியாயம்

மணம் இழந்த மலர்

ஒரு மலர் மிருதுவான இதழ்களை விரித்து இளங் காற்றிலே இலேசாக அசைந்தாடி மனத்தைக் கவரும் மணத்தைப் பரப்பியது. மற்றொரு மலர் இதழ்களின் நிறம் மங்க மணமிழந்து வாடி வதங்கிக் கருகத் தொடங்கியது.

இன்பத்தேனை உண்ட ஒரு கருவண்டு ரீங்காரமிட்டு ஆனந்தமாகச் சுற்றி வந்தது. மற்றொரு வண்டு சிறகுகள் இழந்து தரையில் விழுந்து புழுவாகத் துடிதுடித்தது.

கொழுக்கொம்பைச் சுற்றித் தழுவி நின்று தளிர்விட்டது ஒரு மலர்க்கொடி. ஆதரவற்றுக் கீழே துவண்டு கிடந்து நாசமாகிக் கொண்டிருந்தது மற்றொரு பூங்கொடி.

மல்லிகா இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்தாள். விமலா துன்பத்தில் உழன்று கொண்டிருந்தாள். வருங் காலத்தைப் பற்றிய எத்தனை எத்தனையோ இன்ப நினைவுகளுக்கு இடையே மல்லிகாவுக்கு அடிக்கடி விமலாவைப் பற்றிய அனுதாபமும் அதனால் எழுந்த துயரமும் தோன்றிக் கொண்டேயிருந்தன. எதிர்காலம் என்னும் இருள் சூழ்ந்த சூன்யத்தை நினைத்துப் பார்க்கும் பொழுதெல்லாம் தன்னை உயிரோடு கொன்று கொண்டிருந்த ஒரு வேதனைக்கு இடையே

கி. ராஜேந்திரன்

'அத்தான் சந்தோஷமாக இருப்பார் அல்லவா?' என்ற எண்ணத்தில் விமலாவுக்கு அலாதியானதொரு ஆனந்தமும் உண்டாயிற்று.

இருவரையுமே பார்த்து விட்டு வந்தான் நடராஜன்.

விமலா ஒரு 'ஸ்வெட்டர்' பின்னிக் கொண்டிருந்தாள். தன்னுடைய துயரத்தை ஓரளவுக்காவது கட்டுப்படுத்திவைக்க ஏதாவது ஒரு காரியத்தை அவள் செய்ய வேண்டியிருந்தது. விரல்களின் வேகத்தை அதிகப்படுத்திச் சிந்தனையையும் அதிலே செலுத்திய போது கொஞ்சம் தன் நிலைமை மறக்க முடிந்தது. கொஞ்ச நேரம் தான். அதற்குப் பின் மறுபடியும் மனம் கட்டுக்கடங்காமல் போகவே விரல் பின்னும் வேகத்தை விட சிந்தனையின் வேகம் அதிகமாயிற்று.

'நான் தவறாகத்தான் நடந்து கொண்டு விட்டேன். அத்தானுக்கு அவளிடம் எவ்வளவு பிரியம் உண்டு என்பது எனக்குத் தெரிந்ததுதானே? தெரிந்திருந்தும் அவள் எழுதிய கடிதத்தைச் சுக்குச் சுக்காக அத்தான் எதிரேயே கிழித்து எறிந்தால் அவர் என்ன நினைப்பார்? அதோடு நின்றேனா? அதுவும் இல்லை. 'அவள் கிடக்கிறாள், அத்தான்! வேறு நல்ல விஷயமாகப் பேசுவோம்' என்றேன். என் நாக்கில் சனீசுவரன்தான் வந்து புகுந்து கொண்டிருக்க வேண்டும், அப்போது. மல்லிகாவைப் பற்றிப் பேசினால் கெட்ட விஷயமா என்ன? அப்படிப் பேசிய பிறகு அத்தான் என்னை எப்படித் திரும்பிப் பார்ப்பார்? எதற்காக என்னிடம் பேசப் போகிறார்?'

சிந்தனையைக் கட்டுப்படுத்த விமலா இன்னும் வேகமாகப் பின்ன ஆரம்பித்தாள். சிந்தனை அதைவிட வேகமாக ஓடியது. அத்தானையே சுற்றி வந்தது. விமலாவினால் வேதனையைப் பொறுக்க முடியவில்லை. கால்வாசிப் பின்னியிருந்த ஸ்வெட்டரையும் ஊசிகளையும் மூலையில் தூக்கி எறிந்து விட்டு, 'ஸ்வெட்டர் பின்னுவதால் மனத்தைக் கட்டுப்படுத்த முடியாது, துயரத்தை அடக்க முடியாது' என்ற முடிவுக்கு வந்தவளாக வேறு வழியின்றி மனத்தை அதன் போக்கிலே விட்டு விட்டாள். சுவரிலே மாட்டியிருந்த அத்தானின் படத்தைக் கண்களில் ததும்பி நின்ற கண்ணீருடன் ஏறிட்டுப் பார்த்தாள். உதடுகள் மட்டும் அசைய, அதனுடன் மனம் விட்டுப் பேசினாள்.

"அத்தான்! உங்களை நான் முதன் முதலாக எப்போது காதலித்தேன், தெரியுமா? உங்களுக்குத் தெரியாது! சொல்கிறேன், கேளுங்கள். நாம் இருவருமே குழந்தைகளாக விளையாடிக் கொண்டிருப்போம். அடிக்கடி சண்டை பிடிப்போம். விளையாட்டே ஒரு சண்டையாகவும், சண்டை போடுவதே ஒரு விளையாட்டாகவும் கூட இருந்தது. நீங்கள் கோபத்தில் என் தலையில் 'நறுக்' கென்று குட்டினீர்கள். நான் பதிலுக்கு எம்பிக் குதித்து உங்கள் தலையில் குட்டுவேன். என் கன்னத்தில் அடிப்பீர்கள். நான் சிரித்துக் கொண்டே உங்களைப் பதிலுக்கு அடிப்பேன். என் கையை அழுத்திக் கிள்ளுவீர்கள். நான் அழுது கொண்டே உங்களைக் கிள்ளுவேன்.

"திடீரென்று இதெல்லாம் ஒரு நாள் மாறிவிட்டது. நீங்கள் என்னைக் குட்டினால் பொறுத்துக் கொள்ள வேண்டும். பதிலுக்குக் குட்டக் கூடாது என்று தோன்றியது. அடித்தால் நான் அப்பால் போய் விடுவேன். வீட்டுக்குள் போய் உங்களுக்குத் தெரியாமல் அழுவேன். நீங்கள் சிரித்துப் பேசினால், அன்பாகப் பழகினால் எனக்கு ஒரே குதூகலமாக இருக்கும். பல நாட்களாக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த ஒரு ஆசைப்பொருள் கிடைத்து விட்டது போல் மனம் சந்தோஷப்படும். இந்தத் திடீர் மாறுதல் ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. புரியவும் இல்லை. அப்போதெல்லாம் எனக்குக் காதல் என்றால் என்ன என்பதே தெரியாது. அதை அறிந்து உணர்ந்ததில்லை. ஆனால் இப்போது உணர்கிறேன், அப்போதே காதல் விதையை என் மனத்தில் ஊன்றி விட்டீர்கள் என்பதை.

"அப்புறம் ஒரு நாள் என் தாயார் எனக்குத் தாவணி அணிவித்தாள். எதற்காக அதை உடுக்கிறோம் என்பது எனக்





குப் புலப்படவில்லை. புதிய ஆடை ஒன்றைப் புது மாதிரியாக அணிவதிலே மகிழ்ச்சி ஏற்பட்டது. அவ்வளவுதான். அதைக் கட்டிக் கொண்டவுடன் உங்களிடம் ஓடி வந்து காட்ட வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

'அம்மா சித்தாடை வாங்கித் தந்திருக்கிறாள், அத்தான்! எப்படி இருக்கிறது?' என்று கேட்டேன்.

''நீங்கள் என்னை ஏற இறங்கப் பார்த்தீர்கள். 'ரொம்பப் பெரிய மனுஷி மாதிரி புடவை உடுத்திக் கொண்டிருக்கிறாயே?' என்று கேட்டீர்கள். கேட்டுவிட்டு கிரிக்கெட் மட்டையை எடுத்துக் கொண்டு போய் விட்டீர்கள். நீங்கள் சொன்ன வார்த்தைகளுக்கு நீங்களே அதிகமாக மதிப்புக் கொடுத்திருக்க மாட்டீர்கள், அத்தான்.

''ஆனால் அதே வார்த்தைகள் மிகப் பெரிய மாற்றங்களை என்னிடம் உண்டாக்கின. அந்த வினாடியில் நான் நிஜமாகவே பெரிய மனுஷியாகி விட்டேன். எனக்குப் புரியாமலே இருந்து வந்த பல விஷயங்கள் 'பளிச்'சென்று தெரிந்து விட்டன. அன்றைய தினம்தான் வெட்கம் என்பதை நான் உணர்ந்தேன். முடிவில்லாமல் வளவளவென்று உங்களுடன் பேசிக் கொண்டேயிருந்த நான் அளவுடன் பேச ஆரம்பித்தேன். உங்களுடன் விளையாடுவதையே அடியோடு விட்டு

விட்டேன். உங்கள் முகத்தை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருக்கக் கூச்சப்பட்டேன். ஆனால் நீங்கள் என்னைப் பார்க்காதபோது உங்களைத் திருட்டுத்தனமாகப்பார்த்து மகிழ்வேன். தப்பித் தவறி எப்போதாவது நீங்கள் என் உடலைத் தீண்டிவிட்டால் என் உள்ளமே நடுங்கும். சடாரென்று அப்பால் நகர்ந்து கொள்வேன். மனப் பதற்றம் அடங்கிய பிறகு இன்பப் பூரிப்பு உண்டாகும். நீங்கள் பல நாட்களுக்கு முன்பு ஊன்றிய காதல் விதை அப்போது முளைவிட்டு இளம் தளிர்களுடன் கூடிய சின்னஞ்சிறு செடியாக விளங்கியது. அன்று முதல் அந்தச் செடியைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்திருக்கிறேன், அத்தான்! இன்று அது தழைத்து வளர்ந்து ஆலமரமாகக் கிளை பரப்பி அசைக்க முடியாதபடி பல வேர்களையும் ஊன்றியிருக்கிறது.



"அத்தான்! அந்த விதையை நீங்கள் ஊன்றிய அன்று முதல் இன்று வரையில் என் உள்ளத்தில் ஒரே ஒரு எண்ணம் தான். அது நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான். என்னுடைய செய்கைகளாலேயே பல முறைகள் அந்த சந்தோஷத்தைக் குலைத்திருக்கிறேன். அதற்கெல்லாம் மன்னிப்புக் கேட்பதைவிட, என் அசட்டுத்தனங்களுக்காக என்னை நானே நொந்து கொள்வதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

"இப்போதுகூட என் உள்ளத்தில் அந்தநினைவுதான் மேலோங்கி நின்று என்னைத் துன்புறுத்துகிறது, அத்தான்! நான்; உங்களுக்கு அளிக்க விரும்பும் சந்தோஷத்தை உங்களைக் கல்யாணம் செய்து கொள்வதன் மூலம் கொடுக்க முடியுமா என்று எனக்கே இப்போது சந்தேகமாக இருக்கிறது. இயற்கையில் கோழை மனம் படைத்தவளாகி விட்டேன். ஒன்றுமில்லாததற்கெல்லாம் அழுது புலம்புவதே எனக்கு வேலையாகப் போய் விட்டது. அப்படிப்பட்ட என்னைக் கல்யாணம் செய்து கொண்டு நீங்கள் என்ன சுகத்தைக் காணப் போகிறீர்கள்?

"மல்லிகா உங்களுக்கு ஏற்ற பெண். ஆடிப் பாடிச் சிரித்துப் பேசி உங்களை எப்போதும் குதூகலமாக வைத்திருப்பாள். உங்கள் மனத்துக்கு உற்சாகத்தைச் சதா அளித்துக் கொண்டிருப்பாள். நான் வேண்டுவதும் அதுதானே, அத்தான்?"

சுவரிலே மாட்டப்பட்டிருந்த அத்தானின் உருவம் மறைவதைக் கண்டாள் விமலா. ஏன் திடீரென்று மறைந்து போகிறது? கண்ணீர்ப் படலம் மறைக்கிறதா? அப்படியிருந்தாலும்

மங்க வேண்டுமே தவிர ?"அடியோடு மறைந்து போவானேன்? அத்தானின் உருவத்தை மறைத்த அந்தப் பொருளைப் பார்த்தாள் விமலா. தான் கால்வாசிப் பின்னி விட்டுத் தூக்கி எறிந்திருந்த 'ஸ்வெட்டர்'. அதைத் தன் முன்னால் நிறுத்தி யிருந்தது அத்தானுடைய கை.

"ஏன் விமலா இதைத் தூக்கி ஒரு மூலையில் எறிந்திருக்கிறாய்?" என்று கேட்டது அத்தானின் குரல்.

"அதன் மீது கோபம் வந்தது, அத்தான்! தூக்கி எறிந்தேன்" என்று சொல்லியபடியே மரியாதையாக எழுந்து நின்றாள் விமலா.

"பாதி பின்னியிருக்கும் ஸ்வெட்டரை அதன் மீது கோபித்துக் கொண்டு எறிந்தாயா? அல்லது என் மீது கோபித்துக் கொண்டு அதைத் தூக்கி எறிந்தாயா?"

"அத்தான்! உங்கள் மீது நான் எதற்குக் கோபப்படப் போகிறேன்? அப்பா இறந்து போன பிறகு எங்களுக்கு ஆதரவு காட்டி வீட்டிலேயே வைத்துக் காப்பாற்றி வந்திருக்கிறீர்களே அதற்காகவா? அல்லது எங்களிடம் அளவு கடந்த அன்பைச் சொரிந்து வருகிறீர்களே அதற்காகவா? எங்களுக்குச் செய்துள்ள எத்தனையோ உபகாரங்களுக்கும் பிரதியாக உங்களை நான் கோபித்துக் கொள்வதா?"

"விமலா! அதையெல்லாம் மறந்து விடு! எல்லாவற்றுக்கும் சேர்த்து வைத்து மிகப் பெரிய அபகாரமாக இப்போது செய்யப் போகிறேன்."

"அத்தான்! அதைச் சொல்வதற்கு நீங்கள் சிரமப்பட வேண்டாம். நீண்ட நாட்களாகவே நான் எதிர்பார்த்து வந்ததுதான். ஆனால் அதை அபகாரம் என்று சொல்லாதீர்கள். நீங்கள் மன நிம்மதியுடனும் சந்தோஷத்துடனும் இருப்பதுதான் எனக்குச் செய்யக் கூடிய பெரிய உபகாரம். அதனால் இதுவரை எங்களுக்குச் செய்துள்ள உதவிகளையும் மறக்க முடியாது."

"விமலா! நிஜமாகத்தான் நீ சொல்கிறாயா? நான் மல்லிகாவை மணந்து கொண்டால் நீ வருத்தப்பட மாட்டாயா? என்னிடம் கோபமும் வெறுப்பும் அடைய மாட்டாயா?"

"ஒருநாளும் மாட்டேன், அத்தான்! அதைத்தான் இத்தனை நேரமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன், உங்களுடைய படத்தினிடம்!"

"கொஞ்ச நாட்களுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்தை இப்போது நினைவூட்டுகிறேன், விமலா! நீ நிலவொளியில் நின்று 'அழகுத் தெய்வம்' பாடலைப் பாடிக் கொண்டிருந்தாய். நான் உனக்குத் தெரியாமல் வந்து நின்றேன். உன்னை அசையாமல் இருக்கச் சொல்லி விட்டு நிலவு காட்டிய உன் அழகை அனுபவித்தேன். பேச்சு வளர்ந்தது. 'எல்லோருமே ராமபிரானைப் போல் இருக்கக் கூடாதா?' என்று கேட்டாய். 'எல்லோரும் அப்படி இருந்துவிட்டால் வாழ்க்கை அலுத்து விடும் விமலா!' என்றேன் நான். 'நீங்கள்கூட அப்படித் தானோ?' என்று நீ சந்தேகப்பட்டாய். 'இல்லவே இல்லை விமலா! ராமபிரானைப் போல் என் அப்பா கொடுத்த வாக்கை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன். கவலைப்படாதே!' என்றேன். 'கடமைக்காக என்னை நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளவே வேண்டாம், அத்தான்! அதற்கு ஒருநாளும் நான் சம்மதிக்க மாட்டேன்' என்று நீ சொன்னாய்."

"அதெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கிறது, அத்தான்! இப்போதும் அதையே தான் சொல்கிறேன். கடமைக்காக என்னை நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளவே கூடாது!"

"அப்படியானால் அந்தக் கடமையிலிருந்து எனக்கு நீ விடுதலையளிக்கிறாயா? உன் தகப்பனார் என் அப்பாவிடமிருந்து பெற்றுக்கொண்ட வாக்குறுதியிலிருந்து என்னை விடுவிக்கிறாயா?"

"மனப்பூர்வமாக விடுதலை யளிக்கிறேன், அத்தான்!" என்றாள் விமலா.

"விமலா வெளிப்படையாக நீ மன உறுதியுடன் பேசுகிறாய். ஆனால் உன் வேதனை எனக்குத் தெரிகிறது. என்னுடைய இன்னொரு வேண்டுகோளும் இருக்கிறது விமலா! அதையும் இப்போதே கேட்டு விடட்டுமா?"

"தாராளமாகத் தயக்கம் இல்லாமல் கேளுங்கள், அத்தான்!"

"மணிசேகரனை நீ கல்யாணம் செய்து கொள்" என்றான் நடராஜன்.

இவ்வளவு நேரம் தைரியமாக இருந்த விமலா இப்போது நிலை குலைந்து போனாள். விம்மலும் அழுகையும் அவள் உடம்பை உலுக்கி எடுத்தன. அதற்கிடையே, "முடியாது! முடியாது!" என்று அலறினாள். "என்னைப் பற்றி உங்களுக்கு என்ன? நான் எப்படியாவது போகிறேன். என்னவாவது செய்து கொள்கிறேன். நீங்கள் ஏன் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? நீங்கள் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பது என் பிரார்த்தனை. அது நிறைவேறி விட்ட பிறகு நான் என்னவானாலும் எனக்குக் கவலையில்லை. செத்துப் போனாலும் பரவாயில்லை!"

"அதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? உண்மையிலேயே மனப்பூர்வமாக



தலைவலியா?

பெரியவர்களுக்கு ஒரு வில்லை

ஸாரிடான்

சாப்பிட்டால் போதும்

* நிவாரணமளிக்கிறது
* விச்ராந்தியளிக்கிறது
* புத்துணர்ச்சியூட்டுகிறது

Saridon

12 நயா பைசா

குழந்தைகளுக்கு
½–¼ வில்லை போதும்

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்:
வால்டாஸ் லிமிடெட்



VT. 6290

புளோரோஸோன்
கருமையான சரீரத்தை வெண்மையாக்குகிறது



புளோரோஸோன் உங்கள் சருமத்தை இதமாய்ப் பால் வெண்மையாக்கி, முகப் பருக்கள் முதலிய சருமக் கோளாறுகளை அறவே போக்கி, மேனிக்கு மலர் போன்ற மென்மையையும், நீடித்த அழகையும் அளிக்கும்.

புளோரோஸோன் லோஷன் ஒரு பாட்டில் விலை ரூ. 4.25 சுத்த மிகுந்த புளோரோஸோன் க்ரீம் ஒரு ஜாடி விலை ரூ. 5.60

வி. பி. சார்ஜ் தனி

கெமிஸ்டுகளிடமும் ஹைஜீனிக் ரிசர்ச் இன்ஸ்டிடியூட், த. பெ. 1292 பம்பாய்-1 விலாசத்திலும் பெறலாம்

Florozone
MIRACLE BEAUTY BLEACH

Distributors of Madras:
R. L. GOWDER & Co., 60, Bunder St., Madras

ஹெடன்ஸா



மூல நோய்க்கு

எங்கும் கிடைக்கும்

DCZ-15A-TM

பர்மாவுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

சுந்தரம் அண்டு கம்பெனி
353, மொகல் தெரு, ரங்கூன்

எனக்கு விடுதலையளிப்பதாக இருந்தால் அதை சந்தோஷத்துடன் செய்ய வேண்டும். அப்படியின்றி நீ துன்பப்பட்டு இறந்து போனால் உன் நினைவு என்னை வாழ்நாள் முழுதும் அலைக்கழிக்கும். அதைவிட உன்னையே கல்யாணம் செய்துகொண்டு விடுவது மேல்.''

''என்னைச் சித்திரவதை செய்வது என்ற தீர்மானத்துடனேயே இங்கு வந்தீர்களா? போகட்டும். இன்னொரு உறுதிமொழி வேண்டுமானாலும் தருகிறேன். நான் செத்துப் போகமாட்டேன். தற்கொலை செய்துகொண்டு விடமாட்டேன். ஆனால் என் கல்யாணத்தைப் பற்றிப் பேச்செடுக்காதீர்கள். என்னைப் பற்றிய கவலைகளையெல்லாம் அடியோடு விட்டொழித்து சந்தோஷமாகப் போய் வாருங்கள்.''

நடராஜன் போகத் திரும்பினான்.

''இன்னும் ஒரே ஒரு விஷயம், அத்தான்! மல்லிகாவைக் கல்யாணம் செய்துகொள்ளத் தீர்மானித்த பிறகு இந்தப் பக்கமே எட்டிப் பார்க்காமல் இருந்து விடாமல் அந்த விஷயத்தைச் சொல்ல நீங்களே நேரில் வந்தது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது, அத்தான்!''

அவன் போன பிறகு முன்னைவிட அதிக வேகத்துடன் ஸ்வெட்டரைப் பின்னுவதற்கு ஆரம்பித்தாள் விமலா. அவளுடைய கண்ணீரால் நனைந்தபடியே அத்தானுடைய சரியான அளவுக்கு அது உருவாயிற்று.

பதினொன்றாம் அத்தியாயம்

மணம் பரப்பும் மலர்

நிலாவைக் கண்டதும் துள்ளிக் குதித்தாள் மல்லிகா. வீட்டிலிருந்த விளக்குகளையெல்லாம் அணைத்து விட்டு நிலவொளியை மட்டும் தனியாக அனுபவித்து மகிழ்ந்தாள். பூரணசந்திரனுடன் பேசினாள்; கொஞ்சினாள். அவனும் மேகங்களுக்கிடையே மறைந்தும் வெளிப்பட்டும் அவளுடன் கண்ணாமூச்சி விளையாடினான். அவனைக் கண்டுபிடித்து விட்ட சந்தோஷத்தில் கைகொட்டிச் சிரித்தாள். தங்கை சரஸ்வதியைக் கட்டிக் கொண்டு நூறு முத்தங்களை எண்ணிக்கொடுத்தாள். 'திடுதிப்பெ'ன்று நினைத்துக் கொண்டு காலில் சதங்கைகளைக் கட்டிக் கொண்டாள். பாடினாள், ஆடினாள். அந்த ஆட்டத்துக்கு இடையிடையே நடராஜன் வந்து விட்டானா என்று எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பினாள். மறுபடியும் நடனமாடத் தொடங்கி விட்டாள்.

நடராஜன் அவளை அணைத்து ஆறுதல் அளித்தது அவளை அப்படி ஆடச் செய்தது. உடல் குலுங்கச் சிரிக்க வைத்தது. தன் வாழ்வு வளம் பெறப் போகிறது: இனிமேல் அதில் துயரங்கள், சந்தேகங்கள் கவலைகள் எதுவுமே இல்லை என்ற எண்ணம் பூரண சந்திரனுடன் குழந்தை போல் விளையாடச் செய்தது.

அந்தக் குதூகலத்தை அதிகப்படுத்த நடராஜன் வந்து சேர்ந்தான். வந்தவுடன் விஷயத்தைச் சொல்லவில்லை அவன். அவளைச் சற்று நேரம் தவிக்க வைத்துப் பார்க்க வேண்டும். பின்னர் அவள் ஒரேயடியாக மகிழ்ந்து போவதைக் கண்டு களிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான்.

''வெளியே போகலாம், மல்லிகா!'' என்றான் நடராஜன்.

''எங்கே போவது?''

''எங்கேயாவது போகலாம்.''

அவளுக்குச் சந்தேகமாகப் போய் விட்டது. தான் சந்தோஷப்பட்டது பொய்த்து விடுமோ? அவருடைய தாயார் பொன்னம்மாள் என்ன சொன்னாளோ, என்னவோ?

''அம்மாவைக் கேட்டீர்களா?''

''முதலில் நீ கிளம்பி வாயேன். அப்புறம் சொல்கிறேன்.''

மல்லிகாவுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய் விட்டது. ஏதோ நடந்திருக்கிறது. நம்மிடம் சொல்லத் தயங்குகிறார் என்று எண்ணிக் கொண்டே காரில் ஏறினாள். அவள் மனத்தில் இருந்த கவலையைக் கண்கள் பிரதிபலித்தன. முகம் களையிழந்து இருந்தது. நடராஜன் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

அடையாற்றுக்கருகே கடல் உள்ளே புகுந்து ஏற்பட்டிருந்த நீர் நிலைக்கு எதிரே வண்டியைச் சாலை ஓரமாக நிறுத்தினான். நீரில் ஏற்பட்ட சின்னஞ்சிறு அலைகள் நிலவொளியைச் சிதற அடித்த போது வெள்ளித் துகள்களை வாரி இறைத்திருந்தது போலத் தோன்றியது. தன் வதனத்தைக் கண் வரைக்கும் சல்லாத் துணியினால் மூடி மறைத்திருக்கும் அழகிய அரேபிய அணங்கைப் போல் அருகே வளர்ந்திருந்த ஒரு மரத்தின் இலைகளால் பாதி மறைக்கப்பட்டுத் தோற்றமளித்தான் சந்திரன்.

நினைவையழிக்கக் கூடிய அந்தச் சூழ்நிலையும் நெஞ்சினில் மூட்டியிருந்த

இன்பக் கனலை விசிறி ஜுவாலை உண்டாக்கச் செய்த கடற்காற்றையும் அனுபவிக்காமல் மல்லிகா சோர்ந்திருந்தது நடராஜனுக்குப் பொறுக்கவில்லை.

சட்டென்று மல்லிகாவின் இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டு, "அம்மா சம்மதம் தெரிவித்து விட்டாள், மல்லிகா! நான் பார்க்கப் போகிறேன்" என்றான் அளவற்ற மகிழ்ச்சியுடன்.

தன் கைகளை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு கன்னங்குழிய அவள் பூரண சந்திரனைப் பார்த்தாள்.

"என்ன மல்லிகா? ஏன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாய்?" என்று சற்றுக் கவலையுடன் அவளைக் கேட்டான் நடராஜன்.

ஒரு விஷமப் பார்வையை அவன் பக்கமாகச் செலுத்தினாள் அவள். அந்தச் சிவந்த இதழ்கள் பேசத் துடித்தன. ஆனால் வார்த்தைகள் ஏதும் வெளி வரவில்லை. தலையைக் குனிந்து கொண்டாள்.

அவள் முகவாயை அன்புடன் இலேசாகப் பற்றி நிமிர்த்தினான் நடராஜன்.



"மல்லிகா! ஏன் பேச மாட்டேனென்கிறாய்? உனக்குச் சந்தோஷம்தானே?" என்று கேட்டான்.

"சுத்த அசடாக இருக்கிறீர்களே? எனக்குப் பேசவெட்கமாக இருக்கிறது" என்றாள் அவள்.

"ஏய்! என்னை அசடு என்றா சொல்கிறாய்? என்ன செய்கிறேன் பார்!" என்று வம்புக்கு இழுத்தான் அவன்.

"என்ன செய்வீர்களாம்?" என்று அழகு காட்டிக் கொஞ்சினாள் அவள்.

"கல்யாணம் ஆகட்டும், சொல்கிறேன்" என்றான் நடராஜன்.

மல்லிகாவை மறுபடியும் வெட்கம் சூழ்ந்து கொண்டது. கன்னங்கள் சிவக்க அவள் நீர்ப் பரப்பையும் சந்திரனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அவளுடைய வதனத்தைக் கண்டு சந்திரன் பொறாமைப்படுவான் என்றும், அவள் கண்களில் மின்னும் ஒளியைப் பார்த்து நட்சத்திரங்கள் அசூயை அடையும் என்றும், மேகக் கூட்டங்கள் அவளுடைய மலர் மேனியின் மென்மையைக் கண்டு ஆத்திரப்படும் என்றும் நடராஜனுக்குத் தோன்றியது.


'அவளுடைய காதிலிருந்து தொங்கும் நீண்ட 'ஜிமிக்கி'யாக நான் இருக்கக் கூடாதா? அவள் தலையை அசைக்கும் போதெல்லாம் நானும் அசைந்தாடி அந்தக் கன்னங்களைத் தொட்டுக் கொஞ்சலாமே' என்று நினைத்தான். 'அவள் கரங்களில் குலுங்கும் வளையல்களில் ஒன்றாக நான் மாறி விடக் கூடாதா?' என்று எண்ணினான். 'அவளுடைய நீண்ட கழுத்தை அலங்கரிக்கும் முத்து மாலையாக நான் வி[illegible]க்க கூடாதா?' என்[illegible] ஏங்கினான்.

விசித்திரமான த[illegible] எண்ணங்களைக் கண்டு அவனுக்கே சிரிப்பு வந்தது. அதை அடக்கிக் கொண்டு, "சுகுமாரனிடம் நம்மைப் பற்றிப் பேசினாயா? அவர் என்ன சொன்னார்?" என்று கேட்டான்.

"இது வரை சொல்லவில்லை. இன்று முடிவாக உங்களிடமிருந்து தெரிந்து கொண்டு அவரிடம் பேசலாம் என்று இருந்தேன். அவரே ஒருவாறு உணர்ந்து தான் இருக்கிறார். தடையொன்றும் சொல்ல மாட்டார்" என்றாள் மல்லிகா.

அவர்கள் திரும்பவும் மல்லிகாவின் வீட்டை அடைந்த போது சுகுமாரனுடைய கார் வாசலில் நின்று கொண்டிருந்தது. "நீயே அவருடன் தனிமையில் நம்மைப் பற்றிப் பேசு மல்லிகா! நாளை சந்திப்போம்" என்று கூறி நடராஜன் விடைபெற்றுக் கொண்டான்.

மல்லிகா எதிர்பார்த்தது போல எல்லாமே சுலபமாக முடிந்துவிடவில்லை. சுகுமாரன் தடையொன்றும் கூறாமல் இருந்து விடவில்லை. அதற்கு மாறாக அவள் அன்று சொல்லி முடியாத மனக் கஷ்டத்துக்குள்ளாக நேர்ந்தது. அது வரைக்கும் நிலவின் தண்மையும் இன்பமும் அமைதியும் நிறைந்திருந்த இரவு கோப தாபங்களும், சூழ்ச்சிகளும், உணர்ச்சிப் போராட்டங்களும் நிறைந்த பயங்கர இரவாக மாறியது. சேகரும் மல்லிகாவும் சுகுமாரனும் அங்கு வீசிய மனப் புயலிலும் உணர்ச்சிச் சுழலிலும் சிக்குண்டார்கள். (தொடரும்)


வம்பு பேச விரும்புவோர் சிலரே....
ஆனால் எல்லோரும் விரும்புவது
Parry's
பாரிஸ்
மிட்டாய்களே
ஏனெனில் அவை ருசியுள்ளவை, ஆரோக்கியமானவை, சுத்தமானவை
தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்
PRS 321


அவன் தாய் அவனுக்கு க்ளாக்ஸோ புகட்டுகிறாள்
அதனால்தான் தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைபோல் அவனும் புஷ்டியுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறான். உங்கள் குழந்தைக்கும் க்ளாக்ஸோவைக் கொடுத்து ஆரோக்கியமாயும், குதூகலமாயும் இருக்கச் செய்யுங்கள்.
SUNSHINE
Glaxo
Glaxo
க்ளாக்ஸோ குழந்தைகளுக்குச் சிறந்த பால் உணவு
"க்ளாக்ஸோ குழந்தை புத்தகம்"—
இலவசமாக இதைப் பெற விரும்புவோர்
"க்ளாக்ஸோ" டட்ல் ரோடு, சென்னை—2
என்ற விலாசத்திற்கு 50 நயா பைசா தபால்
தலைகள் (தபால் செலவிற்காக) அனுப்பவும்.
க்ளாக்ஸோ லாபரேட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட.
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புது டில்லி

மனித இயந்திரம்

பி.வி.ஆர்



இரண்டு நாட்களாகி விட்டன. இரண்டு கவனம் மனத்தின் ஈரியோடு செல்லவில்லை.

"இண்டி விட்டுக் கசியும் சர்ப்பம் மாதிரி இப்படி ஏன் சதா கசிகிறீர்கள்?" என்று பார்வதம் கேட்டாள். தன் கணவன் சோற்றைத் தொடவில்லையே என்ற வருத்தத்தின் மீது எழுந்த கோபம் குரலில் எதிரொலி செய்தது.

சிகாமணி பேசவில்லை. எழுந்து வெளியேறினான். தகப்பனார் கோட்டைப் போட்டுக் கொண்டு புறப்படுவது தெரிந்தது. கணுக்காலுக்கு மேலே நின்ற வேட்டியும், எப்போதோ போட்டு உள்ளே வைத்து மீண்டும் எடுத்த நிறம் மங்கிய தொப்பியும் அவன் உள்ளத்தைத் துண்டுகளாக்கின.

"அப்பா! என்னை மன்னியுங்கள். நான் ஈவிரக்கமில்லாத பிள்ளை!" என்று அவர் காலடியில் விழுந்து கதற வேண்டும் போல் அவன் உள்ளம் தவித்தது. ஆனால் வயதும், பதவியும் சுயகௌரவம் என்ற மமதையும் அதைத் தடுத்து விட்டன.

அவன் சிந்தனை முடிவதற்கு முன்னால் தகப்பனார் வெளியேறிவிட்டார்.

சிகாமணிக்குத் தன்மீதே எரிச்சல் வந்தது. ஆனால் என்ன செய்ய முடியும்? அவன் இரண்டு மூன்று மாதங்களாகத் தீவிரமாக நினைத்துத்தானே முடிவுக்கு வந்தான். அப்போது எண்ணுகையில், புற உலகத்தின் சூழ்நிலையும் காட்சிகளும்தான் தெரிந்தன. ஆனால் இப்போது காரியார்த்தமாக அவன் முடிவு வெளிப்பட்டபோது, வெற்றியின் உணர்ச்சி அவன் உள்ளத்தில் நிலவாக, தென்றலாக வீசவில்லை. பாசத்தின் அலைகள், பக்தியின் புயல்கள் அவன் உள்ளத்திலே பாய்ந்து மோதி அவனை அவனுக்கும் மோசப் பாதாளத்தில் தள்ளியது.

சிகாமணிக்கு ஒரு கம்பெனியில் உதவி மானேஜர் வேலை. சம்பளம் நானூறு. மனைவியும் அண்டி நிற்கும் தகப்பனாரும்தான் வீட்டில். அருணாசலத்துக்கு வயது ஐம்பது ஆகிவிட்டது. பரம்பரையாகக் கிடைத்த விவசாயத்தை மேற்கொண்டவர். வரவுக்கு மீறிச் செலவு செய்து, அதன் பலாபலன்களையும் அனுபவித்த பின்னர், பிள்ளையே கதி என்று சென்னைக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகிவிட்டன. மகனும் நன்றாகத்தான் தந்தையை ஆரம்பத்தில் ஆதரித்தான்.

விடிந்தவுடன் ஸ்நானம் செய்து விட்டுக் கோவிலுக்குப் போய்வரவேண்டியது. காப்பி அருந்தி விட்டுப் பதினொரு மணி வரையில் தினசரியின் தாள்களை மென்று விழுங்கா வண்ணம் படிப்பது; பதினொரு மணிக்கு நன்றாகச் சாப்பிட்டு விட்டுப் பக்கத்து வீட்டு 'சான்ஸ்' இல்லாத உபன்யாசகருடன் உலக வர்த்தமானங்களைப் பற்றிப் பேசுவது, பிற்பகல் நான்கு மணி வரையில் தூங்குவது, டிபனை முடித்துவிட்டு ஏழு மணி வரையில் கடற்கரையில் உட்காருவது; எட்டு மணிக்குச் சாப்பாடு ஆன பிறகு படுக்கையை விரிப்பது: இதுதான் சிகாமணியின் தந்தை அருணாசலம் அனுஷ்டிக்கும் தின விரதம்.

* * *

சில மாதங்கள் சிகாமணி பொறுத்தான். நாள் செல்லச் செல்ல வெறுப்பு தோன்றலாயிற்று. அவனையும் மீறி அவன் மனம் தந்தையைச் சோம்பேறிக் கூட்டத்தில் தள்ளியது. சிகாமணி தன் 'பழைய' தகப்பனாரை எண்ணிப் பார்த்தான். கிராமத்தில் ஒரு கணம் பொழுதை விரயமாக்காதவர். அளவுக்கு மீறிச் செலவு செய்து கடனாளி ஆனாலும், நித்திய அலுவல்களைச் சுறுசுறுப்புடன் செய்து வந்தவர். ஆற்றிலே குளித்து, துணி தோய்ப்பதையும், நெல் மூட்டைகளை அநாயாசமாகத் தூக்கிப் போடுவதையும், உச்சி வெய்யிலில் நின்று, களத்தில் போர் அடிப்பதை மேற்பார்வை செய்வதையும் மகன் கண்டு வியந்திருக்கிறான். தன்னால் என்றும் அதுமாதிரி இருக்க முடியாது என்றுகூட எண்ணி வெட்கி யிருக்கிறான்.

ஆனால் அந்தத் தந்தை இப்போது எப்படியிருக்கிறார்? அதைத்தான் அவனால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அவனுக்குத் தெரிந்த எத்தனையோ 'வயதானவர்கள்' வேலைக்குப் போய்வருவது தெரியும் அவனுக்கு. அதைப் போல அவரும் ஏன் போகக் கூடாது?

எண்ணம் அனுவாக எழுந்தபோது அதை வெளியே காட்டத் தயங்கினான். ஒருவன் தன் வயதான தந்தையைப் பார்த்து, 'அப்பா நீங்கள் ஏதாவது வேலையில் ஈடுபட வேண்டும்!' என்று எப்படிச் சொல்ல முடியும்?

மெதுவாக ஒரு நாள் பார்வதத்திடம் வளரும் அனுவை அவிழ்த்தான்.

அவள் திகைப்பு அடைந்ததோடு நில்லாமல், "உங்கள் மகன் உங்களை இப்படிச் சொன்னால் உங்கள் மனசு எப்படியிருக்கும்?" என்று ஒரு கேள்வியையும் கேட்டாள்.

சிகாமணி பதில் ஒன்றும் கூறவில்லை.

"உங்களுக்கு என்ன, சம்பளம் போதாத சம்பளமா? ஏதோ அவர் தம் வயசுக்கு ஏற்றபடி இருக்கிறார். வீட்டுக்குப் பெரியவராக இருக்கட்டுமே!" என்றாள்.

"நீ வயதான கிழவி மாதிரி பேசாதே.. நீதான் நல்ல சாப்பாடாகப் போட்டுப் போட்டுச் சோம்பேறித்தனத்தை வளர்த்து விட்டாய்...ஒரு கம்பெனியில் நூறு ரூபாய் சம்பளம் வாங்கித் கொடுக்கிறேன். வேலையில் சேரட்டும்!"

சிகாமணி மனைவியிடம் தைரியமாகச் சொல்லி விட்டான். ஆனால் தந்தையிடம் இதை எப்படிப் பிரஸ்தாபிப்பது?

பூடகமாக ஏதேதோ சொல்லிப் பார்த்தான். அருணாசலம் மகனை ஆராய்ந்தார்; ஆனால் விவாதிக்க முன்வரவில்லை.

கடைசியில் எப்படியோ ஒரு நாள்.—

''எம்ப்பா! நம்ம சேர்வையின் கம்பெனியில் வேலை காலியாக இருக்கிறது!'' என்று ஆரம்பித்தான்.

''ஏன் இதைவிடலாமென்ற யோசனையா?''

மகன் பல்லைக் கடித்தான்.

'' குமாஸ்தா என்றால் குமாஸ்தாவும் அல்ல...காரிய தரிசி என்றால் அதுவும் அல்ல; எல்லாமாக நூறு ரூபாய் கிடைக்கும்...'' அவனுக்கு வியர்த்தது.

''ஓ...எனக்கா? உன் சிபாரி சில்லேயா? சரி போகிறேன். என் பாரம் யார் தோளிலும் விழக்கூடாது என்றுதான் என் ஆசையும். போதாத காலமும், வயதான தோஷமும் என் ஆசையைப் புதைத்து விட்டன.....இனிமேல், தன்னுமோ தன்னாதோ, போகிறேன்...''

காமரா அறையில் பார்வதம் முகம் கலங்க நின்றவள் திடீரென்று கூடத்தினுள் பிரவேசித்து, ''அவர் சொல்கிறார்னு நீங்கள் ஒன்றும் வேலைக்குப் போக வேண்டாம். அந்தப் பணம் வந்து இங்கே என்ன ஆகவேண்டும்?'' என்றாள். கணவன் மீது என்றுமே அவள் இத்தனை ஆத்திரத்தைக் கொட்டியதில்லை.

''நீ ஏன் பார்வதம் கவலைப்படுகிறாய்? அவன் இந்த உலகத்தில் நாகரிகத்தில் புழங்குகிறவன். எனக்கு நல்லதைத்தானே சொல்லுகிறான். யாரும் சும்மா இருக்கக் கூடாது என்கிறது அவனுடைய கொள்கை!''

இரண்டு நாட்களுக்குத் தம்பதிகள் பேசிக் கொள்ளவில்லை. அதற்குப் பிறகு தந்தைக்கு நிலை கொள்ளவில்லை. மகனின் மனத்தைத் தெளிவாக அறிந்து கொண்டபின், அவனுடைய விருப்பத்துக்கு எதிராகச் செய்ய அவருக்கு விருப்பமில்லை. அவராகவே கேட்க ஆரம்பித்து மனுவையும் எழுதி மகனின் கையில் கொடுத்தார்.

சிகாமணியின் ஏற்பாட்டின்படி சேர்வையின் கம்பெனியில் வேலையும் கிடைத்தது.



முதல் நாள் வேலைக்கு அவர் போகும் வரையில் சிகாமணியின் உள்ளத்தில் எந்த விதமான உணர்ச்சியும் போரை மூட்டவில்லை.

முதல் நாள் பணியிலிருந்து அவர் திரும்பி வரும் போது தான், அவர் கோலம் அவனுடைய மனத்தை அறுத்துக் கிழியச் செய்தது.

தளர்ந்த உடல்; தொங்கும் கோட்டு; கருகிய முகம்.


''நம் அப்பா இப்படியாக இருக்க நான் தானே காரணம்?' என்ற எண்ணம் தோன்றிய கணமே சிகாமணிக்கு அழுகை வந்தது. 'சே. நான் ஒரு படித்த முட்டாள்! பிறர் மனத்தையும், அதிலே புரையோடும் • சுயச்சிந்தனையும் உணர முடியாத ஜடன். இதுவரையில் சுதந்திரமாக விவசாயம் செய்து, ஒருவனிடமும் வேலை பார்க்காத அவர், மகனிடம் அண்டிப் பிழைக்கும் நிலை காரணமாக மகனிடமே அல்லவா தண்டனை பெறுகிறார்? அவருடைய உடல் சுதந்திரத்தையும், உள்ளத்தின் சுதந்திரத்தையும் அல்லவா பறித்து விட்டேன் நான்.' அவன் மனமே ரணகளமாயிற்று என்றால் அதை இன்னும் வார்த்தை சுட்டியால் பார்வதம் குத்தினாள்.

''எனக்கும் ஒரு வேலை பாருங்கள். மத்தியானம் சோம்பேறியாக இருக்கிறேன். மற்றவர்களுடன் வம்பு அளக்கிறேன்!''

''எல்லோரும் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவார்கள். இந்த வீட்டில் அது தலைகீழாக இருக்கிறது!''

''...கம்பெனியின் உதவி மானேஜர், இரு...வின் தந்தை சேர்வையின் கம்பெனியில் காரியதரிசியுமல்லாமல் குமாஸ்தாவாகவும் இல்லாமல் இரண்டுங் கெட்டான் ஆளாக வேலை பார்க்கிறார் என்று ஊரும் உலகமும் சொல்லிச் சிரிக்க வேண்டும். நானும், நீங்கள்தான் வேலை வாங்கிக் கொடுத்தீர்கள் என்று வந்து போகிறவர்களிடம் சொல்லுகிறேன்!''

இரண்டு நாட்கள் இப்படிப் போயின. இரண்டு கவளங்களைக் கூட அவனால் ருசி



யுடன் வாயில் போட்டுக் சொள்ள முடியவில்லை.

தகப்பனாரை அனுப்புவது அவனுக்கு அவமானமாக, வெட்கமாக இருந்தது.

வீட்டிலேயாருக்கும் நிம்மதியில்லை. இயந்திரமாக அவரவர்கள் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒருவாரம், இரண்டு வாரம் என்று மூன்று வாரங்கள் ஓடி விட்டன. தகப்பனார் முதல் சம்பளம் வாங்கும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

இருபத்தேழாம் நாள்.

திடீரென்று சிகாமணிக்கு ஒரு யோசனை உதயமாகியது. பார்வதத்திடம் கூடச் சொல்லாமல் ஓடினான், சேர்வையின் வீட்டுக்கு.



முப்பதாந் தேதி.

அறுபது ரூபாயில் ஒரு புடவையும் ஒரு ஜோடி வேட்டியுமாக வீட்டுக்குள்ளே வந்த அருணாசலத்தைப் பார்த்ததும், பார்வதத்துக்கு அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது.

வணங்கியெழுந்த மருமகளிடம் "நான் ஓடிந்து போனப்புறம் நீ இந்த வீட்டிலே கால் வைத்தாய். இப்போதுதான் என்னால் உனக்கு இதாவது கொடுக்க முடிந்தது" என்றவருக்கு மேலே என்ன சொல்லுவது என்றுகூடத் தெரியவில்லை.

"மாமா! போதும் என்னை வதைக்காதீர்கள்! நீங்கள் இனிமேல்..."

அவள் முடிப்பதற்குள் சிகாமணி உள்ளே வந்து விட்டான்.

"இந்தா சிரு!...பாக்கி இருபத்தி நாலு ரூபாய் இருக்கிறது..பொடிக்கு மட்டும் நாலு அணு சில்லறை கொடு..." என்று கூறிய அவர் தொடர்ந்து, "சேர்வை நாளையிலிருந்து வேண்டாம் என்று சொல்லி ஆர்டரையும் கொடுத்து விட்டான்!" என்றார்.

பார்வதத்துக்குக் கேட்க அமிர்தமாக இருந்தது. சிகாமணி மறுமொழி அளிக்காமல், பணத்தையும் வாங்கிக் கொள்ளச் சக்தியற்றவனாய்த் தலைகுனிந்தவாறே தன் அறையை நோக்கிச் சென்றான்.

இரவு முழுவதும் தந்தையைப் பற்றி எண்ணிப் புழுங்கிய சிகாமணி என்ன பிராயச்சித்தம் செய்தாலும் தான் செய்த பாபம் தொலையாது என்று தவித்தான். பார்வதம் தனக்கு உண்டான மகிழ்ச்சியில் அவனை ஆசுவாசப்படுத்தினாலும் அந்த மகிழ்ச்சிக்கு அவனே காரணம் என்ற காரணத்தினால் மனம் தேற முடியவில்லை.

மறுநாள்.

அருணாசலம் ஒன்பது மணிக்குச் சாப்பிட வந்தார்.

"காரியம் இருக்கிறது!"

சாப்பாடு ஆகியது. கோட்டும் தொப்பியுமாக அவர் புறப்படுவதைப் பார்த்துச் சிகாமணி திடுக்கிட்டான்.

சேர்வை ஏதாவது உளறி விட்டானு? "இது என்ன அப்பா?" என்றான் வியப்புடன்.

"ஒன்றுமில்லை....வேறு வேலை தேடப் போகிறேன்!"

அவன் அயர்ந்து போனான். பார்வதம் சிலையானாள்.

"என்ன இரண்டு பேரும் அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்றார் அவர்.

"நான் பெரிய தவறு இழைத்து விட்டேன். அப்பா! நீங்கள் இனிமேல் வேலைக்குப் போவதை என்னால் சகிக்க முடியாது..." சிகாமணி குமுறினான்.

"உன்மேல் தப்பு இல்லை. இரண்டு வருஷங்களாக இயந்திரம் பழுதாக இருந்தது. நீ ஓட்டவைத்தாய். அதையே நிறுத்தவும் பார்த்தாய். இனி ஓடும் மனித இயந்திரத்தை யாராலும் தடுக்க முடியாது. தானாக நின்றால்தான் உண்டு."—அவர் இரண்டடி நடந்தார்.

அதற்குள் பார்வதம் வழிமறித்தாள்.


"மாமா நீங்கள் வெறும் மனித யந்திரமா? அதற்கு மேலே, எனக்குச் சொல்லத் தெரியவில்லை."—அவளுடைய குரல் தழுதழுத்தது.

"பார்வதம்! நீ இன்னும் குழந்தை. வழி விடம்மா. மனசில் இன்னுமா துரு ஏற வேண்டும்?"—அவர் தெருவிலே நடக்க ஆரம்பித்து விட்டார்.






விநியோகஸ்தர்கள் : மெஸர்ஸ் நாமகிரி டிரேடிங் கார்ப்பொரேஷன், 1, டாக்கர் சத்திரம்லேன், மேற்கு புலிவார் ரோடு, திருச்சி ● மெஸர்ஸ் கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, சரத்போஸ் ரோடு, கல்கத்தா-26



GTV.30-3A TM

EVEREST



84 நேயர்கள் கடிதம்

**கதையும் கிரையாய்ப் போச்சு
காதும் புளித்துப் போச்சு**

"ஏம்மா! மாரியாத்தாத் தாயே! நானு என்னுத்தே செய்வேன்? அந்த நொண்டி ஆட்டுக் குட்டீ மேலே ஏங் உசிரேயல்லே வெச்சுப்புட்டேன்! நல்ல படியா அதுகண்டி திரும்பி வந்துடிச்சினு.. ஒனக்கு இந்த மந்தே ஆட்டே யுங் காவு குடுக்கறேங் யெம்மா!" என்று வேண்டிக் கொண்டான் ஒருவன். அதைக் கேட்டுத் துள்ளிக் குதித்தாள் அவன் மனைவி.

"ஆஹாங்! அம்புட்டுக்கு ஆயிபூட்டியா நீ, மச்சான்! ஒரு ஆட்டுக்குட்டி! அதுவும் ஒரு நொண்டிக் குட்டி. போனாலும் போயும் போவுதுன்னு இருப்பியா...? அது அம்புடிச்சினு ஒரு மந்தே ஆட்டேயும் காவு குடுப்பியா? யாருன்னு கெட்டாங்கன்னு சிரிக்கப் போறாங்க. வொம் பயித்தியத்தே!" என்றாள்.

"அடி நீ சொம்மா கிட. உனக்கு என்னத் தெரியும்?" என்று குனிந்து அவள் காதருகில்—குரலைத் தாழ்த்தி—குவித்த வாயருகில் கையை மறைத்துக் கொண்டு—"நானு உளு உளாட்டிக்கானாலும் சொல்றேன்...!" என்று சொல்லித் தலையை நிமிர்ந்தான்.

இப்படி ஒரு கதை. சொல்லிச்சொல்லி அதைக் கேட்டுக் கேட்டுக் கதையுங் கிரையாய்ப் போயிற்று — காதும் புளித்துப் போயிற்று.

நேயர்கள் கடிதத்தில் ஒரு கணிசமான பகுதியைப் படிக்கும்போது இந்த "உள உளாக்காட்டி" கதைதான் நினைவுக்கு வருகிறது.

'கல்கி'யை விடாமல் தொடர்ந்து படித்து வருகிறார். நாட்டு வைத்தியக் கட்டுரைகளையெல்லாம் தனியாகப் பிரித்து எடுத்து, பிரித்தவைகளைத் தொகுத்து,தொகுத்தவைகளைத் தைத்து ...சேகரித்து வைத்திருக்கிறார். அது இது என்று சில மருந்துகளைச் செய்து உபயோகித்து நல்ல பலனைக் கண்டிருக்கிறார். இப்போது இவருக்கே ஒரு மருந்து தேவையாயிருக்கிறது

எதற்காக? என்ன மருந்து? என்கிறீர்களா?

'முகப்பருவுக்கு' ஒருவருக்கு, முடிவளர வதற்கு இன்னொருவருக்கு. நரை மாறுவதற்கு வேறொருவருக்கு என்று இப்படிப் பல பேர்கள். பலதரப்பட்ட இவர்களுக்கெல்லாம் வேண்டியது அவரவர் வியாதிக்குச் சொன்ன மருந்து வெளியிடப்பட்ட 'கல்கி'யின் பிரதிதான். அதை மட்டும் எப்படியோ கைதவறிவிட்டவர் சிலர். படிப்பதற்காக இரவல் வாங்கிப் போனவர் 'கல்கி' இதழைத் திருப்பித் தராததால் தமக்கு இன்று அவசியப்படும் கட்டுரை வெளியான பிரதி மட்டும் கைவசம் இல்லாதவர் சிலர். இவ்வளவு பேரும் "அந்த ஒரு கட்டுரை மட்டும் இல்லை" என்பதைக் கேட்கும் போதுதான் "இப்படியும் இருக்குமா? ஒருகால் இது ஒரு உளு உளாட்டியா?" என்ற தலைப்பில் குறிப்பிட்ட கதை நினைவுக்கு வருகிறது

எப்படியானாலும் சரி. "மருந்துகளைத் தயாரிக்கும் முறையை விளக்கி எழுதுவது கட்டுரையாகும். கடிதத்துக்குப் பதிலாகாது. மன்னிக்கவும்" என்ற ஒரே பதிலைத்தானே எழுதியாக வேணும். வேறு என்ன செய்வது?

மருந்துகளை உபயோகிக்கும் விஷயத்தில் எழும் சந்தேகங்கள்(?) எண்ணிறந்தவை. காலை மாலை அரைத் தோலா வீதம் சாப்பிட்டு மேலே சிறிது சூடான பானம் பருகவும். அல்லது தலைக்கு இன்ன தைலத்தை உச்சியிட்டு ஊறி, பிறகு அதையே தலைக்கு நிரவித் தடவி முடி சீவிக் கொள்ளவும். தலைக்கு ஜலம் விட்டுக் குளிக்கலே கூடாது. அக்கப்படி எண்ணெயை ஒரு கந்தைத் துணியால் துவட்டிக் களையவும். கழுத்து வரையில் குளிப்பதும் குடிப்பதும் வெந்நீரே யாகவேணும். ஐஸ்கிரீம் போன்ற தணுப்புள்ளவை. சுரைக்காய், தக்காளி, வெள்ளரிக்காய் போன்ற ஜலமுள்ள காய்கறிகளைச் சேர்க்கவேண்டாம் என்பது போன்ற தகவல்களைச் சந்தேகத்துக்கிடமின்றி எழுதியது கணக்கில் அடங்காது. இதற்குப் பதில் 'ஸ்ரீராம ஜெயம்' என்று வரிக்கொரு திருநாமமாக எழுதி ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கினால் இங்கிருந்து நேராக ஸ்ரீ வைகுண்டத்துக்கு மூன்று முறைகள் சென்று திரும்பக் கூடிய அவ்வளவு நீளமாகும்! நேயர்கள் இப்படி என்னே, கல்கியில் விளக்கிய விஷயத்தையே மறுபடியும் மறுபடியும் எழுத வைத்துக் கையை முறிப்பதை, என்னவென்று சொல்வது! அவ்வளவுதானா?

ஏதோ வெளியூர் நண்பர்கள் கடிதம் எழுதித்தானாக வேணும். அதற்கும் நான்

பதில் எழுதித்தான் தீர வேண்டும். உள்ளூரில் - சென்னையிலேயே ஏன், கீழ்ப்பாக்கத்திலேயே கூட வசிப்பவரும் கடிதம் எழுதிப் பதில் எழுத வைப்பதென்றால் என்னென்பது !

30-11-58 வரையில், இரண்டாவது குறிப்புடன் ஆரம்பித்த கடிதங்களின் வரிசையில் கடைசிக் கடிதத்தின் எண் 1455/2 பதில் எழுதிச் சமாளிக்க முடியாத அளவில் இவை உள்ளன. இந் நிலையில் உள்ளூர் நண்பர்களும் கடிதம் மூலம் கேள்வி கேட்பதானால் என்னவென்பது?

கொடிது கொடிது எழுதுதல் கொடிது
அதனினும் கொடிது அன்பருக்கெழுதல்
அதனினும் கொடிது அண்மையிலுள்ள
நண்பருக்கெழுதும் நவிபதில் கடிதம்.

கடிதங்களில் ரஸமானவை சிலவும் உண்டு என்பது சிறிது ஊக்கத்தை யளிக்கிறது.

1248/2ல் ப்ரேயர் எஸ்டேட் - கஜங் - மலேயாவிலிருந்து ஒரு நண்பர் எழுதுகிறார். கல்கியில் வெளியான மருந்துகளில் ஒன்றிரண்டை இவர் செய்து கொண்டார். ஒன்றிரண்டு வெளியாகாதவை. ஆனால் அவற்றை மேற்போக்காகக் கூறியுள்ளதைப் படித்த பிறகு, அவைகளைச் செய்யும் முறையைத் தெரிவிக்கும்படி எழுதிக்கேட்டிருக்கிறார். மேலும் ஒன்றிரண்டு மருந்துகளைச் செய்யும் முறைகளைப் பிரசுரித்த 'கல்கி' இதழ்களின் தேதியைக் கேட்டிருக்கிறார். இது ரொம்பப் பெருமை தரும் விஷயம். எழுதவும் செய்தேன்.

1249/2ல் சென்னை நண்பர் ஒருவர் கேட்கிறார் 1. "ஒற்றைத் தலைவலி ஏன் ஏற்படுகிறது? 2. சாதாரணத் தலைவலிக்கும் ஒற்றைத் தலைவலிக்கும் வித்தியாசம் என்ன? என்பது போன்ற ஐய வினவுக்கு..." "மேலும்" என்று தொடங்கி இன்னுமொரு நோயாளியின் வியாதியை எழுதி......, "காரணம் அறிய விழைகிறேன். பரிகார முறைகளையும் தெளிவாகக் 'கல்கி'யில் எழுதுவதுடன் முடிந்தால் நேரடியாகக் கடிதம் மூலம் விளக்கம் தந்தால் நலம். மிக்க நன்றி" என்று எழுதுகிறார். அங்கங்கே சில சொற்களுக்குக் கீழே சிவப்பு மையால் கோடுகள் வரைந்துள்ளார்.

சென்னையிலுள்ளவர் நேரில் சந்தித்துக் கேட்டுக் கொள்ளக் கூடாதா? 'கல்கி' மூலம் தெரிவித்தாலும் போதாது. நேரடியாகத் தெரிவிக்க முடிந்தால் நலம் நன்றி. எப்படி?

இதில் ஆச்சரியம் வேறொன்று உண்டு. இவர் எழுதியுள்ளது ஒரு ரீப்ளை கார்டு. அந்தக் கார்டுக்குள் மேலே கண்ட

கேள்விகளுக்குப் பதில் எழுத முடிந்தால் நலம். நன்றியாகும். இதில்தான் சுவாரஸ்யம்.

கடிதம் 1250/2 அனுப்பப்பாளையம் (திருப்பூர்) நண்பர் ஒரு ரஸமான கேள்வியைக் கேட்கிறார். இவருடைய முடிகள் முரட்டு முடிகளாயிருக்கின்றனவாம். சீவினால் அழகாகப் படிந்திருப்பதில்லையாம். இம்முடி அழகாகப் படிய என்ன செய்யலாம் என்று அறிய விரும்புகிறார்.

முடிகளை வேண்டாத வகையிலெல்லாம் முருங்கைக்காய் போல் நீண்டும் — கார்க் ஸ்குரு போல் சுருண்டும் பல விதங்களில் அலங்கரித்து விடும் நிபுணர்கள் பலர் மலிந்து கிடக்கின்றனரே, அவர்களையல்லவா இவர் அண்ட வேண்டும்? என்னைக் கேட்டால் இந்த முடி விஷயமாக எனக்குத் தெரிந்தது இரண்டு விஷயங்கள். ஒன்று புத்தகங்களின்—இல்லை இல்லை உயர்ந்த தத்துவங்களை உபதேசிக்கும் நூல்கள் வாயிலாகப் படித்தது. மற்றொன்று, பத்திரிகைச் செய்தி.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்த தொழித்து விடின்" என்பதுதான் முதல் விஷயம். இதன் விளக்கத்தை நான் எழுத வேண்டுமென்றில்லை. இரண்டாவது என்ன தெரியுமோ?.....

"மொட்டையடித்தல் நிந்திதம் (நவி)
முழுதும் வளர்த்தல் மத்திமம் (அக்)
கெட்டதும் மற்றதும் இன்றிக்
க்ராப்படித்தல் உத்தமம்."

இவ்விரு விஷயங்கள் தவிர நண்பர் கேட்டிருப்பது போன்ற விஷயமாக எனக்கு ஒன்றும் தெரியாது.

1251/2ல் சேலம் நண்பர் மதுஸ்னுஹீ ரஸாயனம் செய்யும் முறையை விளக்குமாறு கேட்டிருக்கிறார்.

இதைச் செய்வது சிறிது சிரமம். கந்தகம், குக்குலு, மதுஸ்னுஹீ என்னும் பறங்கிச் சக்கை இவை சேர்வதால் இதைச் சாப்பிடும் போது பத்தியக் கிரமங்களை அனுசரிக்க வேணும். மேற் சொன்னவைகளைச் சுத்தி செய்து மருந்தில் சேர்க்க வேணும். சுத்தி செய்வதில் பிசகு ஏற்படுமானால் தொல்லைகள் விளையலாம். இப்படிச்சிறிது ஆபத்துள்ள மருந்தானாலும் அதை வைத்தியத் தொழிலில் இருப்பவருக்கு விட்டுவிடுவது தான் நியாயம். நமது வீடுகளில் நம் தாய்மார்களும் சகோதரிகளும் செய்துகொள்ளக் கூடியதும், சிறிது கூடக் கெட்ட இயல்பு இல்லாததும், ஓரளவாவது கைகண்ட பலனை அளிப்பதுமான மருந்துகளை மாத்திரந்தான் இக்கட்டுரைகள் மூலம் தெரிவித்தல் சாத்தியமாகும்.

பஷீராவின் பிரார்த்தனை



ஜமீலா

தந்தை பகர்ந்த சொற்களினூடே இழைந்தோடிய 'அந்தரங்கத்தை' அறிய முடியாமல் தத்தளித்த பஷீரா விரல்களை நொடித்துக் கொண்டு மலங்க மலங்க விழித்தாள்.

செல்வியின் தோள் மீது அன்புடன் தன் கரத்தைச் செலுத்தி, சாந்தம் நர்த்தனமிடும் அவள் வதனத்தை இமையாது பார்த்துவிட்டு, "ஜின்னு தெரு மௌல்வி சாஹேப் மாத்திரமல்ல ஊர் 'ஜமாத்'திலுள்ள பெரியவங்களைக்கூட அண்டி வேதனை கொந்தளிக்கும் என் இதயத்தைத் திறந்து காட்டி நன்றாக ஆலோசித்து விட்டேன். ஓர் முடிவுக்கும் வந்து விட்டேன். கடல் கடந்து சென்ற உன் கணவன், அந்தக் கதைகள், நினைவு உன் நெஞ்சில் இனி வட்டமிட வேண்டாம், பஷீரா!" என்று உணர்ச்சி தாளாது நாத்தழுதழுக்கச் செப்பியதும் பஷீராவின் உள்ளம் ஊசலாடியது. சித்தம் சஞ்சலித்தது.

"வாப்பா... நீங்கள் என்ன சொல்றீங்க?" என்றாள் அந்த மடந்தை மதி மருண்டவளாய். நுதலில் படர்ந்தது கவலையின் கோர நிழல்.

"உன்னிடமிருந்து இனி ஒன்றையும் நான் மறைத்து வைக்கப் போவதில்லை. தாயை இழந்த உன்னை அன்னையைவிட மேலாகச் சீராட்டி வளர்த்த நான் கடைசிக்காலத்தில் இந்தக் கிழவனின் எலும்புக்கூட்டுக்கு உறைவிடமாக இருந்த ஒரே கூரை வீட்டையும் மீட்க முடியாத அடகில் வைத்து உன் 'நிக்கா'வை முடித்து வைத்தேன். இல்லையா? காளான்கள் போல் முளைத்த எத்தனையோ குடும்ப எதிர்ப்புகளையும் சமாளித்து நீ எந்த ஆண் மகனை நாடுவதற்குப் பிடிவாதமாக இருந்தாயோ, அவனையே உன் கணவனாகக் கொண்டு வந்தேன். அப்படிப்பட்ட தியாகங்களைப் புரிந்த இந்தக் குடுகுடு கிழவன் கடைசியில் கண்ட பலன் என்ன? மருமகனின் அலட்சிய மனப்பான்மையை எண்ணி எண்ணி உள்ளம் சுக்கு நூறாக உடைந்து போனது ஒன்றுதான்!" அடிவயிறு கலங்க நெற்றியில் வியர்வைத் துளிகளைச் சுண்டுவிரலினால் சுண்டிவிட்டு, மேல் துண்டினால் முகத்தைத் துடைத்துக்கொண்டு தொடர்ந்தார் முஸ்தபா:

"ஏதோ நம் சமூகத்திலுள்ள 'சவ்வராளி'கள்போல்தான் வெள்ளிகளைத் திரட்ட உன் நாயகனும் அக்கரைக்குச் சென்றான். ஆறு வருஷங்களும் சென்று விட்டன தன் க்ஷேமத்தைத் தெரிவித்து உனக்கு ஒரு 'கால் கடுதாசி யாவது போட்டானா? தொலைந்து போகட்டும். எழுதி எழுதி விரல் தேய்ந்து போன இந்த வயதான மாமனுக்காவது ஒரு பதில் போட்டானா அவன்? அந்தப் பாதகனுக்கு ஆண்டவன் 'நெஞ்சு'தான் கொடுத்தானா? ஒருகால் அந்தப் பாவி 'மௌத்' ஆகி ஆறடிக் குழிக்குள் மண்ணோடு மண்ணாகிப் போய் விட்டானா?" என்று மனமொடிந்து ஆறாத் துயரத்துடன் அங்கலாய்த்தார். அவர் மேனி நடுங்கியது. நாக்குழறியது. நெடுமூச்சு உடலை உலுப்பி விட்டது. இதயம் ஓங்காரமிட்டபடி தவித்தது.

"வாப்பா ... வாப்பா ... வாய் போனபடி ஏதாச்சும் பேசிடாதீங்க. வேண்டாம், வேண்

வானத்திரையில் அலங்கோலமாகச் சிதறிக் கிடந்த தாரகை மலர்களைத் தன் பேரொளியினால் பெருக்கியெடுத்த வண்ணம் காட்சியளித்த காலைநங்கை துயிலில் மூழ்கிக் கிடந்த புள்ளினங்களைத் தட்டி எழுப்பி அவற்றைப் பண்ணெழுப்பிப் பறந்தோடச் செய்த மனோகரமான வேளையில் சட்டென்று விழித்த பஷீரா, "அட அல்லாவே! பொழுது புலர்ந்துடுச்சே" என்று அலறிப் புடைத்து எழுந்து மாலைக் கடன்களுக்குப் பின் தொழுகையைச் செய்து முடித்தாள்.

துஆவை முடித்தவுடன் இரு கரங்களையும் உயரே நிமிர்த்தி, "யா அல்லாஹ்! இந்த அபலையை எப்பொழுதுதான் நீ கரையேற்றப் போகிறாயோ?" என்று மிக்க உணர்ச்சியுடன் அருளாளனைப் பிரார்த்தித்ததும், அந்த வஞ்சிக் கொடியின் செவ்வரி படர்ந்த நயனங்களில் நீர் மல்கியது. எழுந்தாள். ஊதுவத்திகளைக் கொளுத்திச் சுவரெங்கும் அவள் செருகிக் கொண்டிருந்த மங்களகரமான வேளையில், "பஷீரா! இந்தப் பக்கம் கொஞ்சம் வருகிறாயா, அம்மா!" என்று எழுந்த பாசம் பொங்கும் தன் பிதாவின் முதுமைக் குரலைச் செவிமடுத்ததும், சட்டென்று தாவணியின் தலைப்பைச் சிரத்தின்மீது இழுத்துப் போட்டுக் கொண்டு முன் அறைக்கு விரைந்து சென்றாள் பஷீரா.

தாடியை 'தாலாட்டாக'க் கோதிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்த தன் தந்தையைக் கண்டதும், பஷீராவின் நெஞ்சு 'தடக் தடக்'கென்று அடித்துக் கொண்டது.

"மகளே! துருப்பிடித்த உன் வாழ்வுக்கு 'விடிவு' வந்து விட்டது அம்மா!" என்று புரிபடாத முறுவல் அதரங்களில் மின்னலிட முஸ்தபா இயம்பியதும் பஷீரா ஒரு கணம் திகைத்து விட்டாள். தொடர்ந்தார் அக் கிழவர்: "கேளம்மா, பஷீரா! கடந்த ஆறு வருஷங்களாக நீயும் நானும் பொறுத்துப் பொறுத்துக் கல்லாகி விட்டோம். 'அவன் திரும்பி வருவான்' என்று நீ கட்டிவந்த நம்பிக்கைக் கோட்டை கடைசியில் சரிந்து விட்டது. இல்லையா?"

அடி வயிற்றிலிருந்து மேல் எழுந்த காந்தலும் நெடுமூச்சும் முஸ்தபாவின் நுதலில் பிரதிபலித்தன.

முகத்தை இரு கைகளிலும் பொதிந்து கொண்டு விம்மும் மகள்மீது ஏக்கம் தோய்ந்த விழிகளைச் செலுத்திவிட்டு, "பஷீரா! இத்தனை ஆண்டுகள் அல்லற்பட்டது போதும். எஞ்சி நிற்கும் உன் வாழ்வு குட்டிச்சுவராய்ப் போவதற்கு உன்னைப் பெற்றவனின் நைந்துபோன நெஞ்சம் இனி இடங்கொடுக்கப் போவதில்லை. அல்லாஹ்த் தாலாவின் விருப்பம் அதுவாக இருந்தால் இனி நடக்க வேண்டிய காரியத்தில் நேரிடையாகக் குதித்துவிட இந்த முதியவன் தீர்மானித்து விட்டான்."



'அப்பா! வெள்ளைத் துணி ஏதாவது இருந்தால் காட்டு!''

''காட்டுகிறேன். சார்... அதுவரை உங்கள் கண்ணாடியைக் கழற்றி வையுங்கள்!''

டாம்'' என்று கதறிக்கொண்டு தந்தையின் பொக்கை வாயைத் தன் கையினால் இறுக மூடிவிட்டுத் தேம்பித் தேம்பி அழலானாள் பஷீரா. அவள் கண்கள் இருண்டன. கால்கள் தொய்ந்து தள்ளாடின.

''என் நாக்கு பேசவில்லை, மகளே! இரு கூறுகளாகப் பிளந்துவிட்ட இந்தக் கிழவனின் இதயத்தின் ஓலம்தான் உன் காதில் விழ்ந்தது அம்மா!'' என்று அலறினார் முஸ்தபா. வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொண்டன.

''பஷீரா! உன்னைப் பெற்றவன் இனி பேசப் போவதை நன்றாகக் கேள். தன்னை அண்டினவளுக்குச் சம்ரக்ஷணம் புரியவோ, கடமைகளைச் செய்யவோ இயலாதவனாயிருக்கும் பிரயோசனமற்ற புருஷனிடமிருந்து 'தலாக்' வாங்கிக் கொண்டு நீ விடுதலை பெற்றுக் கொள்ள நம் சமூகம் அனுமதி அளிக்கிறது.''

முஸ்தபா உதிர்த்த அந்தப் பயங்கரச் சொற்களைக் கேட்டதும் செவிகளை இறுகப் பொத்திக் கொண்ட பஷீரா விதிர் விதிர்த்துப் போனாள். சித்தம் கலங்கியது. அறிவு குழம்பியது. எங்கும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டதைப் போன்ற பிரமை அவளுக்கு உண்டாயிற்று.

''கட்டின கணவனிடமிருந்து விவாக விமோசனம் பெற்றுக் கொள்ளும்படி பெற்றெடுத்தவராகிய நீங்களே எனக்குப் புத்திமதி சொல்கிறீர்களா, வாப்பா?'' என்றாள் பஷீரா நடுங்கும் குரலில். அவள் நெஞ்சக்கூடு படபடவென்று அடித்துக் கொண்டது விம்மலும் பொருமலும் பீறிட்டு எழுந்தன

''ஆறு வருஷங்களாய்க் காத்துக் கிடந்தாய். அந்த ஆறு வருஷங்களாகப் புகைந்த உன் உள்ளமும் அழுத உன் கண்களும் வறண்டு விட்டதம்மா. கேள், கேள்! பஷீரா, உன் விஷயம் 'தலாக்'குடன் முடிந்து விடும் என்று எண்ணி விடாதே. மிஞ்சி நிற்கும் உன் வாழ்வை மலரச் செய்யச் சகல பந்தோபஸ்துகளையும் செய்வதற்கு நான் தவறவில்லை. 'தலாக்' வாங்கின பிறகு உன்னைத் தன் துணைவியாக மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளக் கோடிக்கரைவாசி ஒருவன் முன் வந்திருக்கிறான், மகளே!''

''எனக்கு மறு விவாகமா?'' வாயை இறுகப் பொத்திக் கொண்டு மிரள மிரள விழித்தாள் பஷீரா! அவள் உதிர ஓட்டம் தடைப்பட்டது. இதயம் 'பக்பக்'கென்று ஓங்கி அடித்துக் கொண்டது. உதடுகளில் நீலம் பாரித்தது.

மறுமொழி கூறாது அவ்விடத்தை விட்டு நீங்கிய பஷீரா தத்தித் தத்தி நடந்து அடுக்களைக்குள் புகுந்தாள். புகை சூழ்ந்த அந்த அடுக்களையில் ஒரு மூலையில் நின்று கொண்டு பூனையைத் தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டு 'ஓ'வென்று அலறினாள்.

''என் அருமை பஷீரா! மனத்தைப் போட்டு அலட்டிக்காதேம்மா. இது விஷயமாகச் சாயங்கால வண்டியில் கோடிக்கரைக்குப் போகிறேன். ஞாயிறு காலையிலே திரும்பி விடுவேன்'' என்று அன்போடு கனிவுடன் கூறிவிட்டு முஸ்தபா நிலைப்படியைத் தாண்டினதுதான் தாமதம், அந்த அபலை பஷீராவின் புலம்பல் ஓலமாக மாறி வீட்டையே கிடுகிடுக்கச் செய்தது.

தீரியாபட்டணம் உலர்ந்த மீன் வியாபாரியான ம. மா. ப. பா. முஸ்தபா மரைக்காயருக்கும் அவர் செல்வியான பஷீரா பேகத்துக்குமிடையே நடந்த உரையாடலைத்தான் முன்னால் கூறினோம். எத்தனையோ பணம் புரளும் நல்ல வரன்கள் வலிய வந்தபோதும், அவற்றை யெல்லாம் முஸ்தபா உதறித் தள்ளி விட்டதற்குக் காரணமில்லாமல் இல்லை. தவிர, காலாடிகளுடன் ஊர் சுற்றித் திரியும் செல்லாத் தம்பிடிக்கும் உதவாத தம் சகோதரியின் மைந்தனுக்குத் தம் மகளைப் பலியிட அவர் மனச்சாட்சி சம்மதிக்கவில்லை. ஆனால் இளம் பிராயத்தில் அத்தை மகனிடம் இதயத்தைப் பறி கொடுத்து விட்ட பஷீரா அன்வாரியைத் தன் நாயகனாக அடையப் பிடிவாதமாக இருந்ததை முஸ்தபா புரிந்து கொள்ளத் தவறவில்லை! அன்வாரியைத் தமது மருமகனாக ஏற்றுக் கொண்டதுடன் அவன் கௌரவத்துடனும், கண்யத்துடனும், வாழ்க்கை நடத்தி நாலு வெள்ளிக் காசுகளுடன் திரும்பட்டும் என்று எண்ணி அவனை அக்கரைச் சீமைக்குக் கப்பலேற்றி விட்டார் முஸ்தபா. மலாயா போய்ச் சேர்ந்த அன்வாரி ஆறு வருஷங்கள் உருண்டோடியும் தன் மனைவிக்கோ, மாமனுக்கோ ஒரு கடிதம் எழுதவில்லை. தவிர அவனைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. இதை நினைந்து நினைந்து முஸ்தபாவும் பஷீராவும் வேதனை வெள்ளத்தில் சிக்கித் தத்தளித்தனர்.

நான்கு நாட்களும் சென்று விட்டன.

பயணத்திலிருந்து திரும்பிய தந்தையைக் கண்டதும் பஷீராவின் நாடித் துடிப்பு ஒரு

கணம் நின்று விட்டு மறுபடியும் உக்ரமாக இயங்கத் தொடங்கியது.

"போன காரியம் அந்த அல்லாவின் கருணையால் சுகமாக முடிந்தது. மகளே! இனிச் சொந்தக்காரர்களுக்கு ஆளை அனுப்பி வரவழைத்து விடுவதுதான் பாக்கி. 'தலாக்' விஷயத்தை அடுத்த 'ஜூம்மாக்'குள் பைசல் செய்து விடுவதாக உத்தேசம்." அனுப்புடன் கூறிவிட்டுத் தம் வலைத் தொப்பியைக் கழற்றி வழுக்கைத் தலையைப் பலமாகத் தடவிக் கொண்டார் முஸ்தபா.

"வாப்பா, நீங்க புறப்பட்டுப் போன மறு நாளே இந்தக் கடிதாசி வந்து கிடந்தது" என்று பரிவுடன் சொல்லித் தபால் கவரைத் தந்தையிடம் நீட்டினாள் பஷீரா.

கடிதத்தைப் பிரித்து அதன் மேல் பார்வையை ஓட விட்டதும் முஸ்தபாவின் முகம் கன்றி விட்டது. உதடுகளில் வேதனையும் வெறுப்பும் விளைந்தன.

"ஹா...! அந்தச் சைத்தான் பயலா எழுதி விட்டான்?" என்று அலறினார் முஸ்தபா. அவர் உடல் காந்தியது. உள்ளம் சாம்பியது. நெஞ்சம் தகித்தது.

"பஷீரா! கடல் கடந்து வந்த கடிதம், அம்மா இது! படிக்கிறேன். கேள்" என்று ஏளனமாகச் சிரித்து விட்டு விழிகளைச் சுழற்றிச் சுழற்றி மேல் மூச்சு வாங்க மடலைப் படிக்கலானார். கடிதம் பின்வருமாறு:

"அன்பு நிறைந்த அருமைத் துணைவிக்கு அன்வாரி எழுதிக் கொண்டது:

எந்தப் பாவி உன்னை இத்தனை வருஷங்களாக அடியோடு மறந்து 'அபேஸாகி' விட்டானோ, அந்தப் பாதகன்தான் இந்தக் கடிதத்தைக் கைகூசாது எழுதுகிறான். அக்கரைக்கு வந்தடைந்த நான் உன்னை நினைவிலிருந்து அழித்து விட்டு நாட்களை இங்கேயே கழிக்கும்படி பாழும் என் விதி தண்டித்து விட்டது. ஆனால் என் இதயத்தில் குடியேறிய என் 'பீவி'யை நான் கைவிட்டு விடவில்லை என்பதை ஞாபகம் வை.

சென்றதை மறந்து விடு. இன்னும் ஆறு மாத காலத்துக்குள் அந்த ரஜப் மாதம் வருவதற்குள் நாகப்பட்டினத்தின் கடற்கரையை இந்தப் 'பத்மாஷின்' காலடிகள் மிதித்துவிடப் போகின்றன. கவலைப்படாதே

உன் அன்புள்ள கணவன்.

அன்வாரி"

கடிதத்தை ஒருவிதமாகப் படித்து முடித்து "கடகட" வென்று பூதாகாரமாகச் சிரித்தார் முஸ்தபா. விரல்களில் சிக்கித் தத்தளித்த அந்த விதத்தை அவர் உள்ளங்கை அப்படியே கசக்கிப் பிழிந்து விட்டது.

"வருகிறானும் அந்த ஆற்காடு நவாப்!" என்று விவரிக்க இயலாத வெறுப்புடன் சொல்லிப் பற்களை நறநறவென்று கடித்தார் முஸ்தபா. நெடுமூச்சைத் துளிக்கூட லட்சியம் செய்யாமல் தொடர்ந்தார்: "அம்மா, பஷீரா! அந்த நயவஞ்சகனின் கடிதத்தைத் தீண்டினதே மகாபாவம். இதை அப்படியே அடுப்பில் போய்ச் செருகிப் பொசுக்கிவிடு."

சினத்துடன் கர்ஜித்த முஸ்தபாவின் நெஞ்சில் விருத்த சுரம் ஆவியாகி விட்டது. ரத்த நாளங்கள் தெறித்து விடும் போல் குருதி ஓட்டம் பீறிட்டு எழுந்தது.

"வாப்பா, கொஞ்சம் ஆற அமர யோசியுங்கள்." பஷீரா கெஞ்சினாள். அவள் இமைகள் நீராடின.

"வாப்பா, ஆறு வருஷங்கள் காத்திருந்த நாம் அவர் கேட்டுக் கொண்டபடி இன்னும் ஆறு மாதங்கள் பொறுத்துக் கொள்ளக் கூடாதா?" தந்தையின் கரங்களைப் பிடித்துக் கொண்டு மன்றாடினாள் மதி மருண்ட மகள். உள்ளம் சாம்பியது.



"அப்பன் பேச்சுக்கு எதிராக நிற்காதே!" ஆவேசத்துடன் கறுவினார் முஸ்தபா. சொற்களில் ஆத்திரம் சுடர் விட்டது.

"மகளின் வேண்டுகோளையும் நீங்கள் தட்டக் கூடாது, வாப்பா!"

பஷீரா பேசிய தோரணையையும், வீசிய பார்வையையும், நின்ற கோலத்தையும் கண்டதும் முஸ்தபாவின் நரம்புகளில் முறுக்கேறி நின்ற வீறாப்பும், ஆவேசமும் தளர்ந்து போய்விட்டன.

"சரி! உன் பிடிவாதம் அப்படியானால் எனக்கென்ன வந்தது! வாழப் போகிறவள் நீ. உன் 'நஸீப்' ஆச்சு, நீயும் ஆச்சு" என்று உணர்ச்சியுடன் கூறிக் கொண்டே தாழங்குடையை எடுத்துக் கொண்டு நிலைப்படியைத் தாண்டினார் முஸ்தபா.

மாதங்கள் ஒவ்வொன்றும் ஓசைப்படாது சலாம் வைத்து விட்டு விடைபெற்றுக் கொண்டன. பஷீராவின் மணவாளன் தாய்நாட்டின் மண்ணை மிதித்து விட்டான் என்ற சுபச் செய்தி மட்டும் 'நகரா' முழக்கவில்லை!

விடியற்காலையில் எழுந்து விடும் பஷீரா முதற் காரியமாக ஊதுவத்திகளைக் கொளுத்தி இல்லமெங்கும் நறுமணத்தைப் பரப்பிவிட்டு, 'நமாஸை' முடித்துக் கொண்டு இருக்குரானை ஓதுவதில் நாட்களைக் கழிக்கலானாள். தன் மீது கருணை காட்டும்படி ஆண்டவனிடம் மன்றாடிப் பிரார்த்தித்து அவள் நாக்கும் சோர்ந்து போயிற்று.

ஆறாவது மாதமும் புலர்ந்தது.

முதல் தேதியன்றே பொழுது சாயும் நேரத்தில் மாட்டு வண்டி ஒன்று முஸ்தபாவின் இல்லத்துக்கு முன்னால் வந்து நின்றது.

பெட்டி படுக்கையுடன் கீழே இறங்கிய அன்வாரியைக் கண்டதும் முஸ்தபாவின் நெஞ்சு படீரென்றது. மூச்சு தடைப்பட்டது. மிதியடிக் கட்டைகள் கால்களை விட்டுத் தானாக நழுவி விட்டன. மருமகனை எதிர் கொண்டு அழைப்பதற்கு அவர் கால்கள் மறுத்து விட்டன.

வாசற்படிகளில் தயங்கித் தயங்கி ஏறிய அன்வாரி தன் மாமனாரின் சிரடிகளை வணங்கி விட்டுச் சிரம் கவிழ்த்து நின்றான்.

இப்போதாவது உன் 'பீவி'யின் நினைவு வந்ததே! அந்த அபலை அனுபவித்த மன வேதனைக்கு உன்னைப் படைத்த ஆண்டவன் தான் நேர்சாட்சி'' என்றார் முஸ்தபா மனம் ஒடிந்து கரகரத்த குரலில்.

'இந்தக் கேடு கெட்டவனை மன்னித்து விடுங்கள்'' என்று மாமனாரின் கரங்களைப் பிடித்து நீர் நிறைந்த தன் கண்களில் ஒற்றிக் கொண்டான் அன்வாரி.

நீ எழுதின அந்தக் கடிதம் மாத்திரம் அவளுக்கு வந்திருக்கா விட்டால் விவகாரமே வேறு விதமாகப் போயிருக்கும்!'' தாடியை வருடினார்' முஸ்தபா. அவர் அதரங்கள் துடித்தன.

கடிதமா?'' அன்வாரி திகைத்து விட்டான். கால்கள் நிலைதடுமாறின.

''அதைப் பற்றிச் சாவதானமாகப் பிறகு பேசிக் கொள்ளலாம். உன்னை எண்ணி எண்ணித் துடிக்கும் அந்தப் பேதையைப் போய்க் கவனி'' என்று சொல்லி வாசற் கதவை நன்றாகத் திறந்துவிட்டார் முஸ்தபா.

சரேலென்று வீட்டுக்குள் பாய்ந்தான் அவர் மருமகன் அன்வாரி.

பரட்டைத் தலையுடனும், வெறிச்சோடிய வதனத்துடனும் பஞ்சடைந்த விழிகளுடனும், அழுக்கேறிய உடைகளுடனும் தன் முன் வந்து நின்ற கணவனைக் கண்டதும் பஷீரா மலைத்துப் போய் விட்டாள். அந்தையலின் கண்கள் தடாகங்களாயின. இதயம் சஞ்சலித்தது.

''வந்துட்டீங்களா நீங்க! இருண்ட இந்தத் திக்கற்றவளின் கண்களுக்கு வெளிச்சத்தைக் கொடுத்திட்டீங்களே!'' என்று உணர்ச்சி தாளாது சொல்லிக் கொண்டே மணவாளனின் அடிகளைப் பணிவுடன் தொட்டு வணங்கினாள் பஷீரா.



'ஒரு மாதம் குடியிருந்த பிறகு நிமிசென்று ஏன் அந்த வீட்டைக் காலி பண்ணிவிட்டாய்?''

''நேற்றுத்தான் தெரிந்தது, அங்கே குளிக்க வசதியில்லை என்று!''

'என் அன்பே! இந்தப் பாதகனின் பாதங்களையா தொடுகிறாய்? இந்தக் கயவனின் நிழல்கூட உன் மீது விழவேண்டாம்.'' நெற்றியில் ஓங்கி அடித்துக் கொண்டு ஒதுங்கி நின்றான் அன்வாரி.

''என்னைப் படைத்த அந்த இறைவனிடம் இத்தனை வருஷங்களாக இந்தப் பேதை வடித்த கண்ணீரும், எழுப்பிய புலம்பலும் சகல லோகங்களுக்கும் ரக்ஷகனான அவனுடைய கதவை மோதிவிட்டன போலும்! என் இதயத்திலிருந்து கிளம்பிய பிரார்த்தனை அந்த அருளாளனின் காதுகளை எட்டி விட்டது.'' மளமளவென்று குடம் குடமாக விழிநீரைப் பொழிந்தாள் பஷீரா.

அன்வாரி அயர்ந்து விட்டான்.

''பஷீரா.. நான் வஞ்சகனுமல்ல, கல் நெஞ்சனுமல்ல. என் பாழும் விதி பெரிய சதி செய்து விட்டது அதைமட்டும் நீ அறிந்தால் இந்தப் பாவியின் முகத்தில்கூட நீ விழிக்க மாட்டாய்!'' என்று கதறினான் அன்வாரி மேனி குன்றிப் போயிற்று.

''நீங்கள் வந்ததே போதும். வேறு ஒரு சேதியும் எனக்குத் தேவையில்லை'' என்று பிரலாபித்தாள் பஷீரா அங்கங்கள் சிலிர்த்தன.

''என் இல்லறத் துணைவி கேட்காவிட்டால் வேறு யாரிடம் போய்ச் சொல்லி என் மனச் சுமையைத் தீர்ப்பேன் கேள், பஷீரா! நேர்மையுடனும் நாணயத்துடனும் வயிறு வளர்க்க அக்கரைக்குச் சென்ற நான் நெறிகெட்ட வழியில் புத்தியைப் பலிகொடுத்து ஆறுவருஷ காலம் சிறையிலே வாசம்செய்து விட்டேன்.'' அதைக் கூறும்பொழுது சொற்கள் உருக்குலைந்து வெளிவந்தன. உடல் பதறியது.

''ஹா நீங்களா?''

ஸ்தம்பித்து விட்டாள் பஷீரா. குரலில் பீதியும் நடுக்கமும் கலந்தன.

லட்சிய பூர்த்தியின் வாயிலிலே

கடந்த அக்டோபரில் ஜாம்ஷெட்பூரிலே ரூ 70 மில்லியன் செலவில் புதிய ப்ளாஸ்ட் ப்வர்னெஸை இயங்கச் செய்தது. உற்பத்திச் சக்தியை ஆண்டொன்றுக்கு இரு மில்லியன் டன்னுக்கவென்று 1955 டிஸம்பரில் டாடா ஸ்டீல் தொடங்கிய விரிவான திட்ட பூர்த்தியின் ஆரம்பமாகும்.

உலகிலுள்ள மிகப் பெரியவைகளில் ஒன்றான இப்புதிய ப்ளாஸ்ட் ப்வர்னெஸ், நாளொன்றுக்கு 1,650 டன் இரும்பு உற்பத்தி செய்யும். இதற்கு முன்னர், ஏழு ஓபன் ஹெர்த் ப்வர்னெஸ்களுள்ள மூன்றாவது ஸ்டீல் மெல்டிங் ஷாப் பூர்த்தியாக்கப் பட்டது. ஆண்டொன்றுக்கு இது மட்டுமே 1.3 மில்லியன் டன் ஸ்டீல் இங்காட்ஸ் உற்பத்தி செய்யும். தவிர, ரூ 100 மில்லியன் செலவில் இரு மில்லியன் டன் பிரைமரி ரோலிங் சக்தி கொண்ட புதிய ப்ளூமிங் மில் இப்பொழுது இயங்கி வருகிறது.

தாதுப் பொருள் சேகரிப்பதிலிருந்து உருக்கு ரோலி-; தயாரிப்பது வரையிலுமுள்ள ஒவ்வொரு நிலையின் இயக்கமும் பூரணமாகி, விரிவான திட்டம் 1958 இறுதியில் பூர்த்தி பெறும். 1955-60 இல் ஐந்தாண்டுகளில் விரிவான திட்டத்திற்கும், வருடா வருடம் இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் புதிய இயந்திரங்கள் அமைப்பதற்குமாக டாடா ஸ்டீலின் முதலீடு ரூ 1,330 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது, தனியார் தொழில் ஸ்தாபனங்களின் மொத்த முதலீட்டின் ஐந்தில் ஒரு பங்கிற்கு அதிகமானது.

டாடா ஸ்டீல்

இரு மில்லியன் டன் உற்பத்திக்கு



The Tata Iron and Steel Company Limited

''என் விதி...என் விதி அப்படி நாட்களைப் பாழாக்கிவிட, நான் எந்த முகத்துடன் யாருக்குக் கடிதம் எழுத முடியும்? போன மாதம் தான் நான் எண்ணி வந்த கம்பிகள் உடைந்தன. மானத்தையும், மரியாதையையும் அக்கரையிலே உதறி விட்டு அந்த வாரக் கப்பலிலே கிளம்பி விட்டேன்.'' இல்வக் கிழத்தியின் தோள்மீது சாய்ந்து கொண்டு கண்ணீர் உகுத்தான் அன்வாரி.

''இனி நான் மன்றாடிக் கேட்கப் போவதை நீங்கள் மனத்தில் வைத்துக்கொள்வீர்களா?'' ஆர்வம் மிதந்த நேத்திரங்களால் கெஞ்சினாள் பாசியான்.

''பேஷாகச் சொல்.''

''என்னிடம் வெட்டவெளிச்சமாக்கிய இப்பொல்லாத சேதி யார் காதிலும் விழாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் கௌரவத்துக்குத் துளி களங்கம் வந்தாலும் இந்தப் பேதையின் நெஞ்சு வெடித்துவிடும்'' என்று பதறினாள் பஷீரா.

சம்மதுடனும் பொருமலுடனும் கிளம்பிய குடும்ப விளக்கின் துயரம் தோய்ந்த பேச்சைக் கேட்டதும் அன்வாரியின் சப்த நாடிகளும் 'கப்சிப்' என்று ஆகிவிட்டன. தொடர்ந்தாள் வாழ்க்கைப்பட்டவள்: ''ஆண்டவன் தன் அருளைப் பொழிந்து பிரிந்துபோன இரு ஜீவன்களை ஒன்று சேர்த்து விட்டான். ஆறு வருஷங்களாக உங்கள் வருகைக்குக் காத்திருந்து கடைசியில் ஏமாற்றமடைந்து உள்ளம் உடைந்துபோன இந்தப் பேதையின் தகப்பனார் ஒரு பயங்கரமான காரியத்தில் இறங்கி ஒரு காலையும் வைத்துவிட்டார். அந்த நருளான வேளையில் ஒரு பொல்லாத வேலையை என்னையுமறியாது நான் துணிச்சலுடன் செய்து விட்டேன். அதை நீங்களும் கேட்டு விட்டு உடனே மறந்துவிடுங்கள்.'' பஷீராவின் தொனியின் உக்ரம் இறங்கியது. இதயப் படபடப்பு அடங்கியது.

இதயத்தின் அடித்தளத்திலிருந்து நெடு மூச்சுடன் பேசலுற்றாள் அந்த மாதர்குல மாணிக்கம். ''அல்லும் பகலும் அல்லாவிடம் நான் செய்து வந்த பிரார்த்தனை என்றைக்காவது ஒரு நாள் பலித்தே தீரும் என்ற திடமான நம்பிக்கையுடன் நாட்களைப் போக்கி வந்த நான் 'இன்னும் ஆறு மாதங்களுக்குள் நான் வந்து சேர்வேன்' என்று நீங்கள் எழுதியது போல் ஒரு கடிதத்தை நானே எழுதி வாப்பாவிடம் காட்டி அவர் முன்னால் கபட நாடகம் ஆடி விட்டேன். அந்தப் பாவக் காரியத்துக்கு அல்லாஹுத்தாலா இந்தப் பாவியை மன்னித்து விட்டதோடு அல்லாமல் உங்களையும் கொண்டு வந்து இந்த ஏழையுடன் சேர்த்துவிட்டான்.''

மிக்க உணர்ச்சியுடன் கூறித் தன் கொழுநனின் அகன்ற மார்பின் மீது சாய்ந்து கொண்டு பொலபொலவென்று கண்ணீர் சிந்தினாள் பஷீரா.

தமிழ்கூறும் நல்லுலகம்

நாகபுரியில் தென்னிந்திய பஜனை சமாஜத்தில் இவ்வருஷம் வழக்கம் போல் ஸ்ரீ ஸ்கந்தஷஷ்டி மஹோத்ஸவம் நவம்பர் 11லிருந்து 17ம் தேதி வரை வெகு விமரிசையாக நடந்தது.

ஸ்ரீ கே. சபாரத்னம் எம். ஏ., பி. டி., எல். எம். பி. அவர்கள் ஸ்காந்த புராணத் தத்துவங்களை ஆறு அழகிய உபன்யாஸங்களில் எளிய நடையிலும் தத்துவம் நிரம்பவும் எடுத்துரைத்தார். இந்த உபன்யாஸத்தைப் பம்பாய் கவி பிச்சமணி அய்யர் அவர்கள் துவக்கி வைத்தார். சபாரத்னம் அவர்களுக்குச் சமாஜத்தின் சார்பில் ஓர் தங்கப் பதக்கம் அளிக்கப் பட்டது. ஷஷ்டியன்றைய தினம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடமிருந்து ஆசீர்வாதங்களோடு மங்களாக்ஷதையும் வரப் பெற்று மஹாஜனங்களுக்கு விநியோகிக்கப் பட்டது.

★

பம்பாய் கோவிந்தநகர் தமிழர் சங்கத்தின் சார்பாக 23-11-58 ஞாயிற்றுக்கிழமை வ. உ. சி. தினம் சங்கத்தலைவர் திரு எஸ். அந்தோணிசாமி தலைமையில் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் வ. உ. சி. எவ்வாறு சுதந்திரப் போராட்டத்தில் பல இன்னல்களுக்காளாகினார் என்பதைப்பற்றித் திருவாளர்கள் தே. திருநாவுக்கரசு, கு. தனகோடி, ஏ. வி. ராமன் முதலியோர் மிக அழகாகப் பேசினார்கள். சங்கச் செயலாளர் திரு எஸ். ஆசீர்வாதம் நன்றியுரை கூறக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

'சுதந்திரப் போராட்டத்தில் பல இன்னல்களுக்காளாகி உயிர்நீத்த கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. க்குத் தகுந்த ஞாபகார்த்தச் சின்னம் அமைக்க வேண்டும்.''

★

நாகபுரி பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் ஆதரவில் பந்தநல்லூர் ஸ்ரீ சொக்கலிங்கம் பிள்ளையின் பிரதம சிஷ்யையான குமாரி எம் ஆர். கீதா இனிய நடன விருந்தளித்தார். சுமார் மூன்று மணிநேர நிகழ்ச்சியில் சிறுமி கீதா மிகத் திறமையாக அபிநயம் பிடித்து நாகபுரி ரசிக மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றார். ஸ்ரீமதி சங்கரி பதம் பாடினார்.

இச்சபையினர் கடந்த வாரத்தில் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தினத்தை விமரிசையாகக் கொண்டாடினர். இங்குள்ள பல இளம் பாடகர்கள் இவ்விழாவில் பங்கெடுத்துக் கொண்டு சிறப்பித்தனர். கடந்த வாரத்தில் நடந்த மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம், தமிழன்பர்களால் நடத்தப்பெற்ற 'சண்டி ஹோமம்' ஆகும். இந்த நற்காரியத்தைப் புதுக்கோட்டை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் சிரிய முறையில் நடத்தி வைத்தார்.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.



உங்கள்
வேலையை
இலகுவா
க்குவதற்
கென்றே
தயாரிக்
கபபட்டுள்ள
அற்புத
சோப்பவுடர்



வெட்டவெளிச்சமான உண்மை...

ரின்ஸோ வெளுப்பது அதிவெண்மை

ரின்ஸோ - வெண்மை யென்றால் உண்மையான வெண்மை! சக்தி வாய்ந்த ரின்ஸோவின் நுரை, நூலிழைகளில் மறைந்துள்ள அழுக்குகளையும் அறவே அகற்றிவிடுகிறது. அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டாம். வெள்ளைத் துணிகள் வெள்ளைவெளேரென்றும், வர்ணத் துணிகள் அதிகப் பிரகாசமாகவும் ஆகிவிடும். புடவைகள் முதல் கைக்குட்டை வரை, குடும்பத்தின் சகல துணிகளுக்கும் உகந்தது ரின்ஸோ!

R.21-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

Registered No. M. 4393
Registered as a Newspaper in Ceylon